உ

சிவமயம்

# ஸ்ரீ வடிவாம்பிகா ஸமேத முன்னநாதஸ்வாமி தேவஸ்தானம்



## மஹா கும்பாபிஷேக மலர்


ஸ்ரீ முன்னேஸ்வர தேவஸ்தானம்,
முன்னேஸ்வரம்,
சிலாபம்
2015

சிவமயம்

# ஸ்ரீ முன்னேஸ்வரம்

## ஸ்ரீ வடிவாம்பிகா ஸமேத முன்னநாதஸ்வாமி தேவஸ்தான

# மஹா கும்பாபிஷேக மலர்



ஸ்ரீ வடிவாம்பிகா தேவிக்கு ஸமர்ப்பணம்

விலை ரூ. 5/-

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | ஸ்ரீ முன்னேஸ்வரம் ஸ்ரீ வடிவாம்பிகா ஸமேத முன்னநாதஸ்வாமி தேவஸ்தான மஹா கும்பாபிஷேக மலர் |
| முதற் குறிப்பு | : | 1963.07.01 |
| மறு பதிப்பு | : | 2015.02.17 |
| பதிப்பாசிரியர் | : | பிரம்மஸ்ரீ ச.பத்மநாபன் |
| வெளியீடு | : | ஸ்ரீ முன்னேஸ்வரம் தேவஸ்தானம், முன்னேஸ்வரம், சிலாபம். |
| அச்சுப்பதிப்பு | : | மதி கலர்ஸ் பிறிண்டர்ஸ், நல்லூர். |
| பிரதிகள் | : | 1000 |
| பக்கம் | : | 1–107 |
| ISBN | : | 978-955-0877-40-9 |

ஸ்ரீ வடிவாம்பிகா சமேத முன்னநாதசுவாமி தேவஸ்தானத்தின் மஹா கும்பாபிஷேக மலர் என வெளிவந்த இந்நூல் 1963ல் வெளிவந்தது. இம்மலரின் பிரதிகள் கிடைத்தற்கு அரியதாக அமைந்ததன் காரணமாக மீண்டும் நவீன கணணி வசதிகளுடன் புதிய வடிவமாக வெளிவருகின்றது. 52 வருடங்களின் பின் வெளிவரும் இந்நூல் அனைவருக்கும் பயனுடையதாக அமையும்.

ஸ்ரீ வடிவாம்பிகா சமேத ஸ்ரீ முன்னநாத சுவாமியின் திருவடிகளில் இந்நூலை சமர்ப்பிக்கின்றோம்.

உ
சிவமயம்

# முகவுரை

எங்கள் சைவசமயம் மற்றைய சமயங்களெல்லாவற்றுள்ளும் முதலுற்பத்தியானதும் காலவரையறுத்துக் கூற முடியாத பழமையுள்ளதுஞ் சிவபெருமானாலேயே தேவர்களுக்கும் மேலோர்களுக்கும் அடியார்களுக்கும் ஞானிகளுக்கும் எடுத்தோதப் பெற்றதுமாகும்.

சிவபெருமான் எழுந்தருளி அடியார்களுக்கும் மற்றும் சராசரங்களுக்கும் வேண்டுவோர் வேண்டும் வண்ணம் அனுக்கிரகிக்கும் ஸ்தலங்கள் உலகில் அநேகம் உள்ளன. காலா காலங்களில் அழிந்து போனவை பல.

நமது பாரதத்திலும் இலங்கையிலும் பல தேவாலயங்கள் சிதைந்து போயின. அநேகம் சிறப்புடன் விளங்குகின்றன. பாடல் பெற்ற தலங்கள் பலவுள.

இவ்விலங்கா தீபத்தில் "அலகேஸ்வரம்" என்னும் நாமதேயத்தோடு விளங்குவதாக ஸ்ரீ சிவமகாபுராணம் ஸனத்குமாரசம்மிதையில் எடுத்தோதப் பெற்றதும் ... பீடங்களுள் "ஸ்ரீ லங்கா பீட" மென வியந்து கூறப்படுவதும் இந்த ஸ்ரீ முன்னேஸ்வரமென அநேக ஆராய்ச்சியாளரும் சமயநூலுணர்ந்த பெரியவர்களும் (Saint Nihol Singh) செயின் நிஹால் சிங் என்னும் ஞானியும் கூறியுள்ளார்.

ஸ்ரீ காசி க்ஷேத்திரத்தில் விஷ்ணுவே முதல் கடவுளெனக் கூறிய வேதவியாஸருக்கு நந்திதேவர் உயர்த்திய கையை நிலைக்கச் செய்தார் எனவும் ஸ்ரீ முன்னநாதஸ்வாமியை வழிபாடு செய்து சாபத்தை நீக்கிக்கொள்ளும்படி அனுக்கிரகித்ததாகவும் ஸ்ரீ ராமஸ்வாமி ராவண சம்மாரஞ் செய்த தோஷ நீக்கத்துக்காக இங்கே பூஜித்து அருள் பெற்று திருக்கேதீஸ்வரம், கோணேஸ்வரம், மாஞவாரி, ஸ்ரீ ராமேஸ்வரம் முதலிய க்ஷேத்திரங்களில் சிவப்பிரதிஷ்டைகள் செய்து சாபம் நீங்கியதாகவும் இந்த ஸ்தல புரர்ணங் கூறுகின்றது.

சந்திரகுலத்து அர்ச்சுனன் மனைவி அல்லிமகாராணி சிலாபத்தில் முத்துக் குளிக்குங் காலங்களில் ஸ்ரீ மதுரை மீனாக்ஷியம்பாளுக்கும் ஸ்ரீ வடிவாம்பிகைக்கும் தனக்குமாக மூன்று பாகங்களாகப் பிரித்துக் கொடுத்ததாக பல கர்ண பரம்பரைக் கதைகளுமுண்டு. இதை நிரூபிக்க முத்துப்பந்தர், முத்துக்கொட்டு முதலிய ஊர்ப் பெயர்களாலறியலாம்.

கலிங்கதேச விஜயகுமாரன் தம்பதேனியா என்ற இடத்தையடைந்து சிவாலயத்தைத் தரிசித்தும் பல சிவாலயங்களை பிரதிஷ்டை செய்தும் அரசாக்ஷி செய்தாரென (B.C. 4?3 முதல் B.C. 445க்குள் அமெரிக்கன் மிஷன் இலங்கைச் சரித்திரம்) கூறுகிறது. மஹாவம்ஸம் (By Geiger and RAS Page 118 & 119, Northern Wall of this Shrine) கீழே காணும் விபரங்களைக் கூறுகின்றது.

முதலாவது ஸ்ரீ பராக்கிரமபாகு மகாராஜாவும் (1160 AD) ஆறாவது ஸ்ரீ பராக்ரமபாகு சக்கரவர்த்தியும் (1448 AD) இந்த ஆலய நம்பிமார்களை (குருமார்களை) அழைத்து யோகக்ஷேமங்களை அறிந்து ஐந்து யோசனை விசாலமுள்ள 64 கிராமங்களைச் சர்வமான்யமாக கொடுத்திருக்கிறார்கள். விபரங்களை கோடியர்ச்சனை மலரில் கூறியுள்ளோம். கலியுகம் 512ல் குளக்கோட்டு மகாராஜாவும் இக்கோவிலைப் புதுப்பித்து பல நிலங்களைக் கொடுத்துள்ளார். (See Simon Casi Chetty of Ceylon)

இந்தியாவிலுள்ள பல க்ஷேத்திரங்களை ஐதர் அலி அழித்து வந்த விபரங்களை யாத்திரீகர்கள் மூலமறிந்த க்ஷேத்திர வாசிகள், அவர்கள் இங்கு வந்து சேதஞ்செய்வார்களென எண்ணி சில பிம்பங்களை வடதிசையிலுள்ள "மடு" என்னும் தடாகத்தில் மறைத்து வைத்திருந்தார்கள். சிலகாலஞ் சென்றபின் இந்த விக்கிரகங்களை வலைஞர்கள் எடுத்துக் கண்டி கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்க மகாராஜாவிடம் கொடுத்ததாகவும் இதைக் கேள்வியுற்ற குருமார் கண்டி அரசனிடம் போய்க்கேட்டு வாங்கி வரும் வழிகளில் தங்குமிடங்களை எல்லாம் இந்த ஆலயத்துக்கே சேரும்படி செப்புப்பட்டயங்கள் எழுதிக்கொடுத்ததாகவும் கர்ண பரம்பரைக் கதைகளுண்டு.

கலிகால ஸர்வக்ஞ பண்டித ஸ்ரீ பராக்ரமபாகு தனது குமாரன் ஷண்பக குமாரனுக்கு மின்னலால் வந்த பைத்தியத்தை யாகஞ்செய்து நிவர்த்தியாக்கி "யாகம்பற்று" எனப்பல ஊர்களைக் கொடுத்து இருக்கிறார்.

1578ல் (See Ceylon Littorel by Sir Paul Peiris) பறங்கியர்களாற் சேதப்படுத்திய இந்தக் கோவிலை 1675 A.D. கண்டி ஸ்ரீ ராஜசிங்க மகாராஜா புதுப்பித்ததுமல்லாமல் பல நிலங்களையும் சாஸனஞ் செய்து இருக்கிறார்.

1875 A.D. கொழும்பு வாஸரும் ஆரிய திராவிட சிங்கள, தெலுங்கு ஆகிய பாஷை களில் பாண்டித்தியமுள்ளவரும் ஜோதிஷ சிற்ப சாஸ்திரப் பேரறிஞரும் குருசிகாமணியு மாகிய பிரம்ஹஸ்ரீ நா. குமாரசாமிக்குருக்கள் அவர்களால் சிற்ப சாஸ்திரத்தில் தேர்ந்த வரும் வேதாந்தப் பேரறிஞரும் ஆகிய இராமநாதபுரம் ஸ்ரீ தெண்டபாணி ஆசாரியார் குமாரன் ஸ்ரீ முத்துருக்காசாரி அவர்களை அழைத்து வந்து திருப்பணியை முன்போல் நிறை வேற்றி பிரதிஷ்டை செய்து நித்திய நைமித்தியங்களைச் சிறப்புற நடாத்தி வந்தார். (தோற்றம் 1816, மறைவு 1909)

அவரின் பௌத்திரனும் எனது மாமனாரும் வேதாகம சிற்ப சாஸ்திரங்களில் பிரசித்த மானவரும் அநேக ஆலயங்களின் பிரதிஷ்டாசார்யரும் ஆகிய பிரம்ஹஸ்ரீ முத்துக்குமார சாமிக் குருக்கள் சோமாஸ்கந்தக் குருக்கள் தேவாலயத்தைச் சிறப்பாக நடத்தியும் விசேஷமாக நவராத்ரி பூஜைகளையும் நடத்தி 1940ல் சிவலோகப் பிராப்தியானார்.

அக்காலம் முதலாகத் தேவஸ்தான காரியங்களிலீடுபட்டு 63 நாயன்மார்கள் பிரதிஷ் டையும் ஸ்ரீ மகாவிஷ்ணு பிரதிஷ்டையும் ஸ்ரீ மேருயந்திரப் பிரதிஷ்டையும் 1948 முதல் (வால்வெள்ளி தோஷம் நீங்க) லக்ஷார்ச்சனை ஸ்ரீ சக்ரபூஜையும் ஆரம்பஞ் செய்து நடந்து வருகிறது.

1962-9-16 திகதி பாலஸ்தாபனஞ் செய்து, மூன்று தள விமானத்தையும் ஸ்ரீ வடிவாம் பிகையின் விமானத்தையும் மற்றும் பரிவாரமூர்த்தியாலயங்களையும் முன்போல் திருப்பணி செய்து தரும்படி ஸ்ரீ நா. தங்கவேல் ஸ்தபதியை அழைத்து வேலைகள் நடந்து வருகின்றன. இந்த ஸ்தபதியாருக்கும் உதவியாக உள்ள ஸ்ரீ வீ. நாகலிங்க ஸ்தபதியாருக்கும் மற்றும் உதவியாளருக்கும் ஸ்ரீ வடிவாம்பிகை அருளுண்டாவதாக.

இப்பெருந் திருப்பணிக்கு பொருளுதவிய அன்பர்களுக்கும் மிகுந்த ஊக்கத்தோடு சலியாது பொருள் திரட்டிய திருப்பணிச்சபையாருக்கும் திரவியமுபகரித்த பல சமயத் தொண்டர்களுக்கும் அடிக்கடி வந்து ஊக்கமளித்துத் தைரியங்கூறிய ஸ்ரீ ம. ஸ்ரீகாந்தா அவர்களுக்கும் ஸ்ரீ வடிவாம்பிகா தேவியின் கடாக்ஷமுண்டாகப் பிரார்த்திக்கிறோம்.

1962-2-5 திகதி வரை எட்டுக்கிரகங்களும் மகரராசியில் கூடிவரும் தோஷநீக்கத்தின் பொருட்டு 108 தினங்களாக கோடி அர்ச்சனை வழிபாடுகள் ஸ்ரீ வடிவாம்பிகை கிருபை யாலும் அடியார்கள் தூண்டுதலாலும் இனிது நிறைவேறியது.

கோடி அர்ச்சனை மலரில் "சைவசமயம் ஆலயதரிசன விதி, செய்யத்தகாத குற்றங்கள், ஸ்ரீ முன்னேஸ்வர மான்மியம்" ஆகிய விஷயங்களை சிங்கள பாஷையில் மொழிபெயர்த்துதவி அச்சிடத்தந்த ஸ்ரீ விஸ்வநாத் வஜ்ரநாத் அவர்களுக்கு சகல பாக்கியங்களுமுண்டாவதாக.

எங்கள் தகப்பனாரும் ஆரிய திராவிட பாஷைகளில் வித்துவானும் வைத்ய ஜோதிஷப் பெரியாரும் வட்டுக்கோட்டை நாடகப் புலவரெனப் பிரசித்தி பெற்ற ஸ்ரீ இராமஸ்வாமி ஐயர் நாகேசையர் அவர்கள் புத்திரரும் ஆகிய பிரம்ஹஸ்ரீ சிவசுப்ரமண்ய சிவாசார்யர் அவர்கள் இயற்றிய பல புராணங்களில் ஒன்றாகிய இலங்காமகாத்மியத்தில் (12000 கவி) கூறியுள்ள ஸ்ரீ முன்னேஸ்வரப்படலம் என்னும் பகுதியையுஞ் சேர்த்துள்ளோம்.

தமிழ் தெரியாத சிவநேசச் செல்வர்களுக்கு ஸ்ரீ முன்னேஸ்வர மான்மியத்தை ஆங்கில பாஷையில் மொழிபெயர்த்துதவிய ஸ்ரீமான் V. சிவராஜசிங்கம் B.A. (Hons.) அவர்களுக்கும் ஸ்ரீ வடிவாம்பிகையின் அருளுண்டாவதாக.

மேலும் இந்த க்ஷேத்திரத்தில் இத்துடன் இருக்கும் கோபுரப்படம்போல் கோபுரமும் மணிக்கூண்டு ஆலயமும் அமைக்கவேண்டியிருப்பதால் அன்பர்கள் ஊக்கமளிப்பார்கள் என நம்புகிறோம். (சுமார் ஆறு அந்தர் நிறையுள்ள மணியொன்று வேலை செய்வித்து கோவிலிலே இருக்கிறது.) இதற்கு மணிக்கூண்டு ஆலயம் ஒன்று கட்டி அதில் இந்த மணியை ஏற்றி வைக்கவேண்டிய திருப்பணியும் நிறைவேற வேண்டியிருக்கின்றது. அம்பிகை கிருபையாலும் அன்பர்களின் ஆதரவாலுங் கூடிய சீக்கிரம் நிறைவேறப் பிரார்த்திக்கிறோம்.

திருக்குளத் திருப்பணிக்கு வேண்டிய சகல சாமான்களும் ஆயத்தமாக இருக்கின்றன. பக்கத்திலுள்ள பெரியகுளத்தில் தொடர்ந்து தண்ணீர் நிறைந்திருப்பதால் வேலைகளைப் பூர்த்தி செய்யமுடியவில்லை.

அம்பிகை ஆலய புனருத்தாரண கும்பாபிஷேகம் நிறைவேறியபின் இத்திருக்குளத் திருப்பணி நிறைவேற வேண்டுமென அம்பிகையின் கருணைபோலும்.

இக்கும்பாபிஷேக மலரைச் சிறப்புற அச்சிட்டு வெளியிட உதவிய அரசன் அச்சகத் தார்க்கு அவளருள் உரித்தாகுக.

கொழும்பு நூதனசாலையில் (Museum) அநேக தீபங்கள், விளக்குகள் பூஜைத்தள பாடங்கள் முதலியன இருப்பதைப் பார்த்து இந்த க்ஷேத்திர பழமையை நன்குணரலாம்.

சுபம்

இங்ஙனம்

ஸ்ரீ முன்னேஸ்வர தேவஸ்தான கார்ய கலாமந்திரம்,
சோபகிருது ஆனி 17,
1-7-63.

தேவஸ்தானத்தார்

உ
சிவமயம்

# வேதாகம சம்மேளன பிரதிஷ்டா கிரியா விளக்கம்

கொழும்பு ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரசுவாமி கோவில் சிவாசார்யரும்
ஆரிய திராவிட பாஷா வல்லுனரும் ஆகிய
**மாதகல் பிரமஸ்ரீ ச. இரகுநாதக்குருக்கள் அவர்கள் எழுதியது.**

இவ்வுலகத்தில் சகல ஆன்மாக்களும் பிறந்து, இறந்து, உழல்வன. அவை பசுக்கள் எனப்படும்.

அவர்கள் இக, பர பலன்களை அடைவதற்காக ஆலய வழிபாடு சொல்லப்பட்டது. அவ்வாலயத்தில் இருப்பவரை நாம் பதி என்று சொல்லுகின்றோம்.

அப்பதி வழிபாட்டிற்காக பதியாக சிவபெருமான் அருளியவை வேதம் சிவாகமங்கள். அவ்வேத சிவாகமங்களில் கூறிய பிரகாரம் சிற்ப, சாஸ்த்திர இலக்கணங்களுக்கு அமைய ஆலயங்கள் நிர்மாணிக்கப்படுகின்றன.

அவ்வாலயங்கள் மூவகைப்பட்டன. சகலர், விஞ்ஞானகலர், பிரளயாகலர் ஆகியோர். தேவர், நரர் முதலானோர் வழிபடுவதற்காகவே ஆலயங்கள் உரியன. பிரம்சாரி, இல்வாழ்வான், வானப்பிரஸ்தன், சந்நியாசி முதலானோர் வழிபட்டு தர்மம், காமியம், மோட்சம், என்ற புருஷார்த்தங்களைப் பெற்றுய்ந்து கடைத்தேறும் பொருட்டும் சாலோக, சாமீப, சாரூப, சாயுச்சிய முதலாகிய பதவிகளைப் பெறுவதற்கும் ஆன்மாக்கள் வழிபட்டுக் கடைத்தேறும் பொருட்டும் அமைந்துள்ள ஆலயங்களில் பதியானவர் (கடவுள்) தயிரில் நெய்போல வீற்றிருந்தருள்கிறார்.

அவ்வாலயத்தில் லிங்கம், பிம்பம், முதலாகிய திருவுருவங்கள் வேண்டற்பாலன. இத்திருவுருவங்களைப் பிரதிட்டை செய்வதற்காக சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கில் சரியையும் கிரியையும் இன்றியமையாதன. இம்மானிட ஜென்மத்தில் சரியாபாதம், கிரியாபாதம் இரண்டினையுங் கடைப்பிடிக்க ஆலயம் முக்கியமாகக் கருதப்படும். அவ்வாலயத்தில் லிங்கம், பிம்பம் முதலியன பிரதிஷ்டை செய்வதற்காக கருஷணாதி, பிரதிஷ்டாந்தம், பிரதிஷ்டாதி, உற்சவாந்தம், உற்சவாதி, பிராயச்சித்தாந்தமாகிய கிரியைகளை நியமித்துள்ளார்கள். சைவசமய சிவாசாரியர்கள் முதலில் செய்யப்படுவனவாகிய கிரியைகளில் கருஷணாதி கிரியைகளைச் செய்து ஆலயத்தைக் கட்டியதன்பின்பு செய்ய வேண்டிய அனுக்ஞை முதலிய சாங்க, உபாங்க, பிரத்தியங்கமாகிய கிரியைகளைச் செய்வர்.

அவற்றுள் முதலில் செய்யப்படும் கிரியைக்கு அனுக்ஞை என்று பெயர். கடவுளைப் பிரதிட்டை செய்வதற்காக அவருடைய பூரண திருவருளையும் உத்தரவையும் பெறுவதே அனுக்ஞையாகும்.

அனுக்ஞை செய்வதற்காக சுபமுகூர்த்தத்தில் வேண்டிய திரவியங்களைச் சேகரித்து விக்னேஸ்வரரை பூசை, புண்ணியாகம், பஞ்சகவ்யம் முதலில் செய்கின்றோம். விக்னேஸ்வர பூசை முதலில் செய்வது இடையூறு களைந்து காரியம் இனிது நிறைவேறற்பொருட்டாகும். சிவாசாரியார் தனது குருவை வழிபட்டு விநாயக வணக்கம் செய்து தோத்திரத்திலே அதீதத்தைப் புரியும் தமக்கும், மற்றையோர்களுக்கும், உலகத்துக்கும், தர்மகர்த்தாவுக்கும் இடையூறு சிறிதும் அணுகாமை அறிந்தாராயினும், ஆன்றோராசாரம் பாதுகாத்தற்பொருட்டும் குரு சிஷ்ய முறையை அறிவுறுத்தற் பொருட்டும் இக்கிரியையின் முதற்கண் இடையூறு நீக்குதற்குரிய காரணப் பெயரையுடைய விக்னேஸ்வரப் பெருமானை வாழ்த்துவதாகிய மங்கல வாழ்த்தை நாங்கள் அடைதற்பொருட்டும் பத்திர புஷ்பம், சந்தனம் அட்சதை தூப, தீப, நைவேத்திய முதலானவைகளால் சந்துஷ்டி அடையச் செய்து அப்பெருமானை வேண்டிக் கொள்கின்றோம். இதுவே விக்னேஸ்வர பூசை.

**பஞ்சகவ்விய பூசை :** எங்களுடைய உடம்பிலுள்ள அந்தக்காரணங்களை சுத்தி செய்தற்பொருட்டும் ஸ்தல சுத்தியின் பொருட்டும் பூசித்து பருகுகின்றோம். இதுவே பஞ்சகவ்விய பூசை எனப்படும்.

**புண்ணியாகம் :** மூவகைப்படும். அவை வைதீக புண்ணியாகம், வைதீகமும், ஆகமமும் கலந்த மிஸ்ர புண்ணியாகம், கும்பத்தில் வருணனைப் பூசித்து நிகழ்த்தும் கேவல புண்ணியாகம் என்பன. புண்ணிய தினத்திலே கும்பத்தில் வருணனையும் கும்ப தீர்த்தத்தில் கங்கையையும் பூசித்து அக்கும்ப தீர்த்தத்தினால் குறிப்பிட்ட இடங்கள்தோறும் தெளித்தற் பொருட்டும் திரவியங்களைச் சுத்தி செய்வதற்காகவும் உரிய கிரியை புண்ணியாகம் ஆகும்.

கிரியாபாதம், சரியாபாதம், ஆகிய இவ்விரண்டும் தனித்தனி நான்கு பாதங்களை உடையனவாக இருப்பினும், இவற்றுள் ஞானபாதம், பதி, பசு, பாசம் என்னும் திரி பதார்த்தங்களையும் ஸ்வரூபத்தையும் யோகபாதம், பிராணயாமம் முதலிய அங்கங்களோடு கூடிய சிவயோகத்தையும் கொண்டது.

கிரியாபாதம் மந்திரங்களின் உத்தாரம், சந்தியாவந்தனம், பூசை, ஜெபம், ஓமம் என்பவைகளையும் சமய விசேஷ நிருவாண தீக்ஷை, ஆசார்யாபிஷேகங்களையும் மந்திரங்களின் தத்துவார்த்தங்களையும், அதனாலாகிய பலாபலன்களையும் கூறுகின்றது. சரியாபாதம் சமயாசாரங்களைப் போதிப்பது. இவற்றுள் கிரியாகாண்டத்தைப்பற்றிச் சொல்வது, திரிபதார்த்த இலக்ஷணத்தை உணர்த்தும் தன்மையினாலும் ஆன்மாக்களுக்கு மலநாசத்தை செய்து சிவஞானத்தை உதிப்பித்தலாலும் மோக்ஷத்தைக் கொடுத்தல் பற்றிச் சொல்லப் பட்டதாலும், அனுக்ஞையிலுள்ள சகல திரவியங்களைத் தெய்வீகத் தன்மை பொருந்தி மந்திரங்களின் அதிதேவதையின் ஸ்வரூபமாக நியசித்தலாலும் அந்த மண்டபம் முப்பத்து முக்கோடி தேவர்களுடைய சுவரூபமாக விளங்குவதாலும் சகலதும் சிவஸ்வரூபம் என்பதை இனிது விளக்குதற்பொருட்டு சிவாசார்யர் சங்கற்பம், சகளீகரணம், ஆத்மசுத்தி முதலிய பஞ்சசுத்திகளைச் செய்து அந்தர்யாகம், பூதசுத்தி, முதலிய விசேஷ சுத்தியினாலும் ஆதி பௌதீகம், ஆதிதைவீகம், அத்தியாத்மீகம் என்கின்ற சிவோகம்பாவனை செய்து அனுக் ஞோபகரணங்கள் சிவாசார்யருடைய உத்தரவுடன் பூசிக்கப்படுகிறது. முதற்கண்: பிராமணனுக்ஞை என்று சொல்லப்பட்டது எதற்கோவெனில் வேத சிவாகமங்களிலும் புராண, இதிகாசங்களிலும் இக்கலியுகத்தில் பிராமணோத்தமர்கள் நடமாடும் தெய்வம் என்று சொல்லப்பட்டு இருக்கிறது. சேக்கிழார் பெரிய புராணத்திலும் முப்பொழுதும் திருமேனி தீண்டும், பெறுதற்கரிய பெரும் பேற்றை பெற்ற தன்மையினாலும் அஃது மாத்திரமன்றி உலகில் முழுமுதற் கடவுளும் சிதாகாசம் என்று சொல்லப்பட்டதும் அதில் பராசத்தியோடு கூட அதி சூக்கும சித்தென்றது பரப்பிரமமாகிய சிவத்தை அகத்தும், புறத்தும் பூசிக்கின்ற தன்மையினாலும் அந்தப் பரப்பிரமம் இப்பிரமாண்டத்தில் உள்ள புண்டரீக வீடு என்று சிறப்பித்துச் சொல்லப்படுகின்ற தில்லைவனத்திலிருக்கும் ஆகாசம், பராசத்தியாகிய திருச்சிற்றம்பலத்தில் நிருத்தம் செய்யும் பரப்பிரம்மசிவம் அதிசூக்கும் சித்து என்று சொல்லப்படும். இவ்வாகாசம் பூதாகாசம்போற் சடமாகாது சித்தேயாம். ஆதலால் சிதம்பரமெனப்படும் இந்தச் சிதம்பரத்தில் எந்நாளும் நீக்கமின்றி விளங்கி அனவரததாண்டவம் ஆடுகின்ற சிவபெருமானினால் புகழ்ந்துரைக்கப்படுகின்றது. எனவே சுந்தரமூர்த்தி நாயனார் தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கு மடியேன் என்று திருவாய் மலர்ந்தருளினார். இந்தப் பூலோகத்தில் பூசுரர் என்ற நாமத்தைப் பெற்ற தன்மையினாலும் ஆகிய இன்னோரன்ன பற்பல மகிமைகளைப் பெற்றும் வேதாத்தியக்கினிகாரியம், ஆன் மார்த்தம், பரார்த்தமாகிய இருவகைக் கிரியாகாண்டத்தை நன்கு கற்று தொழில் செய் கின்ற தன்மையினாலும், இன்னோரன்ன குணசீலத்தின் மேம்பட்ட பிராமணோத்தமர்களி டத்தில், இயன்ற தட்சணை முதலிய பற்பல விசேஷ உபசாரங்களினால் அவர்களை மகிழ்வித்து அவர்களிடத்திலுள்ள தெய்வீகத்தன்மை பொருந்திய கிருபாகடாட்சமென்று சொல்லப் படுகின்றதாகிய மகிமை பொருந்திய உத்தரவைப் பெறவேண்டும்.

சிவாசார்யரானவர் ஏனைய மற்றைய சிவாசார்யர்களுடன், மங்கலகரமாகிய பற்பல வாத்தியங்களுடன் அவ்வாலயத்தை வீதிப்பிரதட்சணஞ் செய்து மஹா தேவாதி தேவராகிய சிவபெருமான் எழுந்தருளியிருக்கின்ற மூலாலயத்தையடைந்து பஞ்சாசனார்ச்சனை முதலிய விசேஷ பூசைகளைச் செய்து ஆராத்திரிகம் செய்து அனுக்ஞையில் பூசிக்கப்பட்ட திரவியங் களையுடைய தட்டத்தை தமது கரத்தில் தாங்கி, எடுத்துக்கொண்ட குறிக்கோளாகிய சம்போரோற்சவமென்ற இக்கருமமானது இடையூறு நிகழாவண்ணம் இனிது சிறப்பாக நடத்தியருள வேண்டுமென்று சொல்லப்படுகின்ற கருத்துக்கள் பொருந்திய சுலோகங்களைக் கூறி அப்பெருமானிடத்தும் விக்னேஸ்வரர் முதலாகிய பரிவார மூர்த்திகளிடத்தும் அம்பா ளிடத்தும் அந்த அந்தத் தல மூர்த்திகளிடத்தும் முன்போல உத்தரவைப் பெற்று அதன் பின்பு நமஸ்காரம், தோத்திரம் முதலியன்வைகளால் ஈசுவரனை வணங்கியதன் பின்பு வீபூதிப் பிரசாதம் முதலியவற்றை அங்கு நின்ற அடியார்களுக்குக் கொடுத்தருள்வார்.

இதற்கு இன்னும் சிலர் பலவகையான கருத்துக்களைக் கூறினாலும் இதன் தாற் பரியம் இதுவே என்பது இனிது பெறப்படும்

அனுக்ஞையில்

(1) சிவாசாரியர்களுடையதும்
(2) ஏனைய பிராமணர்களுடையதும்
(3) மூலமூர்த்தியினுடையதும்
(4) அம்பாளதும்

(5) விக்னேஸ்வரருடையதும்
(6) சோமாஸ்கந்தர் முதலிய பஞ்சமூர்த்திகளினதும்
(7) ஏனைய பரிவாரமூர்த்திகளதும்
(8) பைரவரதும்
(9) நந்தியந்தேவரதும்
(10) சண்டேஸ்வரரதுமாகிய மூர்த்திகளதும் உத்தரவைப் பெறுவதே குறிக்கோளாகும்.

அதன் பின்பு பிரதான சிவாசார்யரானவர் மஹாராசாவினதும் உத்தரவையும் பெறுதல் வேண்டும். இதனையே இராசா அனுக்ஞை என்று கூறுவர். ஏனெனில் தேசம், கால, வர்த்தமானம் இவைகளை அறிந்து நடந்துகொள்வதற்காகவே அரசனுடைய உத்தர வையும் ஆகமங்களில் கூறினர் என்று உணர்க. அனுக்ஞை இவ்வாறு சுருக்கமாக எழுதப் பட்டது. அனுக்ஞை முதலிய சகல கிரியாக்கிரமங்களை குரு, சிஷ்ய முறையாக மந்திரங்களை எல்லாம் இரகசியமாக எடுத்துச் சொல்லுவதே அன்றி அபக்குவர்களுக்குச் சொல்லுதல் கூடாது. கடவுள் பக்தியும் கல்வி ஞானமும் ஒழுக்க சீலர்களுக்குமே அன்றி மற்றையவர் களுக்குச் சொல்லப்புகின் இடராகும் என்று சாத்திரத்தில் கூறப்பட்ட தன்மையினாலும் இந்தக் கிரியா காண்டங்களை நன்கு கற்று உணர்ந்தவர்களே இதன் அருமையையும் பெரு மையையும் மந்திரங்களின் பலாபலன்களையும் நன்கு உணர்வார்கள் என்பது திண்ணமாகும். ஆகையினால் இக்கிரியையிலுள்ள மந்திரங்களை சுருக்கமாக எடுத்து பொழிப்புரையாக எழுதியுள்ளோம்.

## தனபூசையும் திரவிய சுத்தியும்

தனபூசை: ஒரு கிராமத்தில் புதிதாக ஆலயம் கட்டுவதற்குமுன் அரசன் அல்லது தர்ம கர்த்தா இவர்கள் தரும வழியால் சம்பாதித்த திரவியங்களைக் கொண்டு ஓர் புதிய ஆலயத்தைக் கட்ட அதற்குரிய திரவியத்தை சிவாசார்யரிடத்தில் கொடுத்தல்.

அந்தச் சிவாசாரியார் அந்தத் திரவியங்களை வாங்கி அதற்குரிய இன்றியமையாத பூசை, அபிஷேகம், ஓமம், முதலிய கிரியைகளைச் செய்தலே தனபூசையாகும். அந்தத் தனத்தை இரட்சித்தற்காக முக்காலியில் தனத்தை வைத்து சிவாஸ்த்திர மந்திரத்தினால் அர்ச்சித்து அக்கினி காரியம் செய்து முடிந்தபின்னால், சிவிகையில் வைத்து வீதிப்பிரதட் சணம் செய்து சிவாசாரியார் தர்மகர்த்தாவை அழைத்து அவரை சுவாமி சந்நிதானத்தில் இருக்கச்செய்து வீபூதி முதலிய பிரசாதங்கள் வழங்கி "கிடைத்தற்கரிய இந்த மானிட ஜென்மத்தில் செய்தற்கரிய தர்மங்களில் சிவதர்மமானது யாவராலும் செய்தற்கரியது. அந்தத் தர்மமானது பூர்வ ஜென்ம புண்ணியத்தினால் நீங்கள் இந்த ஜென்மத்தில் இந்தச் சிவதர்மத்தைச் செய்யும்படி முன்வந்ததினால் இந்தத்தனங்கள் எல்லாவற்றையும் தாங்கள் ஏற்று செவ்வையாகவும், சிறப்பாகவும், பின்வருமாறு குறிக்கப்பட்ட பிரகாரம் நடத்து வீர்கள்" என்று அவருக்குப் போதித்தல் வேண்டும். திரவியபாக முழுத்தொகையும் 11 பாகங்களாகப் பிரித்து அதில்

| | | |
|---|---|---|
| (1) | யாகத்துக்காக | 3 பாகமும் |
| (2) | அபிஷேகத்துக்காக | 1 பாகமும் |
| (3) | குருமார்களுக்காக | 1 பாகமும் |
| (4) | மூர்த்திபர்களுக்காக | 1 பாகமும் |
| (5) | பிராமண போசனத்திற்காக | 2 பாகமும் |
| (6) | ஜபக்காரர் தானத்திற்காக | 2 பாகமும் |
| (7) | மண்டலாபிஷேகார்த்தம் | 1 பாகமும் |

இவ்விதமாகப் பிரித்து சாமக்கிரியா பத்திரிகையை எழுதிக் கொடுத்து (சாமக்கிரியா பத்திரிகை என்றால் இன்ன இன்ன கிரியைக்காக அதற்குரிய திரவியங்கள் எழுதிக்கொடுக்கும் பத்திரிகை என்று அறிக) இந்தப் பத்திரிகைக்கு சாமக்கிரியா பத்திரிகை என்று பெயராகும். அதனையும் தர்மகர்த்தா கையில் கொடுத்தலாகும்.

மந்திரம், கிரியை, ஆகிய இவைகளால் வரும் (தோஷம்) குற்றம் ஆசாரியரையும், சிற்பக்கிரியையினால் வரும் குற்றம் சிற்பாசாரியரையும், முகூர்த்தம் வைக்கும் சோதிடரின் முகூர்த்தத்தினாலாகிய குற்றம் தைவஞ்சனையும் திரவியங்களினால் வரும் குற்றம் பொருள் கொடுக்கிற தாதாவையும் வந்து அடையும், ஆனதன்மையினால் இவர்கள் மிகவும் கடவு ளிடத்தில் பயபக்தியாக சாத்திரோக்தப்பிரகாரமாக நடந்துகொள்ளல் வேண்டுமென்று சொல்லி சாமக்கிரியா பத்திரிகையையும் கொடுத்ததன் பின்னர் முகூர்த்தம் வைக்கும் தைவஞ்சனாகிய சோதிடனை அழைத்து குறித்த முகூர்த்தத்தைப் பரீட்சை செய்தும் அதன்

பின் சிற்பியையழைத்து சிற்ப சாஸ்த்திரப் பிரகாரம் ஆலயத்தைப் பரீட்சை செய்தும் அதன் பின்பு ஏனைய பல விஷயங்களையும் பரீட்சித்ததன் பின்னர் தர்மகர்த்தாவுக்குரிய உபசரணைகளுடன் ஆசீர்வதித்தும் ஏனைய அடியார்கள் முதலியவர்களையும் ஆசீர்வதித்து சிவகிருபா கடாக்ஷம் பெறுதலே தனபூசை என்று பெயர்.

2. திரவிய பூசை : கும்பாபிஷேகத்துக்குரிய திரவியங்களாவன:

1. நெல்லு
2. பயறு
3. உளுந்து
4. எள்ளு
5. கடலை
6. கோதுமை
7. துவரை
8. மொச்சை
9. அவரை

இந்த நவதானியங்களும், ஓமத்துக்குரிய தானியங்களும், இலாமிச்சம்வேர், வெட்டிவேர், ஏலம், கராம்பு, சாதிக்காய், சாதிபத்திரி, அகில், தேவதாரு, சந்தனக்கட்டை, வாசனைத் திரவியங்கள், நவரத்தினம், பஞ்சரத்தினம், கும்பத்துக்குரிய திரவியங்கள், பீதாம்பரம், லோகவகைகள், சமித்துவகைகள், பழவகைகள், நெய், தேன். வஸ்த்திரங்கள், தருப்பை, மாலைகள், புஷ்பவகைகள், சுவர்ணம், வெள்ளி, முதலியவைகளும் இன்னும், வேண்டிய இன்றியமையாத பலவகைப்பட்ட திரவியங்களையும், சிறிதாகியகிண்ணங்களில் நிறைத்து, ஸ்தாலிகையின்மேல் தட்டத்தில் வைத்து, விக்னேசுவர பூசை, புண்ணியாகம், பஞ்சகவ்வியம் முதலாகக் கிரியை சங்கற்பபூர்வமாகத் தொடங்கி மேலே முற்கூறிய நவதானியம் முதலாகிய சகல திரவியங்களையும், தேவதை, அதிதேவதை, பிரத்தியதிதேவதை முதலாகிய மந்திரங்களுடன் சகல திரவியங்களையும் சாங்கோபாங்கமாகப் பூசித்து தூபதீப, நைவேத்திய ஆராதனைகளைச் செய்ததன்பின்னர், மேற்படி சகல திரவியங்கள் பொருந்திய தட்டத்தை வாத்திய சகிதம் வீதிப்பிரதட்சணம் செய்து, சுவாமி சந்நிதானத்தில் வைத்து பூசித்தபின் அத்திரவியங்களை அந்த அந்த திரவியங்களுடன் சேர்த்துப் பின்னுல் செய்யப்படுகின்ற ஒவ்வொரு கிரியைக்கும் எடுத்து உதவுதல் வேண்டும். இதுவே திரவிய சுத்தி என்று சொல்லப்படும். இவ்வாறு செய்யப்படும் கிரியைகள் சில ஆகமங்களில் வேறுவித திரவியங்கள் சொல்லப்படினும், இவ்விதமாக தனபூசை, திரவிய சுத்தி ஆகிய இவைகளை மேற்கூறியவாறு செய்தலே சாலச்சிறந்ததாகும்.

3-வது **பிரவேசபலி**

பிரவேசபலி செய்தல் எதற்காகவெனில், புதிதாகச் செய்யப்பட்ட ஆலயங்களிலும் புனராவர்த்தன சம்புரோக்ஷணைகளிலும், நெடுங்காலம் கிலமாகக் கிடந்து, நித்திய, நைமித்திக காமியங்கள் நடவாத ஆலயங்களிலும் கும்பாபிஷேகம் நடக்கும் காலங்களிலும் விசேஷமாக பூர்வாங்கமாகச் செய்தல், அந்தக் கிராமங்களிலே நிகழுகின்ற சர்வவிக்கினங்களை நீக்குதற்பொருட்டும், அதனுலாகிய உபத்திரவங்களை விலக்குதற்பொருட்டும் சகல அரிட்டங்களை நீக்குதற்பொருட்டும், இராக்ஷத, பிசாச, பூத, பிரம்ம இராக்ஷத முதலாகிய துட்ட தேவதைகளை உச்சாடனம் செய்து ஆலயங்களில் பிரவேசிக்கின்ற காலங்களில் பலி கொடுத்து குறித்த இடத்திலிருந்து துரத்துதலேயாகும். ஆகையினுலே அந்தப் பிரவேச பலியின் காரணமாகவே பிரமத்தானம் முதலாகச் சொல்லப்படுகின்ற ஆலயத்தைச் சூழவர இந்திராதி ஒன்பது திக்கிலும் தென்னேலையினுல் செய்யப்பட்ட தடுக்குகளில் அந்த அந்த திக்குகளில் 9 (ஒன்பது) மேடைகளிலும் அந்த அந்த திக்குகளுக்குச் சொல்லப்பட்ட வர்ண சூரணங்களினுல் மண்டலம் செய்து அந்த அந்த திக்குக்குரிய தேவதைகளைப் பூசித்து கமுகம் பூ பலவகை வர்ணமான புஷ்பங்கள், பூசணித்துண்டு பலியும் பானக நீரினுல் தேவதை கையில் தர்ப்பணம் செய்து பழம், பாக்கு, வெற்றிலை, எலுமிச்சம்பழம், அன்ன உருண்டை, வடை, நாளிகேரபந்தம் (பஞ்சதைலங்களால் நனைத்த தீபம் இளநீரில் குத்தி வைத்தல்) செந்நிற முதலாகிய பலவர்ண புஷ்பங்கள் நிறைந்த, தென்னந் தடுக்கில் இவைகளை வைத்து அந்த அந்த திக்குக்குரிய மந்திரங்களைச் சொல்லிப் பலி திரவியங்களை ஆகாயத்தில் எறிதல் வேண்டும்.

மஹாதேவனுகிய ஈசுவரனுடைய ஆக்ஞை யினுலே இந்த இடத்தில் தேவாலயத்தைக் கட்டுதற்காகவும், தேவாலய அபிவிருத்திக் காகவும் இவ்விடத்திலிருக்கின்ற இராக்ஷத, பூத,

பிசாச, பிரம்ம இராக்ஷத முதலான துஷ்ட தேவதைகளே, இந்தப் பூமியை எடுத்தற்காக நீங்கள் என்னால் கொடுக்கின்ற இந்தப் பலித்திரவியங்களை ஏற்று மனத்திருப்தியுடன் சகல சீவராசிகளுக்கும் தீங்கு செய்யாமல், இறைவனிடத்திலுள்ள சகல சித்திகளையும், இந்தக் கிராமத்திலுள்ள வர்களுக்கு இடையூறு இல்லாமல் பெறுதற்பொருட்டும், சிவாக்ஞையினால் மலையின் உச்சி, நீர்நிலை, காடுகள், வனாந்தரம், மஹாவனாந்தரங்களிற் சென்றிருப்பீர்களாக என்று சிவனுடைய ஆக்ஞையைத் தெரிவித்தலே பிரவேச பலியாகும். மேற்படி பிரம்மத் தானம் முதலாகிய 9 திக்குகளிலும் மேற்படி இடங்களில் புண்ணியாகம், பஞ்சகவ்வியத் தினால் தலசுத்தி செய்தலாகும். சிவசார்யர் முதலானவர்கள் எல்லாரும் ஸ்நானம் செய்தல் வேண்டும். இதுவே பிரவேசபலியாகும்.

## இரக்ஷோக்ன ஹோமம்

இரக்ஷோக்கின ஹோமம் என்பது ஆலயத்துள் உள்ள ரக்ஷோக்னம் என்ற துஷ்ட தேவதைக்கு பலீகரண ஓமம் பஞ்சதைலத்துடன் காஞ்சுரம் சமித்து, தவிடு, கடுகு, வெண்கடுகு, மிளகு இவைகளினாலே ஓமம் செய்து அத்தேவதையை விலக்குதல் பொருட்டுச் செய்வது. அஃது எவ்வாறு எனில் ஆலயத்துக்கு வடக்கு, வடகிழக்கு, கிழக்கு, முதலாகிய திக்குகளில் மண்டபம் செய்து, மூன்று தண்டிலங்களில், நடுமேடையில் பத்மம் செய்து, தானியத்தின்மேல் இரட்க்ஷோக்கின தேவதையின் பெயரினால் ஒரு கும்பமும், அந்தக் கும் பத்தின் இரண்டு பக்கத்திலும், வலப்பக்கத்தில் தாருபீடத்தில் வெண்பட்டு விரித்து அதன் மேல் தேங்காய் வைத்தும், இடப்பாகத்தில் தாருபீடத்தில் சிவப்புப் பட்டு விரித்து அதன் மேல் வாள் அல்லது கத்தி வைத்து அந்த இரண்டு இடங்களிலும் கூர்ச்சம், மாவிலை, புஷ்ப மாலை இவைகளால் அலங்கரித்து தேங்காயில், சிவனையும், வாளில் மஹாதேவியையும் பார்வதி, வாக்குத்தேவியும், கிருத்திகை, மகாலட்சுமி, இரத்தசக்தி, காளிசண்டிகை, வீரசக்தி, இது முதலாகிய சக்திகளைப் பூசித்தும், கிழக்கு முதலாக அசிதாங்காதி, அட்ட பைரவரைப் பூசித்தும், இந்த மூன்றுக்கு முன்னால் நவகோஷ்டம், மாவினால் மண்டலமிட்டு மத்திய கோட்டத்தில் கூர்ச்சத்தில் ரட்சோக்கின தேவதையையும், கிழக்கு முதலாகிய 8 கோட் டத்திலும் பிரம்யாதி அட்டசக்தியையும் அதைச் சூழவர அட்டபயிரவரையும் ஆவாகனஞ் செய்து அன்ன உருண்டை, பழம், தாம்பூலம், தூபதீப, கற்பூர ஆராதனை செய்து, விதிப்படி அக்கினி காரியம் செய்தல் வேண்டும். நெய், நல்லெண்ணெய், வேப்பெண்ணெய், ஆமணக் கெண்ணெய், இலுப்பெண்ணெய் கலந்த பஞ்சதைல ஓமம் செய்து, காஞ்சூரம் சமித்தை சிறு துண்டுகளாக்கி, பஞ்சதைலத்தோடு கலந்து ஓமம் செய்தல், காஞ்சூரம் சமித்து, எள்ளு, மிளகு, கடுகு, தவிடு பருத்தி விதை என்ற பலீகரண ஓமம் செய்து நெல்லு, வெண்கடுகு, நீற்றுப்பூசணிக்காய்த்துண்டுகள், பருத்திக்கொட்டை, இவை தனித்தனியே 108 ஓமஞ்செய்து சிவாஸ்த்திரம், பாசுபதாஸ்த்திரம், மூலமந்திரம் முதலிய மந்திரங்களால் ஓமம், சக்திக்குத் தக்கபடி ஓமம்செய்து, ஜயாதிஓமம், இரக்ஷோக்ன மந்திரஓமம், சிவாஸ்த்ரம், அகோராஸ்த்ரம், பசுபதாஸ்த்ரம், பிரத்யங்கிராஸ்த்ரம் முதலிய மந்திரங்களால் சக்திக்குத்தக்கபடி ஓமங்கள் பூர்ணாகுதி முதலியவை செய்து தூபதீப, கற்பூர ஆராதனை முதலியவைகளால் பூசித்து, கோஷசாந்திஜபம், பஞ்சசாந்திஜபம் செய்து, மேற்படி பூசித்தவைகளைவிசர்ச்சனம் செய்து அந்தக் கும்பசலத்தினால் சகல வீதிகள், கர்ப்பக்கிரக முதலிய ஆலயங்களிலும் தெளித்து சிவாசாரியார் முதலானவர்கள் மறுபடியும் சுத்தியின் பொருட்டு ஸ்நானம் செய்தல் வேண்டும். இப்படிச் செய்தலே இரக்ஷோக்ன ஓமம் என்று பெயராகும்' இந்த இரக்ஷோக்ன தேவதையானது பூத, பிரேத, பிசாச பிரம்மராட்சத என்கின்ற துட்ட தேவதைகளின் உபாதைகளை நீங்க பூசிக்கப்படுந் தேவதை, சிவன், சக்தி, இவர்களை தனித்தனி மேலே கூறிய பிரகாரம் பூசித்து அவர்கள் ஆக்ஞையினால் செய்யும் கிரியையாம்.

## கிராம சாந்தி

கிராம சாந்தி செய்வது எதற்காகவென்றால் ஆலயத்தையுடைய அந்தக் கிராமத்தில் இருக்கின்ற துஷ்டதேவதைகளான, அசுர, இராட்சச, பிரம்ம இராட்சச பைசாசமாகிய இந்த தேவதைகளை பரிவாரங்களாகவுடைய அந்தக் கிராமத்தில் ஆபதுத்தாரணர் என்னும் பெயரையுடைய வைரவரையும், அவருடைய சத்தாவரண பரிவாரங்களையும் குறித்துச் செய்யுங் கிரியையாகும். இந்தச் க்ஷேத்திரத்தைப் பரிபாலிப்பவர் பைரவர் ஆன தன்மையினால், இந்தக் கிராமத்தில் இருக்கின்ற சகல சீவராசிகளையும், சகல சனங் களையும் இரட்சித்து சுகமாக சீவித்தற் பொருட்டு குறித்த ஆலயத்தில் மேலே குறித்த துஷ்ட தேவதைகளினால் கேடுவராமல் இருத்தற்காக செய்யப்படும் பூசை, ஓமம், பலி, இவைகளைச் செய்தலே கிராம சாந்தி என்றுபெயர். கிராம சாந்தியை செய்

வதற்காக சிவாசார்யரானவர் கிராம சாந்தியின் பொருட்டு அந்த ஆலயத்துக்கு மேற்கே யாயினும், வடகிழக்கேயாயினும் அல்லது முற்பாகத்திலாயினும் மண்டபம் அமைத்து, விதானம், வாழை, கமுகு, தோரணம் இவைகளினுல் அலங்கரித்துப் பின் மேற்படி சிவா, சார்யார், சாதகர், போதகர், பரிசாரகர், வாத்தியங்களுடன் அந்த ஆலயத்திலிருக்கும், மூலமூர்த்தியிடத்தும், வைரவமூர்த்தியிடத்தும் உத்தரவுபெற்று, அஸ்திரதேவர், வாள் கிராம சாந்திக்குரிய சகல திரவியங்களுடன் கிராம சாந்தி மண்டபத்தையடைந்து அந்த மண்டபத்தில் வேதிகையில், மண்டலம், கும்பம், யாகபரிவாரகும்பம், யாகேசுரர், யாகேஸ்வரீ, சதுர்துவாரகும்பம், தசாயுதகும்பம், ஆபதுத்தாரண வடுக பைரவ கும்பம், ஆகிய இவைகளை வைத்து கிராம சாந்தியில் குறித்த பிரகாரம் பூசை, ஜபம், ஓமம் செய்து, மேற்படி விசேஷ ஓமங்களும் நீற்றுப் பூசணிக்காய்ப் பலியும், அன்ன உருண்டை, வடை, வடைமாலை இவைகளை, மண்டலம், கும்பம், அக்கினி, பரிவாரகும்பம், இவைகளுக்கு நிவேதித்து இத்துடன் செந்நிறமாக்கிய நீற்றுப்பூசணிக்காய் துண்டுகளையும் பழம், பாக்கு, வெற்றிலை, நெற்பொரி, இவைகளையும், பைரவர் முதலாகிய தேவதைகளுக்குப் பலிகொடுத்து இந்தக் கிராமத்திலே உள்ள சகல சீவராசிகளையும் (மனிதர்களையும்) ஏனையவர்களையும் இரட்சிக்க வேண்டும். அவர்கள் சுகமாக வாழவேண்டும். இந்த ஆலயம், எக்காலத்தும் அழிவில்லாமல் நித்திய நைமித்தியம் இவைகளை இடையூறு இல்லாமல் எந்நாளும், சிறப்பாக நடக்க வேண்டுமென்று அந்தக் கிராமத்தையுடைய பைரவரையும் அஃரது பரிவாரங்களையும் கேட்டுக்கொள்ளுகின்ற பிரார்த்தனுவிசேஷங்களே இந்தக் கிராம சாந்தியாகும் சிவாசார்யரானவர் இந்தப் பிரகாரமாக கிராம சாந்தி செய்வது எடுத்துக்கொண்ட பிரதிட்டையாவது, அல்லது சம்போரோக்ஷனை அல்லது உற்சவம் இடையூறு இல்லாமல் நடத்துதற்காகவும் எனக்கொள்ளலாம். அந்தக் கிராம தேவதைகளிடத்தும் அதற்கு அதிதேவதையாகிய ஆபதுத்தாரண பைரவரிடத்தும், பிரார்த்தனை ஆகிய விண்ணப்பத்தைச் செய்து புதிதாகிய ஆலயமாயினும் கிலமாக அழிந்த ஆலயமாக இருந்தாலும் அட்டதிக்குகளிலும் பலியிடுதல் வேண்டும். அதன்பின் யாக உத்வாசனம் முதலியவற்றைச் செய்து ஆலயத்தில் செல்லுதல் வேண்டும். (சுத்தியின் பொருட்டு ஸ்நானம் முதலியன செய்தல் வேண்டற்பாலனவாகும்.)

# வாஸ்து சாந்தி

வாஸ்து சாந்தி செய்வது எதற்காகவென்ருல் குறிக்கப்பட்ட ஆலயம் முதலியனவும், வீடு கட்டுதல் முதலியன செய்தற்கு முன்னுக உள்ள இடத்தில் இருக்கின்ற அதிதேவதையாகிய வாஸ்து புருஷனை உவப்பித்தலாகிய சந்தோஷத்தின் பொருட்டும் அந்த வாஸ்து புருஷனுக்கு அதிபதியாகிய பிரமதேவரையும் சக்திகளோடுகூட அட்டவித்கியேஸ்வரர் சகிதமாக மண்டலம், கும்பம், அக்கினி, ஆகிய மூன்று இடத்தும், அவர்களைப் பூசித்து பலி முதலியன கொடுத்து குறிக்கப்பட்ட இடத்தை எடுத்தற்காகவும் செய்யப்படும் சாந்தியாகும்.

இந்த வாஸ்து சாந்தி மூன்று வகையினையுடையது. ஆலயம் முதலிய நிர்மாணிக்குமுன் செய்யப்படுவது ஒன்று. இரண்டாவது பிரதிட்டை, சம்புரோக்ஷணை முதலிய கிர்யாகாலங்களிலும் செய்வது. மூன்ருவது உற்சவம், பிராயச்சித்தம் முதலிய கிரியைகளில் செய்வது. இந்த வாஸ்து சாந்திக்குரிய மண்டலமும் மூன்று வகையை உடையது. இது சதுரஸ்ரமாகவும், விருத்தமாகவும், திரிகோணமாகவும் இருக்கலாம். அநேகமாக ஆன்ருேர் ஆசார முறைப்படி சதுரமாகவுள்ள மண்டலமே கைக்கொள்ளப்படுவது வழக்கம். அந்தச் சதுரமான மண்டலத்தில் இரண்டுவகை உண்டு. ஒன்று மண்டுகபதமென்றும் மற்றது பரமசாயுபதமென்றும் சொல்லப்படுகிறது. அவைகளில் கிழக்கு, வடக்கு, அந்தமான நவசூத்ர மண்டலமே மண்டுகபதமென்றும் தசசூத்திரம் கிழக்கு வடக்கு அந்தமான மண்டலமே பரமசாயுபதமென்றும் சொல்லப்படும். மண்டுகபதமுள்ள வாஸ்து மண்டலத்தை ஆண்தேவதைகளுக்கும் பரமசாயிபதமுள்ள மண்டலத்தை பெண்தேவதைகளுக்குஞ் செய்வது வழக்கம். இம்மண்டலங்களை அட்டதிக்குச் சூலத்துடனும் மண்டலாகிருதியாகவும் மண்டுகபதத்தில் அர்த்தபதமும் இரச்சுவட்டகத்துடன் மண்டலத்தைச் செய்து, கும்பம், அக்கினி ஆகிய இவைகளை வாஸ்து சாந்திப் பத்ததிப் பிரகாரமாகச் செய்து வாஸ்து மண்டலத்தில் பூசித்து அன்ன பலியிட்டு அதன்பின் கும்பத்திலும் முறைப்படி பூசித்ததன்பின் அக்கினி காரியம் செய்து மேற்படி வாஸ்து புருஷன் வாஸ்து அதிபதி பிரம்ா முதலியோர்களை அக்கினியில் ஆவாகனம் செய்து பூசித்து நீற்றுப்பூசணிக்காய் பலிகொடுத்து அதனுல் விசேஷ ஓமங்களையுஞ் செய்து பூர்ணுகுதி கொடுத்ததன்பின் மண்டலத்திலும் கும்பத்திலும், பூசித்து விசர்ச்சனம் செய்து அதன்பின் சர்வசங்கார புருஷனுகிய வாஸ்து

புருஷனை வைக்கோலினாலும் தர்ப்பையினாலும் புருஷாகிருதியாகக் கட்டி பூசித்து அந்த வாஸ்து சாந்தி ஓமகுண்டத்திலுள்ள அக்கினியில் கொளுத்தி, கொளுத்திய அக்கினியில் அந்தக் குறிக்கப்பட்ட இடங்களில் உள்ள சல்யாதி முதலிய சகல தோஷங்களையும் அந்த இடங்களிலுள்ள துர்நாற்றம் முதலியவைகள் நீங்குதற்பொருட்டும், மேற்குறித்த இடங்கள்தோறுமுள்ள அசுத்தத்தை நீக்குதற்பொருட்டும் பரியக்கினிகரணமுஞ் செய்து அதன்பின் தலசுத்தியின் பொருட்டு புண்ணியாக, பஞ்சகவ்வியத்தினால் புரோக்ஷணமும் செய்து, வாஸ்து புருஷனைச் சந்தோஷப்படுத்துவது முறை எனவே வாஸ்து புருஷனை நித்திரை விட்டெழுப்புதல் முதலிய நித்திய கருமங்களை முடித்து அந்த வாஸ்து புருஷன் மகிழ்ந்து, அந்தப்பலி ஏற்ற தன்மையினால் அந்த வாஸ்து புருஷனுடைய உத்தரவின்படி குறித்த இடத்தைப் பெறுதலே வாஸ்து சாந்தியாகும்.

## நவக்கிரகயாகம்

கிரகயக்ஞம் என்பது நவக்கிரகங்களுக்காகச் செய்யப்படும் யாகமாகும். இந்தக் கிரகயக்ஞமானது சுபகாரியங்கள் நிகழுதற்கு முன்பாக நிகழும் சில அசுபகாரியங்களின் பின்பு செய்யப்படுகின்ற யக்ஞமாகும். எனவே சுபகாரியங்களாகிய பிரதிட்டை, சம்புரோக்ஷணை, சௌளம், உபநயனம், விவாகம் முதலாகியவைகளிலும் கிரகப்பிரவேசம், வாஸ்து நிர்ணயம், மஹாரோகசாந்தி, ஆயுஷ்ய ஓமம், முதலாகச் சொல்லப்படுகின்ற சுபகாரியங்களிலே நவக்கிரகயக்ஞம் போன்ற கிரகயாகம் சொல்லப்பட்டபடியாலும், இங்கே எடுத்துக் கொண்ட பிரதிட்டா சம்புரோக்ஷணைகளிலும் விசேஷமாகச் சொல்லப்பட்டபடியாலும், குறித்த முகூர்த்தங்களிலுள்ள நவக்கிரகதோஷ பரிகாரார்த்தமாகச் செய்யப்படுவது. இதனையே நவக்கிரக ஓமம் என்று சொல்லுவர். யஜுர்வேதம் கண்வஸம்ஹிதையில் 29 அத்தியாயத்தில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. இந்த வக்கிரமந்திரங்களினால் மிகப்பெரிய கஷ்டங்களிலிருந்து விடுபடுவதுடன் மேற்படி, சோதிடம், விஷ்ணுதர்மோத்திரம், உருத்திர யாமளம், பார்ஹஸ்பத்தியம், ஆகமங்கள், இருக்குவேதஸம்கிதை, முதலாகிய நூல்களில் விரிவாகச் சொல்லியுள்ளது. ஆகையினால் சுபகாரியங்களில், நவக்கிர ஓமம் செய்யற் பாலனவாகும். இந்த நவக்கிரக ஓமத்துக்காக, நவக்கிரக மண்டலம், கும்பம், அக்கினி முதலியவைகளில் நவக்கிரகங்களைப் பூசித்து அந்த அந்தக் கிரகங்களுக்குரிய தானியம், ஓமத்துக்குரிய சமித்துவகைகள், தானியவகைகள், அன்னவகைகள், நெற்பொரி, ஆகிய இவைகளினால் மேற்படி நவக்கிரகங்களுக்கு விசேஷமாக ஓமங்களைச்செய்து பூர்ணாகுதி முதலியவைகளை முடித்துக்கொண்டு முகூர்த்தத்தில் குறித்த பரிகாரமாகவுள்ள கிரகங்களுக்கு விசேஷமாக தானங்களும் நவக்கிரதானங்களும் பிராமண போசனமும் முடித்ததன் பின்பு நிகழ்வது, நிகழ்கின்ற பலாபலன்களுக்கும் இந்தப் பூலோகத்திலுள்ள சகல உத்பாதங்களுக்கும், தேச, கால, வர்த்தமானங்களுக்கும் இக்கிரகங்களே பலாபலனைக் கொடுக்கின்ற தன்மையினாலும் உலகத்துக்கு யுத்தம், மகாரோகம், துர்பிக்ஷம், உத்பாதம், கால மிருத்யு, அபமிருத்யு முதலியனவும் உண்டாக இக்கிரகங்களே காரணமான தன்மையினாலும் இங்கே சுபகாரியமாகிய பிரதிட்டை, சம்புரோக்ஷணை முதலிய கிரியாகாலங்களில் நவக்கிரக யக்ஞம் அவசியம் செய்யவேண்டுமென்று சாஸ்திரங்கள் கூறுகின்றபடியால் இந்தக்கிரக யக்ஞம் செய்தல் வேண்டும்.

## மிருத்சங்கிரகணம்

மிருத்சங்கிரகணம் :- மிருத் என்றால் மண், சங்கிரகணம் என்றால் எடுத்தல். ஆகையினால் இதற்கு மண் எடுத்தல் என்பது பொருள். பிரதிட்டை, சம்புரோக்ஷணை உத்ஸவம், மஹாஸ்நபனம், தீக்ஷை, விவாகம், சௌளம், உபநயனம், முதலான சுபகாரியங்கள் நடக்கின்ற காலத்திலே, அங்குரார்ப்பணக்கிரியை செய்தல் இன்றியமையாத தன்மையினால் அங்குரார்ப்பணம் காரணமாக சுத்தமான இடத்தில் மண் எடுத்தல் வேண்டும். இதனையே மிருத்சங்கிரகணம் என்று சொல்லுவர்.

சுத்தமான இடங்களாவன : நதிதீரம், தடாகக்கரை, மலையடிவாரம், தெர்ப்பையடி, வில்வமரத்தடி, புஷ்பமரத்தடி, புண்ணியத்தலம், சிறுமலைகள் உள்ள இடங்கள், பர்வதமுள்ள இடங்கள், பசுமாடு கட்டுகின்ற இடம், வயல் முதலாகிய சுத்தமான இடங்கள், திருநந்தவனம், இவைகள் இல்லாதவிடத்து குறித்த ஆலயத்திலுள்ள நந்தவனத்திலும் புஷ்பமரத்தடியிலும் வடக்குக் கிழக்கு முதலான சுத்தமான வீதிகளிலும் உள்ள இடத்தில் மண்ணை எடுக்கலாம். சிவாசாரியர் மகாதேவனுடைய ஆக்ஞையினாலே அஸ்த்திரதேவர் சகிதம் வாத்திய கோஷத்துடன், வீதிப்பிரதட்சணம் செய்து குறித்த இடத்தில் விக்னேசுர பூசை புண்ணியாகம் செய்து வாஸ்து பிரம்மாவுக்கும், பூமிதேவிக்கும், மண்டலம் செய்து

அம்மண்டலத்தில் பிரமாவையும் பூமிதேவியையும் பூசை செய்து ஸப்தவாரிதியை கும்பத்திலும் பூசித்து அதன்பின்பு மண்வெட்டியாவது குந்தாலியாவது எடுத்து அதின் சுத்தியின் பொருட்டு தைலம், மாவகை, பால், இளநீர், அபிஷேகக்கூட்டு பன்னீர் இவைகளினுலே அபிஷேகம் செய்து அந்த மண்வெட்டியை கூர்ச்சம், மாவிலை, புஷ்பமாலை இவைகளால் அலங்கரித்து அந்த மண்வெட்டியிலுள்ள கூர்ச்சத்தில் அதிதேவதையைப் பூசித்து பலதாம்பூலம் நிவேதித்து நீராஞ்சனஞ் செய்து பூமிதேவியையும் வாஸ்துப் பிரம்மாவையும் இந்திராதி லோக பாலகரையும் தேவகாரியத்தின்பொருட்டாக "நான் இவ்விடத்தில் மண் எடுக்கப் போகின்றேன். அதற்கு நீங்கள் அனுக்கிரகம் செய்யவேண்டு" மென்று பிரார்த்தனை செய்து பூமிதேவியிடத்தில் மூன்றுமுறை மண்வெட்டியினுல் மண்ணை வெட்டி எடுத்து அந்த மண்ணைப் பட்டு வஸ்திரத்தினுல் மூடி சம்ரட்சணை செய்த பின்பு மேற்படி மண்வெட்டிய இடத்தில் மண்வெட்டியினுல் பூமியைச் சமதலமாகச் செய்து வெட்டிய தோஷம் நீங்கும் பொருட்டு நவதானியங்கள் தூவி ஸப்தவாரிதி கும்பங்களினுல் அபிஷேகம்செய்து பூமியைச் சுத்தம் செய்தல் வேண்டும். வெட்டியெடுத்த மண்ணுடன் ஆலயத்திற்குச் சென்று அந்த மண்ணை அங்குரார்ப்பணத்தின் பொருட்டு எடுத்தல் வேண்டும். இந்தக் கிரியை சாயங்காலத்தில் செய்தல் உத்தமமாகும். சூரியரஸ்மியால் பூமியின் சீதோஷ்ணநிலை சமப்படுவது இருசந்தி வேளைகளிலேதான். அவற்றுள் விசேஷமானது மாலைவேளையே. ஆதலினுல்தான் மிருத்சங்கிரகணம் மாலையில் செய்வதே விசேஷம் என ஆகமங்கள் கூறியுள்ளன.

# அங்குரார்ப்பணம்

அங்குரார்ப்பணம்:- அங்குரம் என்ருல் நெல் முதலிய தானியத்தின் முளைகள், அர்ப்பணம் இடுதல், எனவே முளையிடுதல் என்பது இதன் பொருள். எதற்காக முளையிடுதல் என்ருல் குறித்த சுபகருமங்கள் செய்தற்கு முன்பாக அதாவது 11, 9, 7, 5, என்கின்ற நாள்களுக்கு முன்பாக மங்களாங்குரம் இடுதல் என்பதே அங்குரார்ப்பணம் என்று சொல்லப்படும். மிருத்சங்கிரகணத்தில் குறிக்கப்பட்ட பிரதிட்டை சம்புரோக்ஷணை, உற்சவம், விவாகம் முதலாகிய இன்னும் அநேக சுபகருமங்கள் நடக்கும்பொழுது மங்களாங்குரம் இடுதல் வழக்கம். இதனைக் குறிக்கவே அங்குரார்ப்பணம் என்று சொல்லப்பட்டது. இந்த அங்குரார்ப்பணம், ஆலயங்களில் பிரதிஷ்டை, ஸம்புரோக்ஷணை உத்ஸவம் முதலான யாகக்கிரியை ஆரம்பிக்குமுன் ஒற்றித்த தினங்களில் பிரதான யாகத்துக்கு வெளியே வாயுதிக்கிலாவது, நைருதிதிக்கிலாவது, ஈசானதிக்கிலாவது மேடைசெய்து அந்த மேடையில் ஸஸ்யாதிபதியாகிய சந்திரனுக்கும் அவனது மனைவிமாராகிய கிருத்திகை, ரோகிணி இவர்களுக்கு இரண்டு கும்பங்களுமாக ஆக மூன்று கும்பங்கள் வைத்து அமிருத கலைகளைக் கொடுக்கின்றவரும், ஸஸ்யாதிபதியுமாகிய அமிர்தேஸ்வரனை நடுக்கும்பத்தில் ஆவாகித்து மற்றைய இரண்டு கும்பங்களிலும் கிருத்திகை, ரோகிணி ஆகிய இரு மனைவியரையும் பூசித்து பாலிகை, சராவம், கடிகா என்கின்ற பாத்திரங்களில் முன்னே மிருத்சங்கிரணத்தில் எடுத்த மண்ணுடன் நவதானியங்களும் கலந்த ஏனைய மண்ணுடன் பாலிகையிடுதல் முறை. 40 பாலிகை உத்தமம். 24 பாலிகை மத்திமம். 16 பாலிகை அதமம். அதமத்தில் உத்தமம் 12 பாலிகை. வைதீகத்தில் குறித்த பிரகாரம் 5 பாலிகையும் (பஞ்சபாலிகா) கூறியுள்ளபடியால் இங்கே ஆகமங்களில் கூறிய பிரகாரமான பாலிகைகளை அரசமிலையுடன் மிருத்சங்கிரணத்திலே எடுத்த அந்த மண்ணை மேற்படி பாலிகைகளில் இட்டு, நிறைத்து, அந்தக் கும்பங்களைச் சூழவர நான்கு திக்கிலுங் கிரமமாக வைத்து, விக்னேஸ்வர பூசை, பஞ்சகவ்யம், புண்ணியாகம் முதலிய கிரியைகளை சிவாசார்யரானவர் செய்து மேற்படி மூன்று கும்பங்களுக்குப் பூசை செய்து நைவேத்தியம் பலதாம்பூலம் முதலிய இவைகளுடன் பூசை முடித்து நவதானியங்களை ஒரு பாத்திரத்தில் பாலுடன் கலந்து வைத்து, அந்த நவதானியங்களுக்குப் பூசை செய்து ஒஷதி சூக்தம் ஜபம் செய்து பாலுடன் கூடிய நவதானியத்தை ஈசான முதலாகிய திக்குகளிலுள்ள சூழவைக்கப்பெற்ற பாலிகைகளில் வேதமந்திரம் சொல்லி மங்களகரமான இவைகளை பிராமணர்கள் அல்லது பிராமணச்சுமங்கலிகள் இவர்களைக்கொண்டு பீஜாவாபனம் (நவதானியம்) வித்து இடுதல் ஆகிய கிரியைகளைச் செய்து அமிர்தகலசத்தில் உள்ள தீர்த்தத்தினுல் முளைப்பாலிகைகளை நனைத்து, மறுபடியும் பூசைசெய்வதென்பதே அங்குரார்ப்பணம். இந்த அங்குரார்ப்பணக் கிரியைகள் குறித்த கால எல்லை முடியும் வரைக்கும் நாள்தோறும் காலை, மாலை ஆகிய இரண்டு நேரங்களிலும் பூசைகள் செய்ய வேண்டும். (பீஜாவாபனம் முதலாவது நாள் அன்று மாத்திரம் செயதல்) இவ்வாறு செய்கின்ற தன்மையினுல் அந்தப் பாலிகைகளில் உள்ள பயிர்கள் மிகவும் செழித்து வளருமேயானுல் எடுத்த சுபகருமங்கள் மிகவுஞ் சிறப்பாக இருக்கும் என்று பொருள். பயிர்மிகவும் குறைந்தோ இல்லாமலோ இருந்தால் பிராயச்சித்த ஓமம் செய்தல் வேண்டும்.

இதனுலே குறித்த சுபகருமங்களின் விளைவுகளையறியலாம். சுபகருமங்களில் இந்தக்கிரியை அவசியம் செய்தற்பாலதாகும். இப்படிச் செய்தலே அங்குரார்ப்பணம் என்று சொல்லப்படும். இந்த அங்குரார்ப்பணம் ஒரு ஆலயத்தில் பிரதானமூர்த்தி முதலாகிய பரிவாரமூர்த்திகளுக்கும் பல யாகங்கள் வைத்தாலும் பிரதானயாகத்தில் மட்டும் அங்குரம் வைக்கவும். அங்குரத்துக்குள்ளே இன்னொரு அங்குரம் வைத்தல் கூடாது. ஆகையினுல் பூர்வாங்கமான கிரியைகள் எல்லாம் தனித்தனி ஒவ்வொன்ருக செய்தல் என்பதையே ஆகமங்கள் கூறுகின்றன. யாகத்துக்குள்ளே அங்குரம் வைக்கப் பிரமாணங்களோ பதவின்னியாசமோ கிடையாது. உற்சவகாலங்களில் ஆசார்ய சம்பிரதாயமாகவும் ஆன்ருேர் ஆசாரமாகவும் வழங்கி வருகின்றது அது பிரமாணமாகாது. மேற்படி பயிர்கள் வளர்ந்து வருகின்ற இலக்ஷணங்களை ஆகமங்கள் விரிவாகக் கூறுகின்றன. அதனை விவரிக்கவில்லை. அட்டமங்கலப் பொருள்களில் முளைப்பாலிகையும் ஒன்ருகும்.

## ஆச்சார்ய வரணம்

ஆச்சார்ய வரணம் : சிவாசார்யர்களை இன்ன இன்ன யாகத்துக்காக என்று நியமித்தலே ஆச்சாரிய வரணம். ஆகையினுலே சிவாசார்யர்கள் பஞ்சரிஷி கோத்திரத்தில் பிறந்தவர்களாகியும் வேதசிவாகமங்களில் கூறியபடி நன்கு இலக்ஷணங்கள் பொருந்தியவர்களாகியும் இருத்தல் வேண்டும். சிவாசார்யர்கள் சிவாகமங்களில் உள்ள திரிபதார்த்தங்களை நன்கு கற்று உணர்ந்தவர்களாயும் சமய, விசேஷ நிர்வாணதீக்ஷை, ஆச்சார்யாபிஷேகம் இவைகள் செய்யப்பெற்றவர்களாயும் மேற்படி சைவாகமங்களை ஓதி உணர்ந்து அவைகளால் உணர்த்தப்படும் நான்கு பாதங்களையும் அனுஷ்டிப்பவர்களாயும் ஞான முதலிய நான்கினையும் கற்றுத் தேர்ந்தவர்களாயும் அவைகளை உணர்த்தும் சைவாகமங்களை ஓதினவர்களாயும் ஓதுவிப்பவர்களாயும் இருத்தல் வேண்டும். சிவதீக்ஷை பெற்ற சிவாசாரியர்கள், பிராமணர் முதலிய நான்கு வருணத்தார்களுக்கும் குருவாகத் தகுந்தவர்கள். ஆகையினுல் அவர்கள் ஆன்மார்த்தம் பரார்த்தம் ஆகிய இரண்டையும் பயபக்தியுடன் கிரியாகாண்டத்தைச் செவ்வனே நடாத்துகின்றவர்களாகியும் வேதாகமத்திலுள்ள பிரகாரம் நித்திய பூசை, உற்சவம் முதலியனவற்றைச் செய்பவர்களாகியும் பரார்த்தத்திலும் விசேஷமாக பிரதிட்டை, சம்புரோக்ஷணை உற்சவம், பிராயச்சித்தம் செய்பவர்களாகியும் சுருதி, யுக்தி, அனுபவம் ஆகிய இவைகளில் மேம்பட்டவர்களாகியும் சுபகருமங்களுக்காகவும் பாரம்பரியத்துக்காகவும் அவர்கள் இல்லற தருமத்தில் இருப்பவர்களாகியும் வேதமோதல் முதலிய ஆறு தொழில்களை உடையவர்களாகியும் ஆகவனியம், கார்கபத்தியம், தக்ஷிணக்கினி என்று சொல்லப்படுகின்ற மூன்று அக்கினிகளை வளர்ப்பவர்களாகியும் நித்திய கர்மானுஷ்டானங்களையும் ஆன்மார்த்தம் பரார்த்தமாகிய இவைகளை லோபமின்றிச் செவ்வனே செய்பவர்களாகியும் குருபாரம்பரியக் கிரமமாக அவைகளைக் குருமுகமாகக் கற்றுணர்ந்தவர்களாயும் கற்றபடி ஒழுகுபவர்களாயும் சந்தேகங்கொண்டு அஞ்ஞானத்தினுல் விபரீதப்பொருள்களை உணராதவர்களாகியும் குரு சிஷ்ய முறைப்படி விளங்குபவர்களாகியும் குறித்த பத்ததிப்பிரகாரமான கிரியாகாண்டம் முதலிய நான்கினையும் நன்குணர்ந்தவர்களாகிய இவர்களை அரசனுவது அல்லது தர்மகர்த்தாவாவது நன்கு தேர்ந்து எடுத்து அவர்களைக்கொண்டு ஆன்மார்த்தம், பரார்த்தமாகிய இவைகளைச் செய்வித்தல் வேண்டும். ஆகையினுல் மேற்கூறிய இலக்ஷணங்கள் பொருந்திய சிவாசார்யர்களைக்கொண்டு பரார்த்த விஷயங்களை செவ்வனே நடத்தல் வேண்டும். குரு, லிங்கம், சங்கமம் ஆகிய இந்த மூன்றினுள் முதலில் குருவைக் கூறினபடியால் குருவின்றி எக்காரியமும் நிகழா என்பது பெற்ரும். ஆகையினுல் சிவாசாரியர்களும் இவைகளை நன்குணர்ந்து வேதாகமங்களைப் படித்து நன்கு ஒழுகுதல் வேண்டற்பாலதாகும். அவர்களுள் அழுக்காறு, அவா, பிறரைப்பழித்தல், கோள் சொல்லுதல், தூற்றுதல், பேராசை முதலாகிய இழிகுணங்கள் இல்லாதவர்களாகியும் சீவகாருண்ணியமே குடிகொண்டவர்களாகியும் சிவபக்தி, சிவபூசை முதலியவைகளிலும் சிவபுராணங்களிலும் தேவார திருவாசக முதலியவைகளிலும் பெரிய புராணத்திலும் காந்தம் முதலிய பதினெண் புராணங்களிலும் மிகுந்த பக்தி சிரத்தையுடையவர்களாகியும் அதனைப் படிப்பவர்களாகியும் உள்ள சிவாசார்யர்களைத் தேர்ந்து எடுத்ததன் பின்னர் சிவாசாரியர்களுக்குள்ளே மிகவும் விசேஷமாகச் சுப இலக்ஷணங்கள் பொருந்தியவர்களாகியும் அங்கயீனம் முதலிய குற்றங்கள் இல்லாதவர்களாகியும் பிரதிட்டாகிரியைகளைச் செவ்வையாக நடாத்துதற்கு ஏற்ற சக்தியுடையவர்களை எடுத்தல் வேண்டும் அதன்பின்பு சிவாசார்யர்கள் எல்லாரும் குறித்த காலத்திற்குமுன் நித்திய கர்மானுஷ்டானங்களை முடித்துக்கொண்டு ஆலயத்துக்கு வந்து சாதக, போதக, இருத்துவிக்குகள், பரிவாரமூர்த்திக்குரிய சிவாசார்யர்கள் எல்லாரும் தங்கள் தங்கள் உதவியாக உள்ள சாதக போதக, பரிசாரகர்கள் ஆகிய இவர்களுடன் பிரதானமூர்த்தியினிடத்துச் சென்று ஆராதனை செய்து மஹாதேவனுகிய சிவனுடைய உத்தரவுடன் ஏனைய பரி

வாரமூர்த்திகளுடைய உத்தரவையும் பெற்று ஆஸ்த்தான மண்டபத்திலிருந்து விக்னேஸ்வர பூசை, புண்ணியாகம், ஸ்நானகர்மார்த்தம், ஸ்தாபிததீர்த்தபூசை செய்ததன்பின் ஆயுஷ்கர்மம் என்ற கிரியை செய்ததன் பின்பு எல்லாச் சிவாசாரியர்களும் மஞ்சள் முதலிய ஸ்நானப்பொடியுடனும் திருப்பொற்சுண்ணத்துடனும் கோமயம், மிருத்துவகை, நெய் முதலியவைகளால் ஸ்நானம் முடித்ததன்பின் மேற்படி பஞ்சகவ்யபிராசனமும் புண்ணியாக தீர்த்த ஸ்நானமும் முடித்துக்கொண்டு பஞ்சகச்ச பஞ்சாங்கபூஷணம் முதலியவைகளுடன் திரும்பவும் ஆஸ்த்தான மண்டபத்தை அடைதல் வேண்டும். அரசனுவது அல்லது தர்மகர்த்தாவாவது சந்தனம், பன்னீர், விபூதி, மாலை, தாம்பூலம், ஆராத்திரிகம் இவைகளினுல் இவர்களைப் பூசித்து அச்சிவாச்சார்யர்களுக்குள்ளே வயது, அனுபவம், குருபாரம்பரியம் இவைகள் பொருந்திய ஒருவரை பிரதான சிவாச்சார்யராக நியமித்து ஏனைய பரிவாரமூர்த்திகளுக்கும் அவ்வாருகவே ஏனைய சிவாச்சாரியர்களையும் நியமித்தலாகிய ஆசார்யவரணத்தையும் செய்து முடித்ததன்பின்பு வாத்திய சகிதமாக மூலமூர்த்தி முதலியவைகளை பிரதான சிவாச்சார்யார் முதலாக அந்த அந்த மூர்த்திக்குரியவர்களைக் கொண்டு விசேஷ அனுக்ஞை பெற்றுக்கொண்டு ஆஸ்த்தான மண்டபம் வந்து மேற்படி அரசனே அல்லது தர்மகர்த்தா முதலியவர்களுக்கு வேண்டிய உபசரணைகள் விபூதிப்பிரசாதம் முதலியன வழங்கி வயதினுல் முதிர்ந்த பிராமணேத்தமர்களை வணங்கியும் அவர்களுடைய ஆசீர்வாதத்தை எல்லாச்சிவாச்சார்யர்களும் பெற்று சிவனுடைய அனுக்கிரகத்தையும் பெற்று அந்தக் கிராம ஸ்தலமூர்த்தியினுடைய அனுமதியும் அவரை வணங்கி தத்தம்மிடங்களில் செல்வார்களாக. இதுவே ஆச்சாரியவரணமாகும். குரு என்பவர் ஐந்து வகையானவர்கள். அவர்கள்:- தந்தை, தாய், வித்தியாகுரு, தீக்ஷாகுரு, ஞானகுரு என்கின்றவர்கள். அந்த ஐங்குரவர்களில் இங்கே கூறப்பட்டது கிரியாகாண்டத்துக்குரிய தீக்ஷாகுருவாகுமென்று உணர்க.

குரு என்ற சொல்லின் பொருள் யாதெனில் கு: என்பது மலம். மலமென்ருல் ஆணவம், கர்மம், மாயை ஆகிய மும்மலங்களினது வலிமைகளை நீக்கி, ரு: என்பது கொடுத்தல், எதைக் கொடுத்தல் எனில் சிவஞானத்தைக் கொடுத்தலாகும். ஆனதன்மையினுல் குரு என்கின்ற காரணப் பெயரைப் பெற்ருர்கள் என்று உணர்க.

## இரக்ஷாபந்தனம்

இரக்ஷாபந்தனம் என்பதன் பொருள் இரட்சித்தற்பொருட்டு கட்டப்படும் காப்பு என்பதாகும். இந்த இரட்சாபந்தனம் பல வகையானது. அதில் குறிக்கோளை முன்னிட்டு கட்டப்படுவது ஒருவகை. குறிக்கோள் என்னவென்ருல் பிரதிட்டாதி கிரியாகாண்டத்துக்குரிய இரக்ஷாபந்தனம் ஆகும். ஆதலினுலே இந்த இரக்ஷாபந்தனமானது, பிரதான சிவாச்சாரியர் முதல் கோயிலில் உள்ள சகல கைங்கரியபரர்களுக்கும் அரசன் அல்லது தர்மகர்த்தாவாகிய இவர்களுக்கும் உரியதாகும். இந்த இரட்சாபந்தனம் பலவகையான குறிக்கோளை பொருந்தி இருப்பினும் பிரதிட்டை, சம்புரோக்ஷணை, உற்சவம் பிராயச்சித்தமாகிய இந்தக் கிரியைகளைச் செய்யும்போது அதன்முன் அங்கமாகவுள்ள அனுக்ஞை முதலிய கிரியைகளோடு சேர்ந்த கிரியையாகும். ஆகையினுலே பிரதானசிவாசார்யர் முதலாகச் சொல்லப்பட்ட ஏனைய சிவா சார்யர்கள் எல்லாருமாக இந்த இரக்ஷாபந்தனக் கிரியைக்கு உரியவர்கள் அவர்களுடன் பிரதான சிவாசாரியானவர் ஆலயத்திலுள்ள ஆஸ்தான மண்டபத்தை அடைந்து மேற்படி சிவாக்ஞையினுலே இரட்சாபந்தனத்துக்குரிய சகல திரவியங்களையும் வரவழைத்து, அதற்குரிய இடத்தில் விக்கினேஸ்வர பூசை, பஞ்சகவ்வியம், புண்ணியாகம் இவைகளை சங்கல்பபூர்வமாக செய்து முடித்து இரட்சாபந்தனத்துக்குரிய திரவியங்களை மேற்படி புண்ணியாக ஜலத்தினுல் தெளித்து சுவர்ணத்தினுலும், வெள்ளியினுலும், பட்டு நூலினுலும் அல்லது பருத்தி நூலினுலும் செய்யப்பட்ட மஞ்சள் மாவினுல் தடவப்பெற்ற சூத்திரத்தில் இரக்ஷாபந்தன விதிப்படி பூசித்து ரக்ஷையின் பொருட்டு, பஸ்மத்தினுல் தடவி, பிரதான சிவாசாரியார் அதற்குரிய பூசைகளை முறைப்படி செய்து தூப தீபங் காட்டி மஹாதேவனுக்கு விஞ்ஞாபித்து இன்று தொடக்கம் குறித்த கிரியையானது முடியும் வரைக்கும் இந்த இரக்ஷா சூத்திரம் என்னுல் கட்டப்படுகிறது. ஆனதினுல் ஆசாரியனுகிய எனக்கும் மற்றைய சிவாசாரியர்கட்கும் கட்டுவது எதற்காகவென்ருல் தொடங்கப்பெற்ற இந்தக் கிரியாகாண்டம் எனக்கு மந்திர சித்தியின் பொருட்டு கட்டப்படுவதும் மற்றையவர்கட்கும் இப்படியே என்றும் அது மாத்திரமன்றி ஆசௌசம் முதலிய வந்து அடையாவண்ணம் கட்டுவதாகும். மூலமூர்த்தி முதலிய பரிவார மூர்த்திகளுக்கும் தேவர்களுக்கு வலக்கையிலும், தேவிமார்களுக்கு இடக்கையிலும், சிவலிங்கத்துக்கு உருத்திரபாகத்திலும், ஆவுடையாருக்கு நாளத்திலும், பலிபீடத்துக்கு நாளத்திலும், சூலத்துக்கு மத்திய பத்திரத்திலும், மண்டபத்துக்கும், வீட்டுக்கும் தூணிலும், விருஷபத்துக்குக் கொம்பிலும், இரதத்திற்கு, தூபிக்கும், கோபுரம் குட்மளத்திலும், துவஜஸ்தம்பத்துக்கு இருதயத்தானமாகிய சதுரமான பெட்டியின் மேற்பக்கத்

திலுமாக இந்த சிறப்பு விதி பொருந்திய இடங்களிலே இரக்ஷா சூத்திரம் கட்ட வேண்டுமென்று ஆகமங்களில் சொல்லப்பட்டது. பெண்களுக்குக் கட்டுவது பெண்களது இடக்கையில் மணிக்கட்டுக்கு மேலே.

பெண்களுக்கு மூன்று காரியங்களுக்கு மாத்திரம் இடதுகையே. அவையாவன :— காப்புக் கட்டுதல், நாடி பரீக்ஷை செய்தல், கைரேகை பார்த்தல் ஆகியவற்றுக்கே இடக்கை குறிக்கப்பட்டுள்ளது. பவித்திரம் தரித்தல், ஆசமனம், பூசை செய்தல், இவைகள் எல்லாம் வலக்கையினுல் என்று ஆகமங்களில் சொல்லப்பட்டது பெண்களுக்கு மாத்திரம் ரக்ஷா சூத்திரமாகிய காப்புக் கட்டுதல் இடக்கையிலேதான்.

குறித்த காரியம் முடியும் வரைக்கும் இடையூறு இல்லாமல் இருத்தற்பொருட்டு விபூதியையும் இரக்ஷாபந்தன முடிச்சின் மேலே பூசுதல் வேண்டும். இவ்விதமாக பரிவாரமூர்த்தி முதலாகிய சகல மூர்த்திகளுக்கும் இருத்துவிக்குகள். இவர்கட்கும் இரக்ஷாபந்தனம் செய்து முடித்தற் பொருட்டு சிவாசார்யரானவர் இந்தக் கிரியை செய்து முடித்ததன்பின் விசேஷ சந்தி செய்தல் வேண்டும்.

## விசேஷ சந்தி

விசேஷமாக சந்தியா காலத்தில் செய்யப்படும் கிரியைக்கு விசேஷ சந்தி என்று பெயர். இந்த விசேஷ சந்தி செய்வது பிரதிட்டை, சம்புரோக்ஷணை முதலாகச் சொல்லப்படுகின்ற விசேஷ காலங்களிலே சிவாசாரியர்கள் எல்லாருமாக நித்திய கர்மானுஷ்டானங்கள் முதலியவைகளை முடித்துக்கொண்டு குறித்த ஆலயத்தில் பிரவேசித்து ஆஸ்த்தான மண்டபத்தில் வடக்கு முகமாகவேனும் அல்லது கிழக்கு முகமாகவேனும் இருந்து எல்லாச் சிவாசார்யர்களும் விக்கினேஸ்வர பூசை, பஞ்சகவ்விய புண்ணியாகம் முதலியவைகளைச் செய்து முடித்து ஜலபாத்திரம், சந்தனம், அக்ஷதை, எள்ளு, தருப்பை, பவித்திரம், பத்திரம், புஷ்பம் இவைகளை ஒவ்வொருவரும் தனித்தனி வெவ்வேருக வைத்துக்கொண்டு அதன்பின்பு பவித்திர தாரணம், ஆசமனம், பிராணுயாமம், சங்கற்பம் முதலியன செய்து முடித்ததன் பின்பு தர்ப்பணம் செய்தல் வேண்டும். குறிக்கப்பட்ட பெயர்களையுடைய தேவதைகளை சந்தனம், பால், அக்ஷதை, எள்ளு, புஷ்பம், தருப்பை இவைகள் கலந்த நீரினுல் அந்த அந்த தேவதைகளை சந்தோஷப்படுத்துதலையே தர்ப்பணம் என்று சொல்லப்படும். (அந்தத் தர்ப்பணம் மூன்று வகைப்படும். அவையாவன தேவதர்ப்பணம், ரிஷிதர்ப்பணம், பிதிர்தர்ப்பணம் என மூன்று வகைப்படும்.) இனி தத்வங்கள், மந்திரங்கள், கலைகள், புவனங்கள், பதங்கள் ஆகிய இவைகளையுஞ் சேர்த்துச் செய்தலையே விசேஷ சந்தியாகும். இதனைவிட மிருகேந்திர ஆகமத்தில் விசேஷ சந்தியில் தர்ப்பணம் செய்கின்ற விதத்தில் முன்னே சொல்லப்பட்ட மூன்று விதத்துடன் விசேஷமாக வேறு சிலவும் சொல்லப்பட்டுள்ளன. தேவதர்ப்பணம் தேவ தீர்த்தத்தினுல் எனவே இரு கைகளும் சேர்ந்து விரல் நுனிகளால் தீர்த்தம் விடுதல். இப்படி விரல் நுனியினுல் விடுதலையே தேவ தீர்த்தமாகும். ரிஷி தீர்த்தம் என்பது அங்குலிபர்வசந்தியால் தீர்த்தம் விடுதலை ரிஷி தீர்த்தம் என்பர். மானுஷ தீர்த்தம் என்பது கனிஷ்ட மூலாங்குலியினுல் தீர்த்தம் விடுதல். மானவதீர்த்தம் என்று சொல்லப்படும் பூத தீர்த்தம் என்பது வௌஷட் அந்தமாக தர்ப்பணம் செய்தலை, பூத தீர்த்தமென்று சொல்வர். பிதிர்தர்ப்பணம், அநாமிகை அங்குஷ்ட விரல்களின் இடையில் எள்ளுடன் சேர்த்து தாய் தந்தை இல்லாதவர்கள் தர்ப்பணம் செய்தலை பிதிர் தீர்த்தம் எனப்படும். (இதைவிட பிரேத பிதிர்தீர்த்தமும் தர்ப்பணத்தில் சொல்லப்பட்டது). இப்படிச் சில ஆகமங்களில் சொல்லி இருப்பதை இந்த வித்தியாசங்களை விசேஷ சந்திப் பத்ததியில் விரிவாகச் சொல்லியுள்ளது.

## பூதசுத்தி

பூதசுத்தியாவது பஞ்ச சுத்திகளிலொன்று. பிருதிவி முதலிய பஞ்ச பூதங்களாகிய வித்தை உடையதும் படைத்தல், காத்தல்களைச் செய்யும் பிரம விஷ்ணுக்களால் உண்டாக்கப்பெற்ற முளையுடையதும், விருப்பு, வெறுப்பு, சோதிட்டோமம் இது முதலாகிய யாகம் முதலான தருமம் பிரமஹத்தி முதலிய அதர்மம், அநித்தம், துக்கமென்னுமிவற்றிற்குக் காரணமாகிய மோகமென்னும் வேரையுடையதும் சத்தகோடி மஹா மந்திரங்களாலும் அனந்தேசர் முதலிய மந்திரேசர் எண்மர்களாலும் போஷிக்கப்படுவதும் கலை முதலிய தத்துவங்களாகிய நிலையுடையதும், காரணம் தன் மாத்திரைகளாகிய மகாசாகைகளும் ஞானேந்திரியம், கன்மேன்திரியங்களாகிய உபசாகைகளையுடையதும் காரியதன்மாத்திரையாகிய சத்தாதி விடயங்களைப் பற்றும் வடிவாகிய வியாபாரங்களைத் தளிராகவுடையதும், புத்தி குணங்களாகிய தன்மம் ஞான முதலிய எட்டின் விகாரங்களாகிய முன்னூறு பாவங்களின்

கூட்டத்தைப் பூவாகவுடையதும் புத்தி தத்துவத்திற் தோன்றும் சித்தத்தால் அவதானிக்கப் படும் பொருள்களையே பழமாகவுடையதும் புருடனுகிய பறவையினுல் அனுபவிக்கப்படும் போகவிடயமாகிய சரீரத்தையும் போகக்கிரியையின் கர்த்தாவாகிய ஆன்மாவையும் இரச மாகவுடையதும் மேனேச்கும் வேரையுடையதும், கீழ் நோக்கும் விழுதுகளை உடையதுமாகிய ஆலமர ரூபத்தைத் தியானித்து பூரகம், கும்பகம், இரேசகம் என்னுமிவற்றின் பாதி இரட்டைகளால் பஞ்சகலாமந்திரங்களையும் நிவிர்த்தியாதி பஞ்சகலைகளையும், பிருதிவி முதலிய தத்துவங்களோடிருக்கின்ற கந்தம் முதலிய குணங்களின் நிலையோடும் முறைப்படி சேர உச்சரிப்பது ஆகும்.

உச்சரித்தலுக்குரிய முறையாவன அக்ஷரங்களின் ஓசை ஐந்து வகையாக உச்சரிக்கப் படும். அவையாவன: தூலவைகரி, சூக்குமவைகரி, மத்திமை, பச்யந்தி, அதிசூக்குமை என்று சொல்லப்படும் விதமாக உச்சரித்தலாகும். அவை எப்படியெனில் தூலவைகரியாவது யாது? பிறர் செவிக்குக் கேட்கும்படி சொல்வடிவமானது. சூக்குமவைகரி தனக்கு மாத்திரம் கேட்கும்படி சொல்லாக விளங்குவது. மத்திமை என்பது எழுத்துக்கள் பிரிவு படுதலில்லாமல் உயிரினுள்ளே சுட்டுணர்வு எழுதற்கு ஏதுவாய் வைகரிக்குக் காரணமாய் நிற்பது. பச்யந்தி என்பது மத்திமையினும் அதி நுட்பமாய் மயிலின் முட்டையினுள் மயிலினுடைய பல நிறங்கள் அடங்கி நிற்பதுபோல எழுத்துக்களடங்கி நிற்ப உணர்வு பிறத்தற்கு ஏதுவாக உள்ளது. சூக்குமை என்பது யாதெனில் பச்யந்தி முதலிய வாக்கு விகற்பங்களுக்குக் காரணமாய் உயிர் உணர்வதற்கு ஏதுவாய் நாத தத்துவமாய் உள்ளது. இவ்வாறு இலைகள் முதலியன ஒழிந்த பாவனையினுலும் சுத்தாகாசஸ்வரூப பாவனையினுலும் அமிர்த தாரையினுல் நனைக்கப்பட்ட மந்திரமயமான சரீரமுடையவனுகி தன் இருதய கமலத்தில் துவாத சாந்தத்தினின்று சோதி லிங்கத்தை ஆவாகித்து பாவனையினுல் வந்த மலர் முதலியவற்றுல் புறம்பாக அருச்சித்து நாபி குண்டத்து அக்கினியில் ஞானக்கினியை வைத்து ஓமம் செய்து சிவார்ப்பணம் செய்து புறப்பூசையின் பொருட்டு அனுமதி கோடலாகும். இது ஒருவிதமான பூதசுத்தி.

1. இனி ஆகமங்களில் எவ்வாறெனில் பிரதிவீ முதலாகிய ஆகாசமீறுகவுள்ள பஞ்ச பூதங்களையும், அவ்வப்பூதங்களின் நிறமும், குணமும், குறியும், தெய்வமும் ஆகிய இவ்வடிவங்களோடு தியானித்து அந்தந்த பூதங்களுக்குரிய கலாமந்திரங்களோடு முறைப்படி சேர உச்சரித்து அப்பூதங்களை விதிப்படி சுத்தி செய்வதாகும்.

2. ஸ்தான சுத்தியாவது, அஸ்திர மந்திரங்களால் தாளத்திரயஞ் செய்து அங்கு நின்று இடையூறு அகற்றி, அஸ்த்திர மந்திரத்தினுல் எம்மருங்கும் ஜொலிக்கும் அக்கினி வண்ணமாகிய மதிலையும் கவச மந்திரத்தால் அகழையுஞ் செய்து சத்தி மந்திரத்தால் மேலும் கீழும் சத்திகளின் நிறைவாகப் பாவித்து சிவலிங்கத்துக்கு முன் மண்டலமிட்டு பூமிதேவியை சகலாபரண சகிதையாகப் பாவித்து இருதய மந்திரத்திஞல் சந்தனம் முதலியவற்றுல் பூசித்து அஸ்த்திர மந்திரத்தினுல் திக்கு பந்தனம் செய்தலாகும்.

3. திரவிய சுத்தியாவது சுவர்ணம் முதலியவற்றுல் செய்யப்பட்ட அர்க்கிய பாத்திரங்களை சுத்தி செய்து விந்து அமிர்தமாகிய நீரை வௌஷடந்த இருதய மந்திரத்தினுல் மேற்படி அர்க்கிய முதலாகிய பாத்திரங்களில் நிறைத்து அதற்குரிய திரவியங்களையிட்டு பஞ்சப்பிரமம் முதலிய மந்திரங்களினுலே அபிமந்திரித்து திக்குபந்தனம், அவகுண்டனம், தேனுமுத்திரை கொடுத்து அர்க்கிய சலத்தினுல் தன்னையும் ஏனைய திரவியங்களையும் புரோக்ஷித்தலாகும். அபிஷேக தீர்த்தம் முதலியனவற்றையும் புஷ்பங்கள் நைவேத்தியம் முதலியனவற்றையும் சுத்தி செய்தலாகும். இவைகளே திரவியசுத்தி என்று சொல்லப்படும்.

4. மந்திர சுத்தியாவது, பிராசாத மந்திரத்தை உச்சரிக்கிற முறைப்படி உச்சரித்து தன்னில் சிவனை ஆசன மூர்த்தி மூலமாகப் பூசித்து சந்தனத்தினுல் திலகமிட்டு சிவஹஸ்த்தம் செய்து சிவோகம் பாவனை செய்தலாகும்.

5. இனி இலிங்கசுத்தியாவது பரியுஷித பூசையிலுள்ள நிர்மாலியங்களை விலக்கி ஸ்நானத்தின்பொருட்டு பீடத்தில் எழுந்தருளச்செய்து அபிஷேகக்கிரமமாக அபிஷேகம் செய்தலாகும். பஞ்சசுத்திகளை இவ்வாறு செய்தலுக்குப் பூதசுத்தி என்று பெயர்.

## அந்தர்யாகபூசை

அந்தர்யாகபூசையாவது பிருதிவியாதி இந்தப்பூமிமுதல் சுத்தசக்தி தத்துவமீறுகிய கந்தமுதல் பீசமீறுகிய அவயவங்களையுடைய இருதய கமலத்தில் சத்திசிவமாக பாவித்தலே அந்தர்யாக பூசையாகும். இருதயகமலத்தில் சிவனைத்தியானித்து தூலம், சூக்குமம், காரணம், மஹாகாரணம், அனுகாரணம் ஆகிய ஐந்துவிதமாகிய பஞ்சாட்

சரத்தை முறைப்படி ஜபம் செய்து அதன் முடிவில் மஹானுகாரணமும் சத்தகோடி மஹாமந்திரங்களுக்குள்ளே மிகவும் சிறந்ததுமாகிய இருதலைமாணிக்கம் என்னும் காரணப் பெயரையுடையதும் திருவாதவூரடிகளுக்கு பரமாசாரியரால் உபதேசம் செய்யப்பெற்றதும் நான்கு வேதம், இருபத்தெட்டு சைவாகமங்களால் போற்றப்படுவதும் வேதத்திலுள்ள மஹா காயத்திரி மந்திரம் ஜபம் செய்த பலனைக் கொடுப்பதும் ஆகிய முத்தியைக் கொடுக்கும் திரியக்ஷரம் என்று சொல்லப்படுகின்ற மேன்மையையுடையதுமாகிய (வாசிவா என்னும் மந்திரம்) இந்த மஹானுகாரண மந்திரத்தை அஜபா மந்திரத்துடன் ஜபம் செய்து காயத்திரிக்கும் பஞ்சாட்சரத்துக்கும் பேதம் கண்டிலம். இனி மந்திரம் என்பதன் பொருள் என்னை எனில் ம என்பது மனசை (திர) என்பது இரட்சித்தல் ஆனதன்மையினுலும் காயத்திரி என்பது காயகம், நினைத்துப் பாடுகிறவனை எனவே இடைவிடாது தியானம் செய்பவனை (திர) இரட்சிப்பது என்பது பொருளாகும். ஆனதன்மையினுலே காயத்திரியிலுள்ள பர்க்கன் என்ற சொல்லுக்குப் பலர் பலவிதமான கருத்துப்பொருள் கொண்டாலும் இங்கே சிறந்த பொருள் சிவபெருமானையே குறிக்கும் ஆனதன்மையினுலும் காயத்திரிக்கும் பஞ்சாட்சரத்துக்கும் பேதம் கண்டிலம் என்று கடோபநிடதம் சுவேதாசுவரோபநிடதம் அதர்வ சிரோபநிடதங்களில் கூறிய பிரகாரமும் சுவஸ்சநதபைரவாகமத்திலும் மிருகேந்திரம், சர்வஞானோத்தரம், குணம், குணி கூறிய இடத்தில் நிர்குணப் பிரம்மத்தின் லக்ஷணங்கள் கூறப்பட்ட தன்மையினுலும் வாதுளா கமத்திலும் பஞ்சாட்சரப்படலத்தில் இதன் கருத்துக்கள் தெளிவாகக் கூறப்பட்டதன்மையி னுலும் நிர்க்குணப்பிரமம், ஞானகாண்டத்தில் அந்தர்யாகபூசையில் விரிவாகச் சொல்லப்பட்ட தன்மையினுலும் இதனை வடமொழிக் காந்தத்தில் சகளம், நிஷ்களம், சகளநிஷ்களம், என்று நிற்குணப்பிரம்மத்தின் இலக்ஷணங்கள் சொல்லப்பட்ட தன்மையினுலும் பெரியபுராணம், திரு மந்திரம் முதலாகிய நூல்களில் அந்தர்யாகபூசை விரிவாகச் சொல்லப்பட்டபடியாலும் இது போன்ற கிரியாகாண்டத்திலுள்ள பதினெண்பத்ததியிலும் விரிவாகக் கூறின தன்மையினுலும் இந்த அந்தர்யாகபூசையானது பாகியபூசையிலும்பார்க்க மிகவும் விசேஷமுடையது. இந்தப் பூசையானது மஹாஞானிகள் மௌனமாக இருந்து சிவானந்த வெள்ளத்தில் திளைத்துச்செய்யும் பூசையாகும்.

இனிச் சிவஞானபோதம் 9, 10: சூத்திரங்களில் கூறியவாறு காயத்திரி ஸ்ரீ பஞ்சாட் சரத்தையுணர்த்தும். எனவே தூலம், சூக்குமம், காரணம், மஹாகாரணம், அநுகாரணம், திரியக்ஷரம், ஏகாக்ஷரம் என்று வாதுளாகமத்தில் பஞ்சாட்சரப்படலத்தில் சொல்லிய பிர காரமும் சோடசகலாபிராசாத மந்திரத்தையும் மந்திரோச்சாடன பேதங்களால் ஸ்தூலம், சூக்குமம், வைகரி முதலாகிய பேதங்களையும் மாயாந்தோ, நாதாந்தோ, கிருஸ்வ, தீர்க்க, புலத முறையான உச்சாடனக் கிரமங்கள் பொருந்த பராற்பரையாகியும் சூக்குமமாகியும் திக்கெங்கும் செறிந்ததாயும் அமிர்ததாரையாகவும் உள்ளது சிவானந்த ஒளியாகும். சிவனுக்கு ஸ்தூலவடிவம், சூக்குமவடிவம், பரபிரம்ம வடிவம் என மூன்று வகையையுடையது. இவ்வாறு அந்தர்யாகபூசையில் கூறியபடியாலும் இனி ஆத்மாவும் அந்தராத்மாவும் பர மாத்துமாவும் பூதாத்மாவும் தத்துவாத்மாவுமாக பஞ்சாத்துமாக்களையும் பாவித்து இவ்வாறு இருதய கமலத்தில் பரமாத்மாவாகிய பரமசிவத்தைத் தியானித்து மூலாதாரத்துக்கு அதி நாயகமாக உள்ள விக்னேஸ்வரரை தியானித்தும் சுவாதிட்டானத்துக்கு அதிநாயகமாக உள்ள பிரம்மாவைத் தியானித்தும் மணிபூரகத்துக்கு அதிநாயகமாக உள்ள விஷ்ணுவைத் தியானித்தும் அநாகதத்துக்கு அதிநாயகமாகவுள்ள உருத்திரனைத் தியானித்தும் விசுத்திக்கு அதிநாயகமாகவுள்ள மகேஸ்வரனைத்தியானித்தும் ஆக்ஞைக்கு அதிநாயகமாக உள்ள சதா சிவத்தைத் தியானிக்கவேண்டும். மூலாதாரமாக உள்ள திருவாரூர் சுவாதிட்டானமாக உள்ள திருவண்ணமலை, மணிபூரகமாக உள்ள திருவானைக்கா, அநாகத இருதயமாக உள்ள சிதம்பரம், விசுத்தியாக உள்ள திருக்காளத்தி, ஆஞ்ஞை, (முகத்தில்) காசி, பிரமரந்திரம், கயிலை துவாதசாந்தம், மதுரை முதலாகிய அஷ்டதலங்களையும் தியானிக்கவேண்டும். இவைகள் விராட்புருடனுக்குரிய தலமாதலாலும் அந்தர்யாகபூசையில் பரசிவத்தோடு ஏகீபூதபாவனை யினுல் சொல்லப்படுகிறது. மூலமந்திரம் மேதாதிகலோபேதம் என்பது மேதா முதலிய 16 கலைகளோடு கூடியதாக உள்ளது. அவைகளாவன:-

1. மேதகலா 2. இரசகலா 3. விஷகலா 4. பிந்துகலா 2. அர்த்தசந்திரகலா 6. நிரோத கலா 7. நாதகலா 8. நாதாந்தகலா 9. சுசக்திகலா 10. வியாபினீகலா 11. வியோமரூபி கலா 12. அநந்தாகலா 13. அநாகதாகலா 14. அநாசிறிதாகலா 15. சமநாகலா 16. உன் மனுதீதகலா சோடசகலா பிரசாதத்தோடுங் கூடிய மூலமந்திரத்தை தியானித்து பிரசண்ட மார்த்தாண்டோபமம் என்றது உக்கிரமான சூரியனை ஒத்ததாகவும் பிரம்மாதி காரணத்தி யாக்கிரமேண என்றது பிரமா முதலிய காரணேசர்களை விடுவிக்கின்ற முறையினுலே லயாந்த முச்சரன்=லயாந்தஸ்தானமாகிய துவாதசாந்தம் வரையிலும் உச்சரித்து சர்வகர்தாரம்=சர்வ

கர்த்தாவாகிய சிவபெருமானை நிஷ்களம், உருவமில்லா தவரும் விபும் வியாபகராகவும் ஞானு நந்தமயம், ஞானுநந்தமயராகவும் சுவப்பிரகாசம், தானே விளங்குபவராகவும் சஞ்சிந்திய, நன்ருக நினைத்து தன்மயீபூத என்பது ஸோகம்பாவனையினுல் அத்துவைதபாவனையினுல் எனவே அத்துவைதஸ்வரூபியானவனுய் சிருட்டிக்கிரமேண சிருட்டி முறையினுல் துவாசாந் தாத் துவாசசாந்தத்தினின்றும் பதங்கபிங்காபம சூரியனைப்போல பொன்னிறமுடையவராக லலாடேவதாரிய நெற்றிப்புருவமத்தியத்தில் கொண்டுவந்து அவ்விடத்தினின்று நீங்கி சந்திர கோடிசதுர்சம் (மிகவும் உக்கிரமாகிய கோடி சூரியர்களையும் ஒன்ருக ஒருங்கு திரண்டால் உலகில் எவ்விதமாகப் பிரகாசமுள்ளதோ அவ்விதமான உக்கிரம் பொருந்திய உஷ்ணமாக விளங்குகின்ற தன்மையினின்றும் நீங்கி உலகத்திலுள்ள சர்வான்மாக்களையும் இரட்சித்தற் பொருட்டு அதிக கொடூரமான உஷ்ணத்தினின்றும் நீங்கி) கோடிக்கணக்கான சந்திரர்கள் அமிர்தகலைகளோடும் ஒருங்கு திரண்டு வந்தாற்போல உலகத்திலுள்ள சர்வான்மாக்களையும் இரட்சித்தற்பொருட்டு மிகுந்த குளிர்ச்சியாகிய அமிர்தத்தைக் கொடுக்கின்ற பூரணச் சந்திரனை இவ்விடத்தில் வியந்து உவமானமாகக் கூறினுர். உலகத்திலுள்ளவர்கள் சந்திரனிடத்திலே தேய்தல், வளர்தல், முயற்களங்கம் முதலிய பல குறைகள் இருந்தபோதும் அந்தக் குறைகளைப் பாராட்டாது மிகவும் போற்றி வணங்குகின்ற தன்மையினுலும் அந்தச் சந்திரன் பாற்கடலில் அமிர்தகலைகளோடு கூடித் தோற்றிய தன்மையினுல் சந்திரனை உவமானமாகக் கூறினுர். சந்திரனை ஒத்ததாகவும் திர்யக்கு சுதாபிண்டபாண்டுரிததிங் மண்டலம் தியர்த்துவா புறப்படு கின்ற அமிர்தபிண்டம்போல வெண்மையான திக்கு மண்டலம் உடையதாகவும் தியானித்து பிராண பிரவாக வர்த்தமனு!! பிராணன் புறப்படுகின்ற வலநாடி வழியினுல் விநிர்கத்ய புறப் பட்டு லக்ஷயமூர்த்தௌ=காணப்படுகின்ற உருவமாகிய வித்தியாதேஹம் பொருந்திய லிங்கம், கும்பம், தம்பம், விம்பம், அக்கினி என்கின்ற இடங்களில் ஆவாகித்து: அந்தர்யாகபூசையில் மனுேபாவனையாக இவ்வாறு ஆவாகித்துப் பூசை முதலியனவற்றைப் பாவித்து அதன்பின்பு மானசபூசையிலே சந்தனம் முதலிய உபகரணங்கள் பூமி சம்பந்தமானது. ரசம்: சுவை: சம்பந் தமானது: ரூபம்: அக்கினி சம்பந்தமானது, ஸ்பர்சம்: வாயு சம்பந்தமானது, சத்தம்: ஆகாச சம்பந்தமானது. இவைகளுடன் குணத்திரயங்களோடும் பிரகிருதி முதலிய தத்துவங்களோடும் பொருந்தியதாகப் பாவித்து ஸ்தூலதேகசுத்தியின் பொருட்டு மானசமாகத் தியானித்து நாபி யாகிய குண்டத்திலே சுத்தமாயாதத்துவமாகிய குண்டத்தில் இச்சா ஞானக் கிரியை ஆகிய மூன்று மேகலைகளோடு பொருந்தியது ஸுஷும்ன நாடி ஸ்ருக்காகவும் இடா நாடி சிறுவமாகவும் மூலாதாரம்: நெய்ப்பாத்திரமாகவும் ஓமத்திரவியங்களெல்லாம் பிரபஞ்சமாகவும் பிந்துவக் கினி: நாபிகுண்டத்தில் உள்ள அக்கினியாகவும் நெய் அமிர்ததாரையாகவும் ஞானுக்கினிப் பிழம்பு: சோம சூரியாக்கினியாகவும் ஞானுநலம்: அறிவு என்ற அக்கினிப்பிழம்பாகவும் துவாத சாந்தம் வரைக்கும் யோசித்து ஸுஷும்னநாடி வழியாக நாபிகுண்டத்திலுள்ள பிந்துவக் கினியில் அமிர்ததாரையாகிய நெய்யினுல் பூர்ணுகுதியைச் செய்து அதன்பின்பு சமாதிநிலையை அடைந்ததாகப் பாவித்து இரேசகம், பூரக: கும்பம் செய்து பரசிவத்தில் ஒடுங்கினதாகப் பாவித்து பூஜையை தேவனுக்குச் சமர்ப்பித்து இவ்விதமாக மானச ஓமத்தைச் செய்து முடித் தலே அந்தர்யாகபூசையாகும் (பெரியபுராணத்திலே வாயிலார் நாயனுர், குரு, லிங்க, சங்கமம் இந்த மூன்று இடத்திலும் சிவபெருமானிருந்தருள்வார்) எனத் திருவாய்மலர்ந்தருளினுர்.

## ஆத்மபூஜை

சிவாசாரியர்கள் எல்லாருமாகத் தம்மை சிவோகம்பாவனை செய்தலையே அத்மபூசை என்று பெயர். சிவாசாரியர்கள் எல்லாருமாக தம்மனத்துள் ஆசமனம், பிராணுயாமம், சங்கல்பம், அர்க்கியம் உண்டாக்கி அந்த அர்க்கியத்தினுல் தன்னைப் புரோக்ஷித்து தன்னில் சிவனை ஆசன மூர்த்தி மூலமாகப் பூசித்து மற்றைய சிவாசாரியர்கள் தன்னில் தத்தம் மூர்த்தியை ஆசன மூர்த்தி மூலமாகப் பூசித்து பிந்து அமிர்தமானது குளிர்ச்சியடைதற் பொருட்டு சந்தனத்தினுல் லலாடத்தானத்திலிருக்கின்ற அமிர்தபிந்துவைக் காத்தற் பொருட்டும் நிறைந்திருத்தற்பொருட்டும் நெற்றியிலே பொட்டிட்டு சுகந்த சந்தனம் பூசப் பெற்ற தேகத்தையுடையவராய் சிவஹஸ்தம் செய்து மஹாமுத்திரையினுல் தேகம் முழுவதும் சந்தனத்தினுற் பூசி மூலமந்திரஞ்சொல்லி தத்தம் சிரசில் புஷ்பம் வைத்து அஞ்சலி கரத்தனுகி பூசை முடியும்வரைக்கும் மௌனமாக இருந்து சிவோகம் பாவனை செய்ததன் பின்னர் போதகாசாரியருடைய அனுமதிப்படி இன்னெருவர் சிவாசார்யர் வந்து சிவ[illegible]கப்

பாவித்து பூசைசெய்து பின் சந்தனம், மாலை, உஷ்ணீசஷம், பஸ்மம், உருத்திராக்ஷமாலை, உத்தரீயம் இவைகளால் எல்லாரையும் அலங்கரித்து தூப, தீப, ஆராத்திரிகம் செய்து எல்லாச் சிவாச்சாரியர்களும் எழுந்து மூலமூர்த்தியை வேத, மந்திர, புஷ்ப, அஞ்சலி செய்து வணங்கி வீதிப்பிரதக்ஷணம் செய்து தத்தம் கிரியைகளைச் செய்வார்கள். இப்படிச் செய் தலே அந்தர்யாகபூசை என்று சொல்லப்படும்.

கும்பங்களுக்கு நூல் முதலியன சுற்றுதல் முதலாகியவைகளின் தத்துவமான கருத் துக்கள் எவையெனில் முதலில் கும்பத்தோடு சகசமாக இருக்கின்ற மண்ணுனது மாம்ச மாகவும் சுற்றப்பட்ட நூலானது எழுபத்தீராயிரம் நாடி நரம்புகளாகவும் வஸ்த்திர மானது தோலாகவும் கும்பத்துக்கு உள்ளே விடப்பட்ட நீர் ரத்தமாகவும் மேதை என்று சொல்லப்படுகின்ற சப்த தாதுக்களாகவும் கும்பத்துக்குள்ளே போடுகின்ற நவரத்தினம், சுவர்ணம் முதலியவைகள் சுக்கிலமாகவும் அந்தக் கூர்ச்சம் முள்ளந்தண்டாகவும் மாவிலை சடையாகவும் தேங்காய் கபாலமாகவும் வெளியில் கும்பத்துக்கு மேலே போடப்படுகின்ற கூர்ச்சம் மாவிலையாகியவை சடைகளை முடித்த குடுமியாகவும் நியாசங்களோடு கூடிய பிராணப் பிரதிட்டை மந்திரங்கள் சீவனுகவும் சப்ததானியங்கள் முதலானவைகள் ஆசனங்களாகவும் உத்தரீயம், மாலைகள், சுகந்த புஷ்பங்கள் இவை முதலானவைகள் எல்லாம் அலங்காரத் துக்குரிய பொருள்களாகவும் கும்பத்துக்கு மேலே வைக்கப்பட்ட பிரதிமையானது கும்பத்தில் பூசிக்கின்ற அந்த அந்த மூர்த்தியின் பிரதி வடிவமாகவும் இவ்வாருக கும்பத்தினுடைய தத்துவக் கருத்துக்களை நன்ருகப் பாவித்தல் வேண்டும். சாதாரணமாக எல்லாப் பச்சிலை களிலும் மின்சக்தியுள்ளதாலும் விசேஷமாக மாவிலைக்கு அதன்பால் உள்ள ஒருவித நெடி யால் தண்ணீரில் உள்ள கிருமிகளை நாசஞ்செய்யக்கூடிய சக்தியுள்ளதாலும் மந்திரரூபமான கடவுட் தன்மையை பிராணவாயுவோடு கலந்து அங்கு ஆவிர்பவித்த மூர்த்திக்கு அளிக்க ஹேதுவாயுமுள்ளது. இதுபோலவே தர்ப்பைக்கும் மாவிலை முதலியவைகளைவிட மின்காந்தசக்தி மிகக்கூடுதலாயுள்ளதாலேயே இந்து மதத்தில் எல்லாக்கிரியைகளுக்கும் தர்ப்பையை விசேஷமாகச் சொல்லியுள்ளது., அதிலும் கும்பாபிஷேகம் முதலிய கிரியை களிலுந் தர்ப்பையை அதிவிசேஷமாகச் சேர்த்துள்ளார்கள்.

## கடஸ்தாபனம்

கும்பம்:- ஆகமங்களில் கூறியுள்ளபடி தங்கம், வெள்ளி, செம்பு, மிருத்திகை, முதலான வைகளால் செய்ததாயும் உத்தமலக்ஷணங்கள் பொருந்தியதாயும் விதிப்பிரகாரம் முப்புரி நூலால் சுற்றியதாயும் மற்றும் கலச கரகங்களுக்கும் முறையே விதிப்படி நூல் சுற்றி மறுமுறை தூபங்காட்டி வேதமந்திர கோஷத்துடன் சுத்தமான துணியால் வடிகட்டிய நீரை நிரப்பி அந்த ஜலத்தை ரக்ஷிப்பதன் பொருட்டு காத்தல் கடவுளாகிய மகாவிஷ்ணுவை பூஜை செய்து சுகந்த சந்தனம், குங்குமப்பூ, பச்சைக்கற்பூரம், சந்தனம், கோட்டம், தக்கோலம், லவங்கம், இலாமிச்சம்வேர், சாதிக்காய், சமுத்திராப்பச்சை, விஷ்ணுகிராந்தி, கராம்பு, இல வங்கப்பத்திரி, வெட்டிவேர், மருக்கொழுந்து, மரு, சீதேவியார்செங்கழுநீர், தாமரைப்பூ, செங்கழுநீர்ப்பூ, நீலோற்பலப்பூ, ஓரிதழ்த்தாமரை, சண்பகப்பூ, கஸ்தூரி, கோரோசனை, பன்னீர், கங்காதீர்த்தம் இவைகளை அவைகளுக்குரிய வேதமந்திரங்களுடன் திரவியங்களைப் போட்டு முறையே 64, 32, 24, 16 (தற்காலம் 25, 17, 13, 11, 9, 5, 3 வழமையில் வந்துள்ளது) சுத்தஞ்செய்த மாவிலைகளை வைத்து மஞ்சள்பூசிய நல்ல தேங்காய், மாதுளம்பழம், வஸ்திரம், உத்தரியம், உபவீதம் கூர்ச்சம், இவைகளை வைத்து பஹிர்க்கூர்ச்சம், சார்த்தி சுகந்த புஷ்ப மாலை சரம் முதலியவைகளால் அலங்கரித்து பிரதான கும்பத்தில் சூர்ய சந்திர அக்கினி முதலிய கலைகளையும் பிரம்ம விஷ்ணு ருத்திர முதலான மூர்த்திகளையும் ஈசாநாதி பஞ்ச பிரம்மஷடங்க மந்திரங்களால் அததற்குரிய வேதமந்திரங்களால் பூசித்து அந்தந்த மூர்த்திக்கு ஆஸன மூர்த்திகளை பூசித்து பிராணப் பிரதிஷ்டை முதலியசெய்து விதிப்படி விபூதி முதலியவைகளால் ரக்ஷைசெய்து நிவேதனம், ஆரார்த்திகம் செய்து சகல தேவவாத்ய கோஷங்களோடு வீதிப்பிரதக்ஷணம்செய்து அததற்குரிய யாகசாலையில் சேர்ப்பிப்பது கடஸ்தாபனம்.

## யாகபூசை

யாகசாலை நிர்மாணிக்கும் விதங்கள் ஆகமங்களிலே மிகவும் விரிவாகச் சொல்லப் பட்டது. சிவாசார்யருடைய கரப்பிரமாணமாகவும் அல்லது ஆலயங்கள் நிர்மாணித்துள்ள விஸ்தாரத்தில் ஒரு பகுதி யாகத்துக்கென்று சொல்லப்பட்டது. ஆகையினுல் ஆகமங்களின் சூத்திரபேதங்களுக்குத் தகுந்தபடி நீளம், அகலமான சற்சதுரமான ஓர் இடம் என்பது ஆலயத்துக்கு முன்பாகவேனும் கிழக்கு வடக்காகவேனும் யாகத்துக்குரிய இடத்தை நிர்ண யித்து சமசதுரமாக குண்டம், தம்பம் இந்தக்கணக்குகளுக்குப் போதியதாகவே இடத்தை

நிர்ணயித்து உருத்திர சூத்திரம் (64) அல்லது 44, விஷ்ணுசூத்திரம் 34, பிரம்ம சூத்திரம் 24, கணசூத்திரம் 18, கலாசூத்திரம் 16, சதுசஷ்டி சூத்திரம் 64, மனுசூத்திரம் 14, இரவி சூத்திரம் 12, பந்திசூத்திரம் 10, இவ்விதமாக கிழக்கு வடக்காக சூத்திரக்கணக்கின்படி நூல் அடித்து நடுப்பதம் தொடக்கமாக பிரதானவேதிகை, உபவேதிகை, சஞ்சாரபதம், குண்டங்களுக்குரியபதம், பின்பு சஞ்சாரபதம், சதுர்துவாரபதம், பரிவாரகும்பத்தின் உபவேதிக்குரியபதம் முதலாகிய பதவின்னியாசம் செய்து சல்லியாதிதோஷங்களை நிவர்த்தி செய்து வேதிகை முதலானவைகளைக் கட்டி குண்டங்களையும் போட்டு யாகாலங்காரம் செய்து யாகத்துக்குரிய கும்பங்களையெல்லாம் வைத்து இப்படியே மற்றைய பரிவாரமூர்த்திக்கும் கோபுரம், தூபி முதலாகச் சொல்லப்பட்ட பிரதானவைகளுக்கு யாகசாலை செய்தல் வேண்டும். யாகத்திலே முக்கியமாகக் கருதப்படுவது குண்டங்களின் கணக்கேயாகும். எந்த எந்த திக்குகளில் என்னென்ன குண்டங்கள் இருக்கவேண்டுமோ அந்த அந்த திக்கில் அததற்கு உரிய குண்டங்கள் இருத்தல் வேண்டும். அவையாவன யாகத்துக்கு நேர் கிழக்கில்

| | | |
|---|---|---|
| நாற்கோணமான | ... | சதுரஸ்ரகுண்டம் |
| அக்கினி திக்கில் | ... | யோனிகுண்டம் |
| தெற்கில் | ... | அர்த்த சந்திரகுண்டம் |
| நிருதியில் | ... | திரிகோணகுண்டம் |
| மேற்கில் | ... | விருத்தகுண்டம் |
| வாயுதிக்கில் | ... | அறுகோணகுண்டம் |
| வடக்கில் | ... | பத்மகுண்டம் |
| ஈசானத்தில் | ... | எண்கோணகுண்டம் |

பிரதான குண்டம் விருத்தமாகும். அந்தக்குண்டம் கிழக்குக்கும் ஈசானத்துக்குமிடையில் உள்ள குண்டம். இங்கே மேலே குறித்த குண்டங்களெல்லாம் நவகுண்டத்துக்கு சொல்லப்பட்டதாகும். இதைவிட இன்னும் பலவகையானதும் பலவடிவங்கள் பொருந்தியதுமான குண்டங்களும் சொல்லப்பட்டன. இதைவிட சில ஆகமங்களில் காரணம், காமிகம் முதலாகச் சொல்லப்பட்ட ஆகமங்களிலே உத்தமோத்தமமாக 33 குண்டங்களும் மத்திமமாக 25 குண்டங்கள், அதமமாக 17 குண்டங்கள், அதமாதமமாக நவகுண்டம் (9) குண்டங்களும் அதைவிட பஞ்சகுண்டங்களும் ஏககுண்டங்களுமாக யாகத்தில் செய்யும்படியாக சொல்லப்பட்டது. மேலே சொல்லப்பட்ட ஒன்பது விதமான குண்டங்களும் ஒவ்வொரு குண்டத்துக்கும் ஒவ்வொரு விதமான தத்துவக் கருத்தை இனிது எடுத்து விளக்குகின்றன. சர்வசித்தியின்பொருட்டு நாற்கோணம், பிரஜாவிருத்தியின்பொருட்டு யோனியும் அர்த்த சந்திரன் சத்துருக்களை அழிப்பதற்கும் திரிகோணம் சாந்திக்கும் விருத்தம் விருத்தியின் பொருட்டும் அறுகோணம் நோய்கள் நீங்குதற்பொருட்டும் பத்மகுண்டம் வெற்றியின் பொருட்டும் எண்கோணம் புஷ்டியின்பொருட்டும் பயிர்விருத்தியின் பொருட்டும் சர்வசித்தியின்பொருட்டும் சிருஷ்டியின்பொருட்டும் பிரதானமாகும். அது மாத்திரமன்றி அந்த அந்தக் குண்டங்களிலே பூசிக்கின்ற அங்கினி மூர்த்தி மூத்தீசுரர் முதலானவைகளும் இன்னும் அதற்குரிய அதிதேவதையும் பிரத்தியதி தேவதையுமாக மூர்த்திகளும் அட்டமூர்த்தங்களும் அவையாவன: பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம், சூரியன், சந்திரன், ஆன்மா இந்த எட்டுமே (8) அட்டமூர்த்தங்களாகும் ஆனபடியால் கிழக்கு முதலாகிய எட்டுக் குண்டங்களிலும் இந்த அட்டமூர்த்தங்களையே பூசித்தலும் அதற்குரிய அதிதேவதையும் பிரத்தியதிதேவதையுமாகப் பூசித்தலாகும். இப்படிச் செய்தலையே மூர்த்தி, மூர்த்தீசுவரர்கள் என்று பெயராகும். இதன்பின்பு நவாக்கினியின் விபரங்கள். அவையாவன பிரதான குண்டத்தில் சிவாக்கினியும் சதுரமான கிழக்குக் குண்டங்களில் 33 குண்டங்கள் செய்யும் சமயத்தில் நான்கு குண்டத்துக்கும் ஆகவனியாக்கினியும் அர்த்தசந்திரமான தெற்குக்குண்டத்தில் தெட்சிணக்கினியும் பத்மகுண்டமான வடக்கிலிருக்கும் குண்டத்தில் கேவலாக்கினியும் விருத்தகுண்டமான மேற்கில் கார்கபத்தியாக்கினியும் யோனிகுண்டமான அக்கினிதிக்கில் விருத்தாக்கினியும் எண்கோண குண்டமான ஈசானதிக்கில் சாமான்னியாக்கினியும் திரிகோண குண்டமான நிருதியில் யௌவணக்கினியும் அறுகோணமான வாயுகுண்டத்தில் பாலாக்கினியுமாக இந்தவிதமாக நவகுண்டங்கள் முதலாகச் சொல்லப்படுகின்ற ஏனைய சகல குண்டங்களிலும் இவ்விதமான அக்கினிகளைப்பூசித்து அந்த அந்தக் குண்டங்களுக்குரிய சமித்து வகைகள், விசேஷ ஓமத்துக்குரிய சகல திரவியங்களையும் கிரமமாக ஒமஞ்செய்து ஒவ்வொரு காலம்தோறும் பூர்ணகுதி முதலியன செய்து குறித்த யாகத்துக்குரிய நாட்கள் வரையும் இவ்வாறுகவே சகல கிரியைகளையும் செய்து முடித்து அதன்பின்பு மூலஸ்தானத்தில் தீபம், பூர்ணகும்பம் முதலாகிய மங்கலப்பொருள்கள் வைத்து கர்ப்பக்கிரகத்தில் சுபமுகூர்த்தத்தில் பிம்பத்தாபனம், விமானம், கோபுரம் இவைகளுக்குத் தூபிஸ்தாபன முதலியன செய்து கர்ப்பக்கிரகம் முதலிய பரிவாரமூர்த்திகளுக்கும் அட்டபந்தனஞ்செய்து முடித்து னதலாப்பியங்கம் சகல மூர்த்திகளுக்கும் செய்து முடித்து அதன்பின்

கர்ப்பக்கிரஹமான மூலஸ்தானம் பரிவாரமூர்த்திகள் இவைகளுக்கு பஞ்சத்வக்கு, பஞ்சபல்லவம், அட்டமிருத்யு, புண்ணியாகம், பஞ்சகவ்யம் இவை முதலானவைகளால் பிம்பசுத்தி செய்து மூலஸ்தான முதலாகிய பரிவாரமூர்த்திகள் எல்லாச்சுவாமிக்கும் உற்சவமூர்த்திகளுக்கும் இரட்சாபந்தனம் செய்து அதன்பின்பு பூர்வசந்தானமாகிய ஸ்தூலதேகம், சூக்ஷமதேகம், காரணதேகம் முதலாகிய மூன்று தேகங்களையும் இனிது விளக்கிக்காட்டுகின்ற சகல சடத்துவ நியாசம் முதலாகிய அந்த அந்த மூர்த்திக்குரிய நியாசங்கள் எல்லாவற்றையும் சாதக, போதக முதலாகிய இவர்களுடன் விசேஷமான சகல நியாசங்கள் எல்லாவற்றையும் செய்து முடித்துக் கொண்டு பலதாம்பூலம் ஆராத்திரிகஞ் செய்து குறித்த கும்பாபிஷேகத்துக்கு முதல்நாளாகிய இரவிலாவது பகலிலாவது பச்சிமசாந்தானம் செய்தல் வேண்டும்.

## பரிசாகுதி செய்தல்

பரிசாகுதி:- பரிசம் என்பது தீண்டுதல் அல்லது தொடுதல் என்று பெயர். ஆகுதி என்பது பூரணாகுதிசெய்தலாகிய ஓமத்தைக்குறிக்கும் பெயர். அக்கினி, கும்பம், விம்பம் என்று சொல்லப்படுகின்ற மூவகையிடத்துமுள்ள பகவானாகிய மூர்த்தியை நாடீசந்தான வழியாக அக்கினியில் பூர்ணாகுதியை சுவா என்று அக்கினியிலும் ஹா என்று சொல்லி விம்பம் அல்லது இலிங்கம் இவைகளில் அக்கினியிலிருந்து நாடீசந்தானவழியாக கும்பம், விம்பம் இந்த மூன்றிலும் பரிசம் சம்பந்தமாக சாந்திகும்பம் சிறுக்குச்சிறுவ மிச்சமான அமிர்த தாரையாகிய சிவசக்தி என்னும் பெயரையுடைய நெய்யுடன் பிரதான சிவாசாரியார் முதலான இருத்துவிக்குகளுடன் அந்த அந்த குண்டங்களின் பூர்ணாகுதிசெய்த சேஷாச்சியத்துடன் நாடீசந்தான பரிசம் செய்து மூலபிம்பத்தில் சாந்தி கும்பப் புரோக்ஷணம் முதலாக அட்டமூர்த்தங்களையும் பிரமபாகம், விஷ்ணு, பாகம், உருத்திரபாகம் ஆகிய திரிபாகங்களையும் தனித்தனி பூர்ணாகுதிசெய்து எனவே ஒவ்வொரு பாகத்துக்கும் தனித்தனி அட்டமூர்த்தங்களைப் பூசித்தும் ஓமமுஞ்செய்து மிகுதியான நெய்யுடன் அக்கினி, கும்பம், பிம்பம், மூன்றிலும் பரிசித்து மேலே குறித்தபடி பூர்ணாகுதி செய்தலையே பரிசாகுதி என்று சொல்லப்படும். இந்தப்பரிசாகுதி செய்வதற்கு முன்பாகவே யாகபூசையும் விசேஷ ஓமத்திரவியங்களும் தனித்தனியாக வேதமந்திரம் மூலமந்திரம் இவைகளுடன் ஓமங்களைச்செய்து முடித்ததன்மேல் பரிசாகுதி செய்தல் வேண்டும். ஆகையினாலே இவைகளை குற்றமில்லாமல் செய்து முடித்ததன்பின்பு செய்தலே உத்தமமாகும். ஆகையால் நெய் விசேஷசமித்து நாடிசந்தானத்துக்கு சுவர்ணத்தினாலேனும் அல்லது வெள்ளியினாலேனும் செய்த கம்பிகள் வேண்டற்பாலனவாகும். இவைகள் அக்கினிகுண்டத்திலிருந்து கும்பத்துக்கும் கும்பத்திலிருந்து பிம்பத்துக்கும் நாடீசந்தானஞ்செய்ய இருப்பதால் மிகவும் நீளமானதாகவே யாகத்துக்கும் மூலஸ்தானத்துக்கும் தகுந்த நீளமானதாக இருக்கவேண்டும். இடை இடையிலே பின்னப்பட்டவைகள் விலக்கப்பட்டன. ஆகையினாலே பிரதான சிவாசாரியர்களும் மற்றைய யாகத்துக்குரிய சிவாசாரியர்களும் இந்த நாடீசந்தானக் கம்பிகளை முதலில் பரீக்ஷைசெய்து அதன்பின்பு நாடீசந்தானம் செய்தல் வேண்டும். இனி நாடீசந்தானத்துக்கு சிலருடைய அபிப்பிராயம் சுவர்ணக்கம்பி அல்லது வெள்ளிக்கம்பி அல்லது நூல் (ஒரே நூலால் முப்புரியாகச் செய்தது) இவைகளுடன் தர்ப்பைக்கயிறும் பூச்சரப்பந்தும் சேர்த்துச் சிலர் செய்வார்கள். இது ஆசாரிய சம்பிரதாயமாகும் என்றுகொள்க. இதற்குப் பிரமாணமில்லை. இனிமேல் பிரதான குண்டமத்தியில் சிவனும் நாலுதிக்குகளிலும் உள்ள மேல்மேகலைகளில் நிவிர்த்தியாதி நான்கு கலைகளையும் சாந்தியதீதாகலை நடுவிலுமாக நியசித்து குண்டநாபியிலே, குண்டநாபி என்பது குண்டத்தின் நடுவே இருக்கின்ற கமலத்துக்கு குண்டநாபி என்று பெயராகும். ஆகையினாலே குண்டநாபியில் கிரியாசக்தியும் குண்ட உதட்டில் நாதத்தை நியசித்து சிவாசார்யரானவர் கும்பம், அக்கினி, பிம்பம், என ற மூவகையிடத்தும் இருத்துவிக்குகளோடுங்கூட நாடீசந்தானம் செய்தலாகும். நிவிர்த்தியாதி பஞ்சகலைகளுக்கும் பொருள் யாதெனில்:-

நிவிர்த்திகலை:-

1. மண், பெண், பொன், ஆகிய இந்தப் பிரபஞ்சப்பற்றினின்றும் ஆன்மாக்களை நிவிர்த்தி செய்தலால் நிவிர்த்திகலை எனப்படும்.

2. பிரதிட்டாகலா என்பது யாதெனில்:-
அங்ஙனம் நிவர்த்தி செய்யப்பட்ட ஆன்மாக்களை மீளப் பிரபஞ்சத்தை நோக்காவண்ணம் நிலைநிறுத்துதலால் பிரதிட்டாகலையெனப்படும்.

3. வித்தியாகலா என்பது யாதெனில்:-
அங்ஙனம் நிறுத்தப்பெற்ற ஆன்மாக்களுக்கு அனுமான ஞானம் ஆகம ஞானமின்றிச் சிவானுபூதி ஞானத்தைப் பயப்பித்தலால் வித்தியாகலையெனப்படும்.

4. சாந்திகலா என்பது யாதெனில்:-
அங்ஙனம் சிவானுபூதி ஞானம் பெற்ற ஆன்மாக்களுக்கு விருப்பு, வெறுப்புச் சங்கற்பம் முதலிய எல்லாவிஷயங்களையும் சாந்தமாக அளிப்பதால் சாந்திகலை எனப்படும்.

5. சாந்தியதீதாகலா என்பது யாதெனில்:-
அங்ஙனம் சாந்தமாய் நின்றதற்கப்பாற்பட்டது சாந்தியதீதாகலா என்று பெயர். அதாவது சிவசத்தியாகிய திருவருட்சக்தி ஒன்றே காரியவேறுபாட்டால் இங்ஙனம் பேதமாயிற்று. அச்சக்திக்கதிபராகிய சிவனும் முறையே நிவிர்த்திமான் பிரதிட்டாதிபதி, வித்தியாதிபதி, சாந்திமான், சாந்தியதீதாதிபதி எனப் பெயர்பெறுவார்கள்.

6. அத்துவா = (அத்துவா என்பது) வழி அல்லது மார்க்கம் எனப்பொருள்படும். வழியாவது யாதெனில் விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் என மூவகை. ஆன்மாக்களுக்குள்ள மலபந்தத்தை அறுத்துச் சிவஞானத்தை உண்டாக்கிச் சர்வஞ்ஞத்துவம்முதலிய குணங்களை பிரகாசித்து ஜனனத்திற்புகாதபடி முத்தியிற் கூட்டுதற்காக வகுத்தவழி. இதனையே வழி என்று கூறப்படும்.

மேற்படி கலைகளை நியசித்ததன்பின்பு அக்கினி, சுருக்குச் சிறுவம், குரு, கும்பம், பிம்பம் என்று சொல்லப்படுகின்ற பஞ்சாதிகரணங்களிலும் பொருந்தும்படியாக நாடீசந்தானம் செய்தல்வேண்டும். இதனையே பஞ்சாதிகரணம் என்று சொல்வர். பரிசாகுதியின் மாத்திரம் இதற்குக் காரணங்கள் உண்டு. இனிமேல் நாடீசந்தானத்தின் இலக்ஷணங்களும் தத்துவக் கருத்தும் பரிசாகுதி செய்வதன் காரணம் காரியம் தத்துவார்த்தங்களுமாவன நாடீசந்தானம். அவை பின்வருமாறு: ஊர்ணதந்து நிபாம் நாடீம். சிலந்தியின் வாய்நூலை ஒத்த அந்தச் சுழுமுனைநாடியை,

| | | |
|---|---|---|
| உதிதேந | ... | சுவாசம் வெளிப்படுவதாகிய பிங்கலை நாடியினால் |
| விநிர்க்கதாம் | ... | அக்கினி கும்பங்களின்றும் புறப்பட்டதாகவும் |
| அனுதிதே | ... | சுழுமுனைநாடிக்கு அனுகூலமாகத் தோன்றுகின்ற அல்லது கூடத் தோன்றுகின்ற சுவாசம் உள்ளே நுழைவதாகிய இடைநாடியினாலே |
| விசந்தீம்தாம் | ... | பிம்பத்தில் புகுந்ததாகவும் |
| நிர்க்கதாம் | ... | பின்பு சுவாசம் வெளிப்படுகின்ற பிங்கலை நாடியினால் |
| உதிதேநச | ... | பிம்பத்தினின்றும் புறப்பட்டதாகவும் |
| ஆத்மனச: | ... | கும்பாக்கினிகளிலிருக்கும் சுவரூப லக்ஷணமுடைய கடவுளினது |
| உதிதேநைவ | ... | தோற்றுதவண்ணம் சுவாசம் உள்ளே நுழைகின்ற இடைநாடியினால் |
| விசந்தீம் | ... | கும்பாக்கினிகளிற் புகுந்ததாகவும் |
| யதா | ... | முறைப்படி |
| சிந்தயேத்து | ... | நினைக்குக |
| மித | ... | அக்கினி, கும்பம், பிம்பம் என்ற ஒன்றற்கொன்று சம்பந்தப்பட்ட கடவுளிருப்பதாகவும் உணர்ந்து கொள்க. இதுவே நாடீசந்தானத்தின் கருத்தாகும். |

இனி சிறுக்குச் சிறுவத்தின் கருத்து யாதெனில் சிருக்கின் மேல்பாகத்திலே சிவ வியாபகம் உள்ளதாகவும் கீழ்ப்பாகத்திலே நெய்த்தாரைவிழும் சிருக்கின் துவாரமுகத்தினின்றும் விழும் நெய்த்தாரையே சிவசக்தி மயமாகவும் எண்ணிச் சிவசக்தியையே தேகமாகக்கொண்டு சிருக்கின்மேல் இருக்கும் சிவனது வியாபகத்தை தீபம் அணையாது இருக்கவே அத்தீபத்திலிருந்து மற்றோர் தீபம் தோற்றுவதுபோல பிரம்மா, விஷ்ணு, உருத்திராம்சமுடையதுமாகிய பிம்பத்திலே அக்கினி கும்பங்களிலிருந்து நெய்த்தாரை மயமான சிவசக்தி தேகத்தைக்கொண்டு சிருக்கின் வழியாலே வருமாறு நெய்யை உகுத்து அந்த பிம்பத்திலே சிவனது வியாபகத்தைத் தாபித்தல். இதுவே பரிசாகுதியாகும். இதனால் பரிசாகுதிக்குச் சிருக்குச் சிருவத்தால் சந்தானப்படுத்தல் அவசியம் வேண்டும்.

இனி சிருட்டி கிருத்தியத்தைச் செய்யும் ஜனனிசக்தியும் சங்காரகிருத்தியும் அனுக்கிரக கிருத்தியங்களைச்செய்யும் ஆரணிசக்தியும் திதிகிருத்தியம் திரோபவகிருத்தியங்களைச் செய்யும் ரோதயித்திரி சக்தியும் ஆகிய முச்சக்திகளும் சூக்கும, பஞ்ச கிருத்தியங்களை நடத்தும் சிவசக்திகளாகிச் சிவனுடைய சக்தி சரீரகற்பனையினாலே சூக்கும சரீரமாகியும் மூர்த்தி, வாமை, ஆர்த்தி, பூரணி, ஈசானி என்று சொல்லப்பட்டவர்களாய் சிருஷ்டி முதலிய

தூலபஞ்ச கிருத்தியங்களை நடத்தும் ஐவகைச் சக்திகளும் சிவனது சத்தி சரீர கற்பனையினாலே தூலதேகமாகி இருத்தல்பற்றி அச்சக்திகள் ஸ்வரூப கற்பனையிலே பிம்பத்தில் அமையவேண்டி இருத்தலால் படைத்தல், காத்தல், இவைகளைச் செய்யும் தூக்குமமாக உள்ள இருவகைச் சக்திகளால் சிருட்டி திதி இரு தொழிலையும் நடத்தும் பிரமவிஷ்ணுக்கும் வேண்டற்பாலராயினர். சங்கார கிருத்தியத்தை நடத்தும் சிவசக்தி தேகமுள்ள உருத்திரனுள்ளே திரோபாவனுக்கிரக கிருத்தியங்களைச் செய்யும் சிவசக்தி தேகமுடைய மகேஸ்வர சதாசிவர்கள் தாரதன்மியம்பற்றி அடங்குவார்கள் என்று உணர்க. அப்பிரம, விஷ்ணுக்களும் சம்பு பட்சத்தவராகிச் சிவாம்சமுடையவரே என்று உணர்க.

இதன் விரிவுரை எங்ஙனமெனில் சிலர் பிரம விஷ்ணுவை அணுபட்சமாக கொள்வாரும் உளர். அவ்வாறு கொள்ளுதல் பொருந்தாது. இனி சுயம்பு முதலிய மூர்த்திகளுக்குப் பரிசாகுதி செய்வது எப்படியெனில் இந்தத் திரிகண்ட பரிசாகுதி செய்யப்பாலதன்று. சுயம்புலிங்கத்துக்குப் பரிசாகுதி எப்படி என்றால் நவந்திரிபேதப் பரிசாகுதி செய்தலே விசேஷமுடையதாகும். நவந்திரிபேதங்களாவன யாவையெனில் பிரம்மா, விஷ்ணு, உருத்திரன், மகேஸ்வரன், சதாசிவம், பரவிந்து, பரநாதம், பராசக்தி, பரசிவம் என்று சொல்லப்படுகின்ற ஒன்பது பேதங்களை உடைய பரிசாகுதி செய்தலே சாலச்சிறந்தது. இதனையே நவந்திரிபேதப் பரிசாகுதி செய்தல் என்று சொல்லப்படும். திரிகண்டப் பரிசாகுதி செய்தல் எந்த மூர்த்திக்கெனில் பாணலிங்கத்துக்கு முதலாகிய லிங்க பேதங்களுக்கும் கிரியாலிங்கம், பிம்பம் முதலியவைகளுக்குஞ் செய்தலையே ஆகமங்கள் கூறுகின்றன. ஆகையினாலே இவ்வாறாக லிங்கபேதங்களையுணர்ந்து சிவாசாரியரானவர் பரிசாகுதி செய்தல் வேண்டும். சிவசக்தியே சிவனுக்குத் தேகமாதலாலும் சிவசக்தியைக் கொண்டே சிவபிரான் ஐந்தொழில் நடத்துதலாலும் சிவசக்தியைக்கொண்டே சிவவியாபகம் வருவிக்கவேண்டுதலாலும் அச்சிவசக்திச்சுவரூபமே நெய்த்தாரையாதலாலும் சிருக்கிலுள்ள நெய்யிலே பாதி நெய்யை அக்கினியிலே ஓமஞ்செய்து பாதி நெய்யைக்கொண்ட சிருக்கை கையிற்றாங்கி நாடீசந்தான வழியாக அக்கினிக் கும்பங்களிலுள்ள தேஜசை பிம்பத்திலும் சந்தானப்படும்படி பிம்ப சமீபத்திற்போய்ச் சிருக்கிலுள்ள அந்தப் பாதி நெய்யாகிய சிவசத்தியினாலே சிவபிம்பத்திலே நெய்யைவிட்டு ஒவ்வொரு பாகத்திலும் அந்தச் சிவதேஜசைச் சந்தானப்படுத்துதலால் அந்தப் பாதிநெய் அங்குமிங்குமாக ஓமம் செய்தலாயிற்று. இதுவே பரிசாகுதியின் தாற்பரியமாகும். ஆகையினாலே சிவாசாரியர்கள் எல்லாருமாக எல்லாக் குண்டங்களிலுமிருந்து இருத்துவிக்குகளோடு கூடநின்று பரிசாகுதி செய்தல் வேண்டற்பாலதாயிற்று. அதமாதமமாக பொருந்திய நவகுண்டயாகத்துக்கு இருத்துவிக்குகளுடன் என்று பத்ததியிற் கூறினபடியால் உத்தமோத்தமமான முப்பத்து மூன்று குண்டங்களையுடைய மகாயாகத்திலுள்ள இருத்துவிக்குகள் எல்லாருமாகச் செய்தல் வேண்டுமென்பது சொல்லாமலே அமையும். ஆகையினாலே 33 குண்டங்களிலுமுள்ள இருத்துவிக்குகளுடன் பரிசாகுதி செய்தல் என்பது விளங்குகின்றது

இனிப் பரிசாகுதியின் குறிப்பான பொருள் சிருக்கானது. தனது தண்டத்தையே மத்திய நாடியை உடையதாயும் வேந்திரத்தையே இருதயகமலமாக உடையதாயும் கண்டோர்த்துவபாகத்தையே தாலுரந்திரமாக உடையதாயும், தாரையாக நெய் விழுகின்ற ரந்திரத்தின் மேற்பாகமாகிய முகத்திலே நெய்த்தாரை மயமாகிய சிவசத்திபதிதலை உடையதாயும் 36 அங்குல நீளமான சிருக்கு முழுவதிலும் சிவபிரானுடைய வியாகமுள்ளதாயும் நினைத்து சிருக்கிலே ஒவ்வொரு முறையும் ஒவ்வோர் பாகத்திலும் தத்துவ தத்துவேசுரரையும், மூர்த்தி மூர்த்திசுவரரையும் பூசை செய்தலோடு, சிருக்கிலே நெய்யை நிறைத்து சிவசத்தி மயமாகிய நெய்யை அக்கினியிற் பாதி ஓமம் செய்து சிவசத்தி மயமாகிய பாதிநெய்யை உடைய சிவசத்தி தேகமாகிய சிருக்கோடு அக்கினியின்றும், கும்பத்தினின்றும் சிவசத்தி மயமாகிய பிரம விஷ்ணு உருத்திராம்சமுடைய கடவுளைக் கிரகித்து லிங்கத்திலாவது பிம்பத்திலாவது ஒவ்வோர் பாகத்தும் சுத்தப்படுத்திச் சிவசத்தியமாகிய நெய்யை ஒழுக்குதலால் பரிசாகுதி எனப்படும். அப்பிரம, விஷ்ணு, ருத்திராம்சங்களை சிவசத்தி மயமாகிய லிங்கத்திலே அல்லது பிம்பத்திலே யோசித்தலாகும். இம்மூவர்களை யோசித்தலோடு சிவபிரானைச் சாந்நித்தியப்படுத்தும் சிவசத்தியே சிவபிரானுக்குத் தேகமாதலின் சிவசத்தியால் சிவசாந்நித்தியம் என்பது கருத்து. இனிப் பரிசாகுதியில் சாந்தி கும்பத்தால் புரோக்ஷித்தல் சகல தோஷங்களையும் சாந்தி செய்து தேவர்களைச் சாந்நித்தியம் செய்தற் பொருட்டே. இதற்குப் பிரமாணம் காமி காமத்தில் கூறப்பட்டது. இனி அகோர சிவாசாரியப் பத்ததியில் சிருக்குச் சிரவத்தினால் சிவசத்தி தேகமே சதாசிவமூர்த்தியின் சாந்நித்தியத்துக்குரிய இடம் என்பதைக் கூறினார். காமிகத்தில் சிவலிங்கத்தாபன விதிப்படலத்தில் சாந்தி கும்பம், சகல தோஷங்களையும் (சாந்தி) சுத்தம் செய்வது என்பது பொருள். அப்படிச் சுத்தம் செய்தலினாலேதான் சிவசாந்நித்தியத்துக்குக் காரணமாகும் பிராமணோத்தமர்களே ஒவ்வொரு பாகத்திலும் சாந்தி கும்பத்தினால் புரோக்ஷணம் செய்க என்று

சொல்லப்பட்டது. இவ்வாறு மூன்று பாகங்கள் உள்ளன. அவையாவன: பிரமபாகம், விஷ்ணு பாகம், உருத்திரபாகம் என்ற மூன்று பாகங்களிலும் தனித்தனி பரிசாகுதி செய்து (இத்துடன் பரிசாகுதியின் பொழிப்புரைகளை சுருக்கமாக முடித்துக்கொண்டு அதன் பிரதான குண்டத்திலே) பிரதான சிவாசாரியர் பிராயசித்த ஓமம் அஸ்திர மந்திரம், அகோர மந்திரம், பாசுபதாஸ்த்திரம், வியோமாஸ்த்திரம் முதலாகிய மூலமந்திரம், காயத்திரி, வேதமந்திரம் முதலிய மந்திரங்களினால் பிராயசித்த ஓமம் செய்து அதன்பின்பு ஜயாதி அப்பியாதானம், இராட்டிரபிருத்து முதலிய ஜயாதி ஓமம் செய்து பூர்ணாகுதி செய்து நாடி சந்தானத்தை எடுத்து, மூல மூர்த்தியினது தக்ஷிணகர்ணே சொல்ல வேண்டிய மந்திரத்தைச் சொல்லி (என்னால் செய்யப்பட்ட இந்த கிரியாகாண்டமானது தேவரீருடைய அனுக்கிரகத்தினால் செய்து முடித்தேன். இந்தக் கிரியைகளில் அநேக தோஷங்கள், குற்றங்கள் இருந்தாலும் அவைகள் எல்லாவற்றையும் பொறுத்தருளல் வேண்டுமென்று அதிவிநயத்துடன் மிகவும் பயபக்தியாகச் சொல்லிக்கொண்டும் மற்றைய சிவாசாரியர்கள் எல்லாரும் மேலே கூறியபடி மஹாதேவனாகிய சிவபெருமானுக்கு விண்ணப்பஞ் செய்து, பின்பு நாடிசந்தானத்தை எடுத்து பிரதான சிவாசாரியரானவர் சுவாமி சந்நிதானத்தில் வைத்து ஸமஸ்த அபராதம், க்ஷமஸ்வ மறுபடியும் எல்லாக் குற்றங்களையும், தெரிந்தும் தெரியாமலும் செய்த குற்றங்கள் எல்லாவற்றையும் தேவரீர் பொறுப்பீரெனக் கூறி அவருடைய சந்நிதானத்தினின்று அதிவிநய பயபக்தியோடும் மறுபடியும் விண்ணப்பித்தல் எவ்வாறெனில், மஹாதேவரே, சர்வாபீஷ்ட வர்தரே தேவரீருடைய அனுக்கிரகத்தினால் நாயினும் கடையேனாகிய யான் உலகத்திலுள்ள சகலான்மாக்களும் உய்ந்து கடைத்தேறும் பொருட்டு தேவரீரை இந்த ஆலயத்தில் கிரியாகாண்டத்திலே தெரிந்தும் தெரியாமலும் சகல குற்றங்களையும் பொறுத்தருளி தமியேனாகிய என்பொருட்டாகவும் தர்மகர்த்தாவின் பொருட்டாகவும், சகல ஆன்மாக்களின் பொருட்டாகவும் உய்ந்து கடைத்தேறும் பொருட்டு இவ்வுலகத்திலுள்ளவர்களும், ஏனைய புறச்சமயிகளும் க்ஷேமம் பொருட்டு இவ்வுலகில் எதுவரைக்கும் நக்ஷத்திரங்கள், சூரியர், சந்திரர்கள் இருக்கின்றார்களோ அதுவரைக்கும் இவ்வாலயத்திலுள்ள லிங்கம், பிம்பம், தம்பம் ஆகிய மூன்று இடங்களிலும் எந்நாளும் சாந்நித்தியமாக தேவரீர் வீற்றிருந்தருளி சகலான்மாக்களையும் இரட்சித்தருள வேண்டுமென்று பிரார்த்தனைவிசேஷத்தை விண்ணப்பித்து, பல வகையான நைவேதனங்கள் வைத்து, பல தாம்பூலத்துடன் தூப, தீப ஆராத்திரிகம் செய்து, நமஸ்காரம் செய்து சகல சிவாசார்யர்களும் மேற்கூறியவாறு சொல்லிச் செய்து தத்தம் மூர்த்திகளிடத்து உத்தரவு பெற்று, யாகசாலைக்குச் சென்று கூடிக் குறைந்த கிரியா காண்டத்திலுள்ள தோஷ நிவிர்த்தியின் பொருட்டு மஹாபூர்ணாகுதி செய்து பலி கொடுத்து தீபாராதனைகள் செய்தல் வேண்டும்.

மேலே கூறியவாறு அபின்னா சத்தியாகிய ஆவுடையாருக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் இவ்வாறு பரிசாகுதி செய்தல் வேண்டும். அம்மனுக்கும் இவ்வாறு பரிசாகுதி செய்தலாகும். எவ்வாறு என்றால் கிரியாசக்திபாகம், ஞானசக்திபாகம், இச்சாசக்திபாகம் என மூன்று வகையினையுடையது. மூர்த்தியையும், மூர்த்தீஸ்வரியையும் தனித்தனி ஒவ்வொரு பாகத்திலும் பூசித்து பரிசாகுதி செய்தலாகும். இவ்வாறு சகல மூர்த்திகளுக்கும் பரிசாகுதியை முடித்துக் கொண்டு மறுநாள் சுபமுகூர்த்தத்தில் யாகத்திலே விசேஷ பூர்ணாகுதி செய்து இருத்துவிக்கள் வியூகக்கிரமமாக பிரதான குண்டத்திலே கொணர்ந்து அக்கினி மூர்த்தி, மூர்த்தீசவர் இவர்களை எல்லாம் பிரதான குண்டத்தில் ஸம்யோஜனை செய்த பின்பு பிரதான சிவாசார்யர் மஹாபூர்ணாகுதி செய்து, பிரதான கும்பத்திலே அக்கினியிலிருந்து மூர்த்தி முதலியவர்களைச் சேர்த்து, விசேஷ பூசை செய்து, ஆசீர்வாதம் செய்து யாத்திராதானம், நவக்கிரகதானம் முகூர்த்ததானம் செய்து, மஹாயாகம் முதலாகிய மற்றைய யாகத்துக்கு மேற்கூறியபடி சகலதையும் செய்து முடித்து, தானம் கொடுத்து கும்போத்தாரணஞ் செய்து சகல வாத்திய சகிதமாக வீதிப் பிரதக்ஷணம் செய்து சுவாமி சந்நிதானத்தில் வந்து, வேத மந்திரத்துடன் லாஜபுஷ்பாஞ்சலி செய்து ஆராத்திரிகம் செய்து அந்த அந்தக் கும்பங்களை அந்த அந்த மூர்த்தி, தூபி, கோபுரம் முதலான இடங்களில் வைத்து நியாசபூர்வமாக ஆவாகனம் செய்து சுப முகூர்த்தத்தில் குறித்த நேரத்தில் மஹாகும்பாபிஷேகம் செய்யும்போது கும்பம், செயற்கை ஆனதன்மையினாலே பிரதான கூர்ச்சம் எடுக்கும்போது ஏனைய மாவிலை, தேங்காய் முதலியன எடுத்து சுவாமி முன்னிலையில் வைத்து குடத்தில் உள்ள நீரை அபிஷேகம் செய்தல். ஒரே நேரத்தில் மஹா கும்பாபிஷேகத்தைச் செய்து அதன்பின் நியாசங்கள் செய்து, கோதரிசனம் முதலாகிய 10 தரிசனங்கள் செய்து, மஹாநைவேதனம் வைத்து ஆராத்திரிகம் செய்து வேதம் ஆசீர்வாதம் செய்து பக்த ஜனங்களுக்கு பிரசாதம், தீர்த்தம் கொடுத்து ஆசீர்வதித்து மஹாதேவனுக்கு விஞ்ஞாபனம் செய்து, அன்று பரிவார முதலாகிய சகல மூர்த்திகளுக்கும் இதுபோலச் சகலதும் செய்து அதன் பின்பு மஹாயாகத்துக்கு வந்து, பிராயசித்த ஓமம் முதலானவைகளைத் தனித்தனி நவக்கிரகம், மிருத்தும்ஜய நான்கு நாட்களுக்குச் செய்து, தீர்த்தம் கொடுத்தலை அவபிருத ஸ்நானம் என்று பெயர். இதனை மங்கள ஸ்நானம் என்றுஞ் சொல்வர். தீர்த்த விதியின்படி தீர்த்தங் கொடுத்தல். அஸ்திர தேவருக்குத் தீர்த்தங் கொடுத்

தல். கருத்து, ஆதிசத்தியானது அருட்சத்தியில் மூழ்குதல், இதனைத் தீர்த்தம் கொடுத்தல் என்பர். இதனை அனுக்கிரக கிருத்தியம் என்று சொல்லப்படும். தீர்த்தம் கொடுத்து மகா ஜனங்கள் தீர்த்தஸ்நானம் செய்து முடித்தல் வேண்டும். இது ஐந்தாவது நாள் செய்தலாகும்.

கும்பாபிஷேகம் முடித்து தரிசனமும் ஆனதன்பின் மஹாபிஷேகம் செய்தல் வேண்டும். மகாபிஷேகம் என்பது அஷ்டபந்தன உஷ்ண பரிகாரார்த்தமும் மஹாசுத்தியின் பொருட்டும் அபிஷேகத் திரவியங்களுடன் சகஸ்த்திரதாராபிஷேகம், சிருங்கோதகம், சங்கோதகம் இரத்திேேதகம், முதலானவைகளால் அபிஷேகக்கிரமமாகச் செய்து பலவகையான வர்க், கான்னம், பலகாரம், பாயசம், வியஞ்சனன்னம் இவைகளை வைத்து நிவேதித்து தீபாரா தனைகள் செய்தல் வேண்டும். இந்த மஹாயாகத்திலே செய்யப்பட்ட ஒவ்வொரு விஷயங் களுக்கும் தத்துவக் கருத்துக்களைக் கூறப்புகின் விரிவடையும். இந்த யாகத்தில் பஞ்சாதி கரணங்கள் எவையெனில்:-

| | | |
|---|---|---|
| முதலாவது | கும்பம் | அஸ்திரதேவர் |
| இரண்டாவது | ஸ்ரீபலிநாயகர் | மண்டலம் |
| மூன்றுவது | மகேஸ்வரர் | சிவாக்கினி |
| நான்காவது | ஆசாரியர் | குரு |
| ஐந்தாவது | பக்த ஜனங்கள் | சிஷ்யர்கள் |

இவைகள் சில ஆகமத்தில் கூறப்பட்டது இந்தப் பஞ்சாதிகரணம், மகோற்சவத்துக்கும் இவ்வாறு கொள்க என்று உணர்க.

இந்தக் கும்பாபிஷேகத்திலே பூர்வாங்கமாகச் செய்யப்பட்ட ஒவ்வொரு கிரியைகளும் பஞ்ச கிருத்தியத்தைக் குறிப்பன. அவை எவையெனில்:-

அனுஞ்ஞை
திரவிய சுத்தி
பிரவேசபலி
இரக்ஷோக்கின ஓமம்
கிராமசாந்தி
வாஸ்த்துசாந்தி
மிருத்சங்கிரகணம்
அங்குரார்ப்பணம்
இரட்சாபந்தனம்
யாகாரம்பம்

இவைகளை சிருஷ்டி, அக்கினி கார்யம், பலி, நித்திய யாகபூசை முதலியன திதி கிருத் தியம் சில ஆகமங்களில் பிரவேசபலி, இரட்சோக்கின ஓமம், கிராமசாந்தி, வாஸ்த்து சாந்தி இவைகளை சங்கார கிருத்தியம் என்றும் அங்குர உத்துவாசனம், யாக உத்துவாசனம், இரட்சாபந்தன உத்துவாசனம் அக்கினி உத்துவாசனம் முதலியன, திரோபவ கிருத்தியம் என்றும், யாக கும்பாபிஷேகம், மஹாபிஷேகம், ஸஹஸ்ர கலாசாபிஷேகங்கள் முத லாகச் சொல்லப்பட்ட பலவகைப்பட்ட ஸ்நபனபிஷேகங்கள், மண்டலாபிஷேகங்கள், விசேஷ அபிஷேகத்திரவியங்கள், தீர்த்தோற்சவம், சத்தி முதலிய அம்மன் கும்பாபிஷேகம், திருக் கல்யாணம், பள்ளியறை மங்கள ஸ்நானம் முதலியன அனுக்கிரஹகிருத்தியம் என்று சொல் லப்படும். சில ஆகமங்களில் வேறுவிதமாகவும் சொல்லப்பட்டு இருக்கிறது. பஞ்சோபசாரம் முதலில் கூறியுள்ளது.

யாகம், நித்தியம், நைமித்தியம், காமியம் இவைகளைச் செய்யும் யாகமானது போக மோட்சங்களைத் தருவதாகவும் இதனையே ஞானயாகம் என்றும் சொல்வர். இதைவிட அகயாகம் என்றும் புறயாகம் என்றும் இரு பிரிவினையுடையது. இங்கே புறயாகத்தில் செய்யும் கிரியையே குறிக்கப்பட்டன. இதைவிட இராஜசூயம், அஸ்வமேதம், பிதுர் யஞ்ஞம் முதலியன. இவைகள் போககாமிக்குரியது ஞானயாகம் தவிர்த்து மற்றைய நான்கும் போகவிஷயமான யாகமாகும். இங்கே குறிக்கப்பட்ட யாகம், தேவயக்ஞம் என்றும் ஞானயாகமென்றும் பெயராம். மேற்கூறிய யாகம் பஞ்சயக்ஞம் என்றும் சொல் லப்படும். இதைவிட வேறு பஞ்சயக்ஞமும் இருக்கின்றது. முன்னே கூறப்பட்ட அக்கினி காரியத்தில் உள்ளதைவிட வைஸ்வானராக்கினி, வைதிககத்துக்கும் சிவாக்கினி சிவாலயத்

துக்கும் சிவயாகம் முதலியவைகளுக்கும் இந்த அக்கினி, ஆன்மார்த்தம், பரார்த்தம் இரண்டிற்கும் உரியது. இதற்கு ஞானக்கினி என்று பெயர். வைசுவாநராக்கினி, தேவாத்மகசுவபாவமில்லாதது. ஜடராக்கினி ரூபமுடையது. சிவாக்கினியானது தேவதாத்மக பாவமுடையதுமாய் சிவஜோதி ரூபமாய் விளங்குவது. வைஸ்வானராக்கினி என வழங்கும் வைதீகக் கிரியைக்கு பிரணீதா, பிரம்மகூர்ச்சம், புரோக்ஷணி இவைகளோடு கூடியதாகும். இதற்கு ஆவரண பூசையில்லை. சிவாக்கினிக்கு பஞ்சமாவரணத்தோடு கூடிய பூசையுடையது. யாகத்திலே நான்கு திக்கிலும் நான்கு துவாரங்கள் இருந்து பச்சிமத் துவாரத்தை விசேஷமாகக் கூறியது என்னையோவெனில் வடக்குத்திக்கு சத்தி இருக்கும் தலமாதலாலும் அது துவாரம் ஆகாது என்றும் சிந்தியாகமத்திற் சொல்லப்பட்டபடியாலும் கிழக்குத்துவாரம் போகத்தைக் கொடுக்கின்ற தன்மையினலே அதுவும் துவாரமாகாது. தெற்கு கோமுகையை வைத்து வடதிசையந்தமாக வைத்துப் பூசிப்பதால் தெற்கும் துவாரமாகாது. வடக்கு, கிழக்கு, தெற்கு ஆகிய இந்த மூன்றும் யாகபூசையில் முக்கியமான துவாரமாகாது என்றும் இந்தத் துவாரம் மூன்றுமடைக்கப்படுகின்ற தன்மையினுலும் துவாரமாகாது என்று ஆகமத்தில் சொல்லப்பட்ட தன்மையினலே இந்தப் பிரமாணங்கள் மகுடாகமத்திலும் சுவாயம்புவம், சர்வஞானேத்தரம், காமிகம், காரணம் முதலிய ஆகமங்களில் வி வாகச் சொல்லப்பட்டபடியாலும் சத்தியோஜாதத்தையும் நிவிர்த்திகலையையும் மேற்கே இருக்கிற தன்மையினுலும் சிருஷ்டி கிருத்தியம் சத்தியோஜாதத்தில் நிகழுகி ற தன்மையினுலும் சத்திய உடனே ஜ என்பது தோன்றுதல் தன்மையினுலும் மேற்குத் துவாரமே மிகவும் விசேஷமுடையது ஆகும். ஆனபடியால் மேற்குத்துவாரம் ஆன்மார்த்த சிவபூசையிலும் பரார்த்தமான யாகபூசையிலும் பச்சிமத்துவாரத்தையே நித்தியத்துவாரமாகவும் நித்தியத்துவாரபூசையையும் செய்யலாமென்று பிரதான கும்பம் மேற்குமாக வைத்து விசேஷ பூசைகள் செய்யவேண்டும் என்பதையும் சொல்லப்பட்டது. மேற்குமுகமாக இருந்தாலுஞ்சரி, கிழக்குமுகமாக இருந்தாலுஞ்சரி மேற்குத்துவாரமே சிறப்புடையது. மேற்குத் துவாரத்தின் வழியாகவே யாகத்துக்குப் போய்வரவேண்டியது. மேற்குத் துவாரத்திலே விசேஷ தீபாராதனைகளைச் செய்யவேண்டும். முன்குறித்த துவாரத்தைவிட நிவிர்த்திகலை மேற்கே இருக்கிறபடியால் மிகவும் விசேஷமுடையதாகும். பூஜா என்பதின் கருத்து என்னையெனில் ஆடம்பரத்திலும் வெறுங்கிரியையிலும் அடங்கிவிடாது. ஆழ்ந்த அன்பினுலும் ஞானத்திலுலும் கல்வி ஞானத்திலுலும் அப்பூஜை அமையவேண்டும் என்பதை உணர்த்தவே பூஜை என்ற சொல் வழங்கப்பட்டது. ஆலயத்தின் பொதுவான தத்துவக் கருத்து சிவாலயம் உடலாகவும் கோபுரம் வாயாகவும் நந்தி நாக்காகவும் துஜஸ்தம்பம் அண்ணாக்காகவும் தீபங்கள் பஞ்சேந்திரியங்களாகவும் கர்ப்பக்கிரகம் இருதயமாகவும் சிவலிங்கம் உயிராகவும் சொல்லப்பட்டது. சில ஆகமங்களில் மற்றொருவகையில் (தூபி தூலலிங்கமாகவும் கோபுரம் சேர்ந்து) சிவலிங்கம் சூக்குமலிங்கமாகவும் பலிபீடம் பத்திரலிங்கமாகவும் கூறப்பட்டது. இலிங்கம் மூன்று வடிவம். அவையாவன? அத்துவாவடிவம் கோபுரம், தூபி, மந்திர வடிவம (சூக்கும வடிவம்) சூக்கும லிங்கம் அருள் வடிவம், காரணலிங்கம் உள்ளே இருக்கும் இலிங்கமாம். இதைவிட கோபுரம் தூலலிங்கமாகவும் கர்ப்பக்கிரக விமானம் சூக்குமலிங்கமாகவும் உள்ளே இருக்கும் சிவலிங்கம் காரண லிங்கமாகும். இதைவிட ஸ்தூலம், சூக்ஷமம, அதிசூக்ஷமம, காரணம, மஹாகாரணம, என ஐந்து வகைப்படும். விமானம் தூலலிங்கமும் கர்ப்பக்கிரகம் சூக்ஷமலிங்கமும் துவஜஸ்தம்பம், காரணலிங்கமும் மூலஸ்த்தான லிங்கம் மஹாகாரணலிங்கமுமாகச் சொல்லப்படும். மஹாகாரணத்திலிருந்து காரணமும் காரணத்திலிருந்து அதிசூக்ஷமமும் அதிசூக்ஷமத்திலிருந்து சூக்ஷமமும் சூக்ஷமத்திலிருந்து ஸ்தூலமும் உண்டாயின. இதன்பின் குண்டத்தின் தன்மையைப்பற்றி நவகுண்டங்களும் ஒவ்வொரு அங்கமாக உள்ளது. சதுரஸ்ரகுண்டம், பிருதிவியாகவும், அர்த்தசந்திரகுண்டம், அப்புவும் திரிகோணகுண்டம், அக்கினியும் சடஸ்சிரகுண்டம், வாயுவும் விருத்தகுண்டம், ஆகாசமும் பத்மகுண்டம், சூரியனும் எண்கோணகுண்டம், சந்திரனும் யோனிகுண்டம், யஜமான் (ஆன்மாவும்) ஆகிய எட்டுக் குண்டங்களும் எண்வகை அங்கங்களாகும். நவகுண்டங்கள் நவத்துவாரங்களாகும் என்றும் சில நூல்களில் சொல்லப்பட்டது. யந்திரத்தாபனம் செய்தல் கர்ப்பத்தில் சொல்லப்பட்டபடியால் ஆகமத்துக்கு அது பொருந்தாது என்றும் சிலர் கூறுவர். யந்திரத்தை ஊர்துவசக்கிரம், அதோசக்கிரம், தர்சனசக்கிரம் என மூன்று வகையாகவும் சில ஆகமங்களிலுள்ளன. இன்னொரு முறையில் 51 அக்ஷரங்களைப்பற்றி விபரமாகக் கூறுகிறது. அவையாவன, உயிரெழுத்து 16 அக்ஷரம். மெய்யெழுத்து 35 அக்ஷரம். 51 அக்ஷரங்கள். யந்திரங்களிலே அக்ஷரங்கள் எழுதும்போது ஒவ்வொரு அக்ஷரங்களின் தொழிலும் அதிதேவதை பிரத்தியதி தேவதைகளும் உண்டு. யந்திரத்தாபனம் செய்தல் ஆதரசிலையின்மேல்

9 நாதக்குழி செய்து அந்தக் குழியில் நவரத்தினம், நவலோகம், நவதானியம், சுவர்ணம், வெள்ளி, பொன், பஞ்சலோகம் இவைகள் வைத்து அதன்மேல் அந்த அந்த மூர்த்தியினுடைய தாபன யந்திரத்துக்கு விதிப்படி பூசை, ஜபம், ஹோமம் முதலியன செய்து வாத்திய சகிதம் யந்திரஸ்தாபனம் செய்து அதன்மேல் அந்த அந்த பிம்பங்களை வைத்து அஷ்டபந்தனம் செய்தல் வேண்டும். அதன் பின்புதான் பிம்பசுத்தி முதலியன. சிலர் மஹாபிஷேகத்தின் பின்பும் 10 தரிசனம் செய்வர். பத்து எவையெனில்:-

1. கன்றோடு கூடிய பசுமாடு
2. யுக்கும ஆசார்யர்கள்
3. யுக்கும சாமரம்
4. சுமங்கலி பிராமணப் பெண்கள்
5. உருத்திர கணிகை
6. பூரண கும்பம்
7. தீபம்
8. கண்ணாடி
9. இராசா அல்லது தர்மகர்த்தா
10. மஹாபக்த சனங்கள்

இவைகளை 10 முறை திரையிட்டு தனித்தனி பஞ்சாராத்திரிகம் செய்து வழிபடுவது.

பட்டு வஸ்த்திரம், உத்தரீயம், மாலைகள், பழம் பாக்கு வெற்றிலை, சுகந்த புஷ்பங்கள், சுவாமி அம்மன் பட்டுச்சாத்துதல் முதலியன சுவாமிக்கு முன்பாக பிரதான சிவசாரியார் நின்று விஞ்ஞாபனம் செய்தல். எதுவரைக்கும் சூரியன், சந்திரன், நக்ஷத்திரங்கள் உலகத்தில் இருக்கிறார்களோ அதுவரைக்கும் இந்த ஆலயத்திலுள்ள இலிங்கம், பிம்பம், அக்கினி நித்தியம் செய்யும் அக்கினி, தம்பம் இவைகளுடன் அட்ட வித்தியேசுவர் இவர்களும் பஞ்சமாவரணத்துடன் சாந்நித்தியமாக வீற்றிருந்து இவ்வுலகத்துக்கு அனுக்கிரகம் செய்தருள வேண்டுமென்று விஞ்ஞாபனம் செய்து ஆராத்திரிகம் செய்தல் வேண்டும். ஆசாரியர் கையில் அர்க்கிய ஜலம், புஷ்பம், அக்ஷதை இவைகளை எடுத்து தன்னாலே தெரிந்தும் தெரியாமலும் செய்த சமஸ்தாபராதம் க்ஷமஸ்வ என்று மன்னிப்பாகவும் சுவாமியினுடைய வரத அஸ்தத்தில் தீர்த்தம் விட்டு நமஸ்கரித்தல் வேண்டும். இதன்பின் ஆசீர்வாதம் முதலியன செய்தல். இவ்வாறாக மஹாயாகத்தில் நான்கு நாளைக்கும் செய்ய வேண்டிய கிரியைகள் செய்து முடித்து அவபிருத தீர்த்தம் கொடுத்து மகாஜனங்கள் தீர்த்தஸ்நானம் செய்து அதன்பின்பு மஹாயாகத்துக்கு வந்து மஹாபூர்ணாகுதி முடித்து இரக்ஷாதாரணம் முதலியன முடித்துக்கொண்டும் யாக உத்துவாசனமுங் கிரமமாக முடித்துக் கொண்டு அந்தர்பலி, பகிர்பலி முதலியன முடித்துக்கொண்டு அங்குரவிசர்ச்சனம் செய்து ரக்ஷை, அங்குரம் இவைகளுடன் மூலமூர்த்தி முதலிய சுவாமிகளுக்கு ரக்ஷை அங்குரம் சாத்தி ஆராத்திரிகம் முதலியன முடித்துக்கொண்டு நூதன ஆலயமாகவேனும் புராதன ஆலயமாக இருந்தாலும் பரிவாரகும்பங்களை கர்ப்பக்கிரகத்தைச்சூழ நான்கு திக்குகளிலும் அந்த அந்த இடங்களில் அபிஷேகஞ் செய்தல் வேண்டும். சிலர் புராதனமான சம்புரோச்சனைகளிலும் அபிஷேகம் செய்வது உண்டு. சுவாமிக்கு நாமகரணஞ் செய்தல்.

தர்மகர்த்தாவுக்குப் பிரதான யாகத்தில் சுவாமிக்கு அபிஷேகஞ் செய்த தீர்த்தத்தினால் யஜமான் அபிஷேகமும் உடனே செய்தல் வேண்டும்.

அபிஷேக காலத்தில் தைலம் முதலியன அபிஷேகஞ் செய்யும்போது திரையிடுதல் வேண்டும். விபூதி, பன்னீர், சந்தனம் ஆகிய இந்த மூன்றும் அபிஷேகம் நடக்கிற சமயத்தில் மாத்திரம் மஹாபக்த தரிசனம், கும்பாபிஷேகம் இவைகளுக்கு மாத்திரம் திரை நீக்கி அபிஷேகம் செய்தல் வேண்டும். அபிஷேக தீர்த்தம் மகாஜனங்களுக்கு உளுந்து அளவு அல்லது உள்ளங்கை அடங்கிய தீர்த்தம் இப்பிரமாணமாக அவர்களுக்குக் கொடுத்தல் வேண்டும். இதுவே ஆசமனம் செய்யும் பிரமாணமாகும்.

## அலங்காரம்

திருப்பொற்றுடை சாத்தி திவ்வியமான நல்ல பட்டு வஸ்திரம், பீதாம்பரம், இரஜதாம்பரம் முதலிய வஸ்திரத்தினால் அலங்கரித்து திருவாபரணம், சந்தனம், குங்குமம், சுகந்த மாலைகள், சுகந்த புஷ்பங்கள் முதலியவற்றால் அலங்காரம் செய்தல்.

பூசை செய்தல்:- விசேஷ நைவேத்திய வகைகள், தூபம், தீபம், நைவேதனம், தாம்பூலம், பானீயவகைள் வைத்து நிவேதித்து சோடசோபசாரபூசைகள் செய்தல்.

# திருக்கல்யாணம்

இவ்வுலகத்தின் கண்ணே உள்ள சகல ஆன்மவர்க்கங்கள் எல்லாம் போகமனுபவித்து உய்ந்து கடைத்தேறும் பொருட்டு நித்திய கல்யாண சம்பன்னராகிய சிவபெருமானுடையதும் உமாதேவியாருடையதுமாகிய திருக்கல்யாண உற்சவத்தை விவாக முறைப்படி நடாத்தி அருளுதலையே திருக்கல்யாண உற்சவமென்று பெயராகும்.

இந்தக் கல்யாண உற்சவத்தை ஏன் செய்யவேண்டுமென்றால் எப்பொருட்கும் தலைவராகிய இறைவன் அருட்சத்தியினிடமாக ஆன்மாக்கள் பொருட்டு பஞ்சகிருத்தியமாகிய திருநடனத்தைச் செய்தருள்வார். அச்சத்தியும் ஐந்து வகைப்படும். வீரசத்தி, போகசத்தி, அபின்னசத்தி, யோகசத்தி, பின்னபின்னசத்தி என ஐந்து வகைப்படும். இந்த ஐவகைச் சத்திகளுள் ஜகத்போக நிமித்தார்த்தம் சய்யா கிரகமபவேத்து என்று ஆகமங்களில் சொல்லப்பட்டபடியாலும் உலகத்தின் விவகாரத்தின் பொருட்டும் உலக நன்மைன் பொருட்டும் உலகத்திலுள்ள சர்வான்மாக்களெல்லாம் போகத்தை அனுபவித்து சாந்தி அடைதற் பொருட்டும் இறைவன் தாம் அதனை நடித்துக் காட்டுகின்ற தன்மையினாலே இந்த விவாக உற்சவம் ஆகமங்களிலே உள்ள கிரியாகாண்டம் உலகத்திலுள்ள சர்வான்மக்கள் பொருட்டு ஆனதன்மையினாலே சரியையும் கிரியையும் கூறப்பட்டபடியால் கிரியாகாண்டத்தில் உள்ள சோடசக்கிரியைகளையும் நடித்துக் காட்டுகின்ற தன்மையினாலே அக்கிரியைகளை ஆகமங்களில் விரிவாகக் கூறப்பட்டபடியால் இந்த விவாகக் கிரியையானது அதனோடு சம்பந்தப் பட்டபடியாலும் இந்த விவாக உற்சவத்தை ஆகமங்களில் எடுத்துக் கூறினார். மேலும் இறைவன் உலகத்திலுள்ள சர்வான்மாக்களைப்போல போகத்தை அனுபவிப்பர் என்றால் அப்படியல்ல. அவர் நாடகாசிரியரைப் போன்று நடித்துக் காட்டுபவர். அந்த இறைவனே காட்டுவான், காண்பான், காட்சி, காட்சிப்பொருள் இந்த நான்கும் தாமே செய்பவரான தன்மையினாலும் திருவருள் ஒன்றே பெண்வடிவமாகி எனவே அருட்சத்தியாகி சர்வான்மாக்களிடத்தும் பாலில் நெய்போல வியாபித்து நிற்கின்ற தன்மையினாலும் தாமே உலகத்துக்கு முழுமுதற் கடவுள் என்பது போதர நிற்றலாலும் ஆட்டுவான் ஆட்டுவிப்பான் ஆனதன்மையினாலே இந்தத் திருக்கல்யாண உற்சவம் நடாத்தப்படுதலின் கருத்து இதுவேயாகும். திருக்கல்யாண உற்சவம் கும்பாபிஷேகம் முடிந்ததன் பின்பு 1, 3, 4, 5, 7, 9, 10 இந்த நாட்களில் சுபவாரத்தில் செய்யவேண்டியதாகும்.

இனிச் சத்தி பேதங்கள் பலவாறாகச் சொல்லப்பட்டிருப்பினும் இங்கே கேவல சத்தியானது எதுவெனில் சுவயம்பிரகாசமாய் சுவப்பிரதானமாகவும் சிவனுக்கு அங்கமற்றதாகவும் பரிவாரசகிதமாகவும் தனியே பலி, உற்சவங்கள் உள்ளதாகவும் சிவபிரானில்லாது தனியே தாபிக்கப்படும் தேவியை கேவலசத்தி எனப்படும். சகஜ சத்தியாவது எதுவெனில் சிவனுக்கு அங்கமாகவும் ஓரிடத்தில் ஒரே மண்டபத்தில் ஒரே காலத்தில் சிவனோடு சகஜமாக தாபிக்கப்படும் தேவியை சகஜ சத்தி எனப்படும். அர்த்த மண்டபத்தில் தாபிக்கப்படும் போகசத்தி ஓர்விதத்தில் ஒரு வகையாக சகஜ சத்தி எனப்படும்.

பௌந்நிய சத்தியாவது சிவபெருமானை முன்னர் தாபித்து பின்பு அச்சிவனுக்கு அங்கமாக பரிவாரங்களின்றி உட்பிரகாரகாரத்தில் தாபிக்கப்படும் தேவியை பௌந்நிய சத்தி எனப்படும்.

மிச்சிரசத்தியாவது எதுவெனில் சிவபிரானுடைய உட்பிரகாரத்திலாவது வெளியில் மூன்றாவது பிரகாரத்திலாவது எவ்விடத்திலாவது பரிவாரங்களோடு கூடியாவது பரிவாரங்கள் இன்றியாவது சிவனுக்கு அங்கமாகவேனும் அங்கமின்றியேனும் சிவனுடைய மூலாலயத்தைப் பற்றியே தாபிக்கப்படும் சத்தியை மிச்சிரசத்தி என்று சொல்லப்படும். இது காமிகாமத்தில் சொல்லப்பட்டதாகும். சில ஆகமங்களில் மிச்சிரசத்தியை பௌந்நிய சத்தி என்றும் அதனை உள்ளடக்கி எனவே மூன்று பிரிவினையுடையதென்றும் சொல்லப்படும். உத்தர சுவாயம்புவாகத்திலே வைவாஹியவிதி படலத்திலே மேலே கூறியவாறு சொல்லப்பட்டது என்று உணர்க. சுவதந்திர சத்திப் பிரதிஷ்டையில் துவாரத்திற்கு முன்னிலையில் சிங்கத்தைப் பிரதிட்டை செய்தலாகும். சகஜசத்தி பிரதிஷ்டையில் துவாரத்திற்கு முன்னாலே விருஷபம் பிரதிஷ்டை செய்தல் வேண்டும். கேவலசத்திப் பிரதிஷ்டையில் துவாரத்திற்கு முன்னிலையில் அன்னத்தைப் பிரதிஷ்டை செய்தல் வேண்டும் என்று மேற்படி ஆகமத்தில் சொல்லப்பட்டது.

இலிங்கம் ... ஞானசத்தி மயம்
பிண்டிகை ... கிரியாசத்தி மயம்
இலிங்கத்தினுடைய ... சிரசு இச்சா சத்தி மயம்

எனவே சிவலிங்கம் என்பதன் கருத்து இச்சா, ஞான, கிரியா சத்திமயம், சிவலிங்கம் என்று உணர்க. இந்த மூன்று சத்தியும் சிவலிங்கத்தில் பொருந்தி இருத்தல் காண்க.

ஆவுடையாரிலும் மேல்பாகத்திலுள்ள நாளம் வரைக்கும் இச்சா சத்தி பாகம் கீழ் உள்ள பட்டிகைக் கண்டம் வரைக்கும் ஞானசத்தி பாகம் கண்டத்தின் கீழ்ப்பாகம் ஆவுடையாருடைய கீழ்ப்பாகம் வரைக்கும் கிரியாசத்தி பாகமாகும். தேவிக்கு விக்கிரகம் ... ஞான சத்தியாகும். தேவியினுடைய ஆசனக்கல்லு, கிரியாசத்திமயம், ஆதார சீலே, ஆதாரசத்தி மயமாகும். இதுபோலவே விக்கினேசுவர மூர்த்திகள் எல்லாம் ஞானசத்தி மயம் விக்கிரகம் பாதத்தில் இருக்கும் பீடம் கிரியாசத்திமயம் ஆதாரசீலே ஆதார சத்திமயம் என்று உணர்க. இலிங்கம் ... ஞானசத்திமயம் ஆவுடையார் கிரியா சத்திமயம் ஆதாரசீலேயில் ஆதாரசததி மயம் என்று அறிகுக.

இனி மானிடர்களுக்குரிய பிரமம், பிராசாபத்தியம், ஆரிடம், தெய்வம், காந்தர்வம், ஆசுரம், இராக்கதம், பைசாசம் என்று சொல்லப்படுகின்ற எண்வகை விவாகங்களில் பிரம்ம விவாகம் என்பது ஒரு பிரமசாரிக்கு குரு, அக்கினி, சபையோர் இவர்கள் சாட்சியாக 10 வயதையுடைய கன்னியை அவளுடைய தாய் தந்தையார்கள் அக்கினி சாட்சியாக தாரை வார்த்துத் தத்தஞ் செய்து கொடுப்பதே. மற்றைய 7 விவாகத்தையும் விபரிக்கில் மிகவும் விரிவாகும். இந்த விவாகம் போலாகாது சிவனுடைய திருக்கல்யாணமானது பார்க்கின்றவர்களுக்கு பிரபஞ்ச வாஞ்சையினுலே நடக்கின்ற விவாக கிரியைகளை நடாத்தி முடிக்கின்ற தன்மையினுலே இறைவன் ஆனவன் கலங்குகின்ற நீரிடத்தின் கண்ணே ஆகாயத்திலுள்ள சந்திரன் தோன்றிப் பார்க்கின்றவர்களுக்கு அச்சந்திரன் நீரில் அலேயினுலே கலங்குகின்ற தன்மை போலவே தலேவராகிய இறைவனும் பார்க்கின்றவர்களுக்கு பிரபஞ்ச வாஞ்சையில் நிகழும் விவாகக் கிரியைகளேச் செய்து நடித்துக் காட்டுகின்ற தன்மை போலவே (ஆத்ம தத்துவ புவனபோக கலாயோகவியல்புகளே விளக்கிக் காட்டுவதுபோல ஆகாயத்திலுள்ள சந்திரன் உண்மையில் அசைவில்லாது இருக்கின்ற தன்மைபோலவே) உமையம்மையாரிடத்து ஒடுங்கி இருந்த பிரபஞ்சத்தை உற்பத்தி செய்யக் கருதி என்று உணர்க. ஆனதன்மையினுலே திருக்கல்யாணம் வேண்டற்பாலதாகும் என்று அறிகுக.

திருக்கல்யாணத்துக்கு வேண்டியவைகளே ஆயத்தம் செய்து பகலில் அம்பாளே தவக் கோலத்துடன் தவமிருத்தி சுவாமியை எழுந்தருளச் செய்து தவத்தைப் பரீக்ஷித்து மாலேயிட்டு அம்மனுடன் ஆலயத்துக்கு எழுந்தருளி இரவில் திருக்கல்யாணக் கிரியைகளேச் செய்தல் வேண்டும். திருக்கல்யாணத்தில் மிகவும் முக்கியமாகிய கிரியைகள் எவையெனில் அங்குரம், இரட்சாபந்தனம், அம்மனுக்கு பூரகர்மம், கும்பபூசை, அக்கினிகார்யம் முதலாகிய கிரியைகளேச் செய்து முடித்து கன்னிகாதானம், கோத்திர உச்சாடனம், மந்திரவாசம் கொடுத்தல் மங்கல்யமஹாஜனப் பரிசனம், மங்கல்ய பூசை, நவக்கிரக தானம், முகூர்த்தப்பிரீதி செய்தல், மங்கல்யதாரணம், மாலேமாற்றுதல், மதுபர்க்க நிவேதனம், கோதரிசனம், சேஷஹோமங்கள், நவக்கிரக ஓமங்கள் ஔபாசனம், சத்தபத, அம்மி மிதித்தல், இலாஜ ஓமம், மூன்று முறை சுற்றிவந்து ஓமம் செய்தல், அருந்ததி தரிசனம், ஆசீர்வாதம், ஆராத்திரிகம் இவைகளேச் செய்து முடித்தல். மேலே கூறிய இந்தக் கிரியைகளே சிவாசாரியரானவர் மிகவும் சுருக்கமாக ஆலயங்களுக்கு போதாயன சூத்திரப் பிரகாரமாகவே சகல கிரியைகளேயும் செய்து முடித்தல் வேண்டுமென்று மேற்படி ஆகமங்களில் கூறியிருக்கின்ற தன்மையினுலே ஆலயங்களுக்கு பேதாயனேக்தப் பிரகாரமானது போதாயன கிருஹ்கிய சூத்திரத்தின்படியே விவாகம் முதலிய கிரியைகளேயும் ஔபாசனக்கிரியைகளேயும் செய்தல் வேண்டுமென்பது கருத்தாகும். ஆகையினுல் எந்தச் சூத்திரத்தை அனுஷ்டிக்கிறவர் என்றுலும் சிவாசாரியர்களுக்கே போதாயன கிருஹ்கிய சூத்திரம் உரியதாகும். ஏனைய கிருஹ்கிய சூத்திரத்தின்படி ஆலயங்களில் செய்தல் கூடாது. போதாயன சூத்திரத்தின்படியே சிவாசாரியர்கள் எல்லாரும் வைதீகக் கிரியைகளேச் செய்தல் வேண்டுமென்பது கருத்தாகும். சூத்திரங்களில் போதாயனமே மிகவும் சிறந்ததாகும். ஆனபடியால்தான் ஆலயங்களுக்கும் அந்தப் போதாயன சூத்திரத்தின்படி செய்ய வேண்டுமென்பது பெறப்பட்டது. இனி சூத்திரம் தெரியாதவர்களாய் இருந்தாலும் போதாயன சூத்திரத்தின்படி வைதீக கிரியைகளேச் செய்து முடித்தல் வேண்டும் என்பது ஆகமங்கள் கூறுகின்றன வைதீகக் கிரியைகளினுல் தேகசுத்தியும் ஆகம கிரியைகளினுல் ஆத்மலாபத்தையும் அடையலாமென்பது மேற்படி வேதாகமங்கள் கூறுகின்றபடியால் சிவாசாரியர்களுக்கு இவ்விரண்டும் வேண்டற்பாலதாயிற்று. எனவே வைதீகம்,

ஆகமம் ஆகிய இந்த இரண்டையும் கலந்து செய்தல் வேண்டுமென்பது பெற்றும். இதனை யறிந்து சேக்கிழார் பெரியபுராணத்தில் சம்பந்தர் புராணம் முதலாவது பாட்டில் வேதநெறி தழைத்தோங்க மிகு சைவத்துறை விளங்க என்று முதலில் கூறுகின்றார். எனவே வைதீகம், சைவமேவச : சைவம் வைதீகமேவச : வைதீகாத்பரம், சைவம், சைவாத்பரம்நஹி : என்ற காமிகாமத்துச் சுலோகத்திஞல் சைவத்தின் மேலானது ஒன்றுமில்லை. ஆனதன்மையினலே சைவமே சிவசம்பந்தமானது, சைவசமயம் என்ற காரணப்பெயர் வந்தது. சைவசித்தாந்தி களுடைய கருத்தும் இதுவேயாகும். அத்துவித நிலைமையும் இதுவே குறிக்கும்.
இவ்வாறே சகல விவாக கிருத்தியங்களைச் செய்து முடித்து கும்பங்களை உத்துவாசனம் செய்து அக்கினி உத்துவாசனம், இரட்சை சாத்தி, மங்களாசீர்வாதம் செய்து ஆலாத்தி எடுத்தல் வேண்டும்.

வைதீக விவாகக் கிரியைகள் செய்யும்போது பிராமண வீட்டுக் கல்யாணத்தில் (வரனுக்கு) மங்கல்ய தாரணத்தின் பின்னர் ஔபாசனம் முதலிய கிரியைகள் நடக்கும் போது வரனுக்கு வலப்பக்கத்திலே மணமகள் இருத்தல் வேண்டும். எக்காரியத்திலும் மணமகனுக்கு இடப்பாகத்தில் இருத்தல் சொல்லப்பட்டது. மணமகன் மூன்று காரியங்களில் இடப்பாகம் சொல்லப்பட்டது. அதாவது எப்படியெனில் இடப்பாகம் இலாஜ ஓமத்திலும் ஆசீர்வாதத்திலும் ஆலாத்தி எடுக்கும்போதும் இந்த மூன்று காரியங்களில் வரனுக்கு இடப்பாகத்தில் மனைவி இருத்தல் வேண்டும். ஔபாசனம் முதலிய கிரியைகள் நடக்கும் போது புருஷனுக்கு வலப்பக்கத்திலே இருத்தல் பெறப்படும். ஆகம கிரியைகளில் விவாகம் முதலிய சடங்குகளிலும் மங்கல்ய தாரணத்தின் பின்பு பெண் இடப்பாகத்தில் இருத்தல் எல்லாக் கிரியைக்கும் என்று உணர்க. இந்த விஷயங்களில் சிலர் மாறுகக் கொள்ளுதல் உலக சம்பிரதாயமாகும்.

## திருவூஞ்சல்

அதன் பின்பு டோளோத்சவம் செய்தல் வேண்டும். டோளோத்சவம் என்பது திருவூஞ்சல் ஆகும். அன்றைக்கே செய்வதுமுண்டு சிலர் மறுநாள் செய்வதுமுண்டு.

## ஆசாரியோத்சவம்

பிரதான சிவாசாரியார் முதலாக எல்லாச் சிவாசாரியர்களுக்கும் இரட்சாபந்தன உத்துவாசனம் செய்ததன் பின்பு சுவாமி சந்நிதானம் ஆஸ்த்தான மண்டபத்தில் ஆசாரியர்கள் எல்லோரையும் இருக்கச்செய்து பூசை, தாம்பூலம், சந்தனம், பன்னீர், ஆராத்திரிகம் இவைகளைச் செய்து தெட்சணை, வஸ்திரம், உத்தரீயம் முதலியன கொடுத்து அவர்களுடைய ஆசீர்வாதத்தைப் பெற்று அதன்பின் ஆலயத்திலிருக்கும் எல்லோருக்கும் வஸ்த்திரம், பணம். முதலியனவும் கொடுத்து அவர்களையும் சந்தோஷப்படுத்தி சிவபெருமானுடைய அனுக்கிரகத்தைப் பெற்று உய்வார்களாக. சிவாசாரியர்களை வாத்திய சகிதமாய் அவர்களது இல்லத்துக்கு அழைத்துச் சென்று விபூதிப்பிரசாதம் பெறுதல் வேண்டும். அவர்களுக்கு கிரியாகாலத்தில் போசனம் முதலான வசதி செய்தலையே சமாராதனை என்று கூறுவர்.

## மண்டலாபிஷேகம்

சிவன், அம்பாள், பரிவாரமூர்த்திகள் முதலாகிய எல்லாச் சுவாமிகளுக்கும் குறிக்கப் பட்ட கால மண்டலாபிஷேகம் முடியும் வரைக்கும் ஸ்நபனம் முதல் ஸஹஸ்ர கலச ஸ்நபனம் வரையும் உள்ள ஒவ்வொரு நாளும் அபிஷேகம் சிறப்பாகச் செய்தல் வேண்டும்.

ஒரு மண்டலம் : திரிபக்ஷம் என்று பெயர். அதாவது 45 நாள் சிலர் 48 நாள் என்றும் கொள்வர். உத்தமம் 45 நாள் ஒரு மண்டலமாகும். இந்தப் பிரகாரமாக உத்தம, மத்திமம், அதமம், என்று சொல்லப்படுகின்ற தினக்கணக்காக எனவே 23, 12, 10 நாள் என இந்தக் கணக்காகவும் சிலர் கொள்வார்கள். அதைவிட 48, 45, 40 என்கின்ற கணக் காகவும் உத்தம, மத்திமம், அதமம் ஆகவும் நாட்களில் மண்டலாபிஷேகத்தை பூர்த்தி செய்து கொள்வதுமுண்டு. அவர்களது வசதியைப் பொறுத்துச் செய்யப்படுவதாகும். சிலர் மண்டலாபிஷேக முடிவான தினத்தில் சகஸ்த்திரகலாசாபிஷேகமும் அல்லது சங்காபிஷேகமும் முதலியன செய்து இரவு உற்சவ முதலியனவும் செய்வது வழக்கமாகும். இதன் பின்பு இரட்சாபந்தன உத்துவாசன சுவாமிக்குச் செய்தல் வேண்டும்.

இந்தப் பிரகாரமாக வேதாகம விதிகளில் கூறியபடி கும்பாபிஷேக கிரியைகளை முறைப்படி செய்து முற்றுப்பெற இறைவன் திருவருள் முன் நிற்குக.

## மண்டலாபிஷேகம்

அஷ்டபந்தனஞ் சாத்திய தோஷ, நிவாரண, அகோர, சமனய முதலானதன் பொருட்டும் கும்பாபிஷேகஞ் செய்த பலனையடைவதன் பொருட்டும் அவசியம் செய்ய வேண்டியது மண்டலாபிஷேகம்.


## மஹாஹவி நிவேதனம்

கும்பாபிஷேகத்தாலும் வெப்பத்தாலும் ஏற்பட்ட மஹாக்ஷுத் நிவர்த்தியின் பொருட்டு பரிபூரமணமான ஷட்ரஸான்ன பலகார பலதாம்பூலாதி நிவேதனஞ்செய்து பிராமணர் ஏழைகள் ஆலய ஊழியர்கள் முதருயோர்களுக்களித்தல்.

ஓம்தத்ஸத்

## கிராமதேவதை

கிராமதேவதை முதலிய தேவதைகளுக்கு அபிஷேகம் உற்சவம் முதலியன கொண்டு செவ்வையாக நடாத்துதல். கிராமத்திலுள்ளவர்கள் எல்லோருமாக பொங்கல், மடை போடுதல் முதலிய வேள்விகள் போலச் செய்து வணங்குதல், திருமுறை ஓதுதல் அதன் பின்பு கந்தபுராணம் முதலிய புராணங்களை கோவிலில் படித்துப் பொருள் கூறுதல், உபந்நியாசம் செய்தல், மேற்படி மண்டலாபிஷேகம் முடியும்வரைக்கும் வேதபாராயணம், தேவாரம் முதலிய படித்தல், கூட்டுப்பிரார்த்தனை செய்தல் முதலிய செய்தல் ஆலயத்தில் இறைவன் சாந்நித்தியம் அடையும் பொருட்டுச் செய்தலாகும்.



ஸ்ரீ சிவகாமியம்பாஸமேத ஆனந்த நடராஜ மூர்த்தி

இது ஸ்ரீ முன்னேஸ்வர க்ஷேத்ர புராதன மூர்த்திகளுள் ஒன்று



ஸ்ரீ அம்பிகை மஹாமேருயெந்திரத்துடன்

உ

ஸ்ரீ வடிவழகி துணை

" ஸ்ரீ முன்னேஸ்வரமான்மியம் "

(பாக்கள்)

இஃது கந்தஷஷ்டி, விஞயகஷஷ்டி, ஏகாதசி, சிவராத்ரி, நவ ராத்ரி முதலிய புராணங்களைத் தமிழில் விருத்தப் பாக்களாலியற்றிய வரும் மணிமந்திர ஔஷத சாஸ்திர விற்பன்னரும் முத்தமிழ் வித்து வானும் ஆரியபாஷா பண்டிதரும் 'நா' வன்ஞ (நாவல்நா) இவ்வொரு எழுத்தாலேயே வியாபகமானவருமான

## பிரமஸ்ரீ நா. சிவசுப்ரமண்ய சிவாசார்யர் அவர்கள்

இயற்றியது

(இலங்கா மான்மிய 12000 பாக்களுள் ஸ்ரீ முன்னேஸ்வரமான்மியம்)

காப்பு

பன்னிய காண்டமைந்து படலமோர் முப்பதின்மே
லென்னும்பன் னீராயிரத்தி னறுநூறு விருத்தச்செய்யுள்
தன்னிற்சீ ரிலங்காமான்மியந் தழைதென் கோயிற்புராணங்
கன்னிகை யருளுமங்கைக் கற்பகம் கருதிச் சொல்வாம்

நூற்பயன்

திருவுங் கல்வியுந் திகழ நீதியின்
அருள்வரு முத்தியு மணுகுஞ் சிற்பரம்
பொருவருந் தெக்கி ணலய புராணமே
லொருகவி யாயினு மோர்ந்து ரைக்கினே

கடவுள் வாழ்த்து

மழைவளஞ் சுரந்துமல்க மாநிலஞ் சுரக்கத்
தழைவை தீகசைவந் தாரணி பெருகநீதி
கழைகணுற் றெழிரத்தெக்கி ணலய புராணக்காதை
வரைகட லுலகமெங்கும் மலிந்தனு தினமும்வாழ்க

கண்ணலிங்கேசர் துதி

ஆயிரம் பணமுடி யாதி சேடனும்
வாயுவும் பொருசமர் மாற்றி யன்றருள்
தூய கண்ணலிங் கேசச் சோதியின்
சேயபொற் பதமலர் சென்னி சேர்த்துவாம்

கண்ணகாம்பிகை

புழுகொழுக நறவொழுகுங் குழலி ஞளைப்
புவனசராசர நிதமும் போற்றிநன்கு
தொழு பதுமமலர் நிகரும் பதத்திஞளைச்
சுதன்முதலெண் வகையுறுப்பிற் றுலங்கிமூவர்
வழுவு நெறி பெறுதியலக் கடைக்கணேக்கம்
வழங்குதிரு நாயகியை மழுமானேந்தி
அழகு பொலி யிடம்பிரியாச் செல்வமானை
அன்னைகண்ண காம்பிகையை யகத்துள்வைப்பாம்

திருத்தொண்டர்

திங்களங் கண்ணிவேய்ந்த செல்வனு ருலகோருய்ய
வங்கணே கொள்ளுங்கோல மம்மையா னந்தநிர்த்த
மிங்கிவ ரடியராக வெய்திஞே ரெய்தாநிற்போ
ரங்கவர் பதுமபாத மனந்தழீ அன்புசெய்வாம்

கடவுள் வாழ்த்து முற்றும்

### அவையடக்கம்

மதிபுனை சடிலத்தெம்மான் வடிநெடு வேற்கணம்மை
இதயமுற் றுளிரமுன்னு ளியம்புமப் பொருளை நந்தி
விதிமுறை தெரிந்துமீள வியன்சனற் குமாரற்கேற்ற
விதுரமா முனிவன்பண்டு வியாதனுக் கருளவன்னோன்

சூதமா முனியங்கோதுந் துகளறு புராணநுட்ப
மேதகு முனிவன்றேர்ந்து வேள்விசெய் துள்ளந்தேறி
நாதனம் புயமலர்த்தா ளுடுநைமி சர்க்குச்சொற்ற
காணிலங் காதைநாயேன் கருதுதென் மொழியினேற்றி

தருப்பணத் துலகுகாட்டுந் தகையெனச் சைவஞான
விரும்பமெய்ப் பக்திதன்னை வித்தையிற் றுலக்கநேர
அருப்பமின் மதியிற்றெக்கி ளுலய புராணக்காதை
தெரிப்பயான் முயன்றவாவைச் செகதலத் திலக்கினேனே

கலைக்கடன் முகந்துநீதி கவின்றுநற் பொருடுலக்கி
நிலைக்கரும் பொருளுளத்து நிலவவத்து விதமான
தொலைக்கதிர் சிஷ்யர்க்கேற்றுந் துகளில்வான் புலவீரென்றன்
மலைக்கெதி ரேற்றுபம்மின் வளர்சொலின் பொருளுணர்ந்தே

கற்பனை கடந்து ஞானக் கதிர்விரித் தருள்பரப்பி
எற்பொலி சகமிலக்கு மீசனெவ் வுயிர்க்குநாதன்
பொற்பொலி மேருவில்லி புண்ணிய சரிதங்கொண்டு
நிற்பதின் மலர்த்தார்நேர நெஞ்சக மகிழ்ந்துமாதோ

### பாயிரம்

முந்தொரு காலந்தன்னில் முதிரருந் தவத்தின்மிக்கார்
சிந்தனைக் கரியமேலைச் சிவநெறி யோதுந்தூயோர்
பந்தமில் மனத்தர்யார்க்கும் பண்ணவர் முராரிமேவும்
அந்தணர்ப் பதியிநீடப் போற்றியன்பி னிம்மொழிபுகன்றார்

தற்பமின் மனத்தவேதந் தழைதிரு வதனத்தைய
பொற்பமை வாணிநாத புண்ணிய வழியெஞ்சிந்தை
முற்படத் தவமியற்றி முதிர்மனை வாழ்வுபூண்டும்
முற்பவ மொழித்தற்கேற்ற வுறையுளொன் றருடியென்றார்

### வேறு

அன்னவ ருரைகேளா வாரணன் மகிழ்வெய்தி
முன்னிய வறநான்கின் முனிவர்க ளிவைசொற்றீர்
என்னவெ னனிகூறி இசைபெறு குசையொன்றின்
உன்னின ரொளிர்நேமி யுறுவர்முன் னுறுவித்தை

அந்தண ரிதுகேண்மின் அணிபெறு குசைநேமி
முந்துற வதனின்பின் முகமகிழ் வுடனேகி
அந்தம துறுமிடனின் அணுகி யிருமென்ன
வுந்தின னதனின்பின் யோகர்நன் னடைகொண்டார்

தழைதரு குசைநேமி சாரொரு வனமெய்தி
வழைதலி லொளிர்கானம் வானவர் புகழ்நேமி
யுழைபெறு வனமாக வுற்றவர் மகிழ்வெய்தி
மழையெதிர் மயில்நேர வைகினர் மகமாற்றி

அன்னவர் மகநேரு மார்வலின் மறைநாலுஞ்
சொன்னவன் முதரோணன் தோமறு சிவவேட

மென்னவு மொளிர்சீய னிருவினை சமைவெய்தி
நன்னிலை பெறுமேலோன் நான்மறை சொரிநாவான்

தத்துவ மசிகண்ட தவமுனி மிகுசூத
உத்தம னறவோர்க ளுயரிரு புறனோங்க
அத்தலை யணுகுற்று னந்தண ரெதிர்சென்று
சுத்திசெய் தடிபேணித் தூமலர் சொரிகின்றார்

அருக்கிய பாத்தியஞ்சீ ராசமன் னீயநல்கி
மருக்கிளர் விட்டரத்தின் மரபினி லிருத்திவேத
இருக்கிய றெளியுமேலோ ரிவனருள் முறையின்வைகித்
திருக்கில்பே ரன்பினோடு மிவையிவை செப்பலுற்றார்

மாதவ முனிவர்மேலாம் வாதரா யணன்மாண
நாதனு ரருள்புராணத் தணுகினின் றொளிர்விநோத
பாதபங் கயங்கனோவப் பரிந்திவ ணணுகிநந்தங்
கேதமுற் றொழித்தநாத கேடில்சீர் பரதகண்டம்

புரிதவப் 'பயனுமென்னுப் பொலிமேருச் சிகரமாகி
அரியயன் முதலாந்தேவ ரமர்திருக் கோயிலாகிப்
பிரளய காலத்துந்தன் பேருரு வழிதலின்று
விரியிடை நாடியாகி விளங்கிடு மிலங்கையன்றே

மன்னசீ ரிலங்கையோங்கு மானந்த கானத்தும்பர்
என்னையாண் முக்கணீசன் இறைவியோடு வந்துமேவி
மன்னுயிர்க் கருள்சுரந்து வரம்புரி வரலாறெல்லா
மின்னதென் றருளவென்னு வேத்தின ரவன்மகிழ்ந்தே

வடவனத் திமையாமுக்கண் வள்ளலார் வடபுரத்தைக்
கடிதினி னருளியுற்றார் கருதினன்ன கரை மேவித்
தடமலி பித்தர்வாவி படிந்திடிற் றத்துவச்சீர்
நடனநன் குவந்துகாணி நரலையாம் பிறவிநீங்கும்

பஞ்சபா திகம்பகை பிணிவிசார நீங்கும்
எஞ்சலில் சைவஞான மிசையுமுத் தான்மசோபை
செஞ்சவே யொளிருமென்னத் திருமுனி புகலவின்னோ
ரஞ்சலி புரிந்தேயேத்தி அன்பினிவ் வாறுரைப்பார்

ஆருயிர்க் குயிராய்ஞானத் தவிர்பரஞ் சுடராமுக்கண்
ணரியைப் பாகர்கண்ண லிங்கர்கண் ணுயிரத்தர்
சீர்பெறு வடபுரஞ்செய் திறனொளிர் சரிதம்யாவுந்
தேறுமா றுரைத்தியென்னத் திருமுனி புகலலுற்றான்

அறநெறி நின்றுமெய் மையழைத்து வாலுணர்விரித்து
மறுவறு முனிவீரின்ன வாலுணர் வோர்கள்சிந்தை
நிறைபரம் பொருளின்காதை நிகழ்த்துவன் புலம்வேறின்றி
அறிவொருங் கமைத்திரென்னு வந்தண னுரைசெய்கின்றான்

ஸ்ரீ வடிவழகி துணை

முன்னேஸ்வரப் படலம்

சம்பவ காண்டம் — தென்முனைக் காண்டம்

1. சித்தசித் தீசனுகிச் செறியுமுப் பொருளுமாகித்
தத்துவ மும்மைதேறுந் தபோதன ருளமுமாகி
நித்தனுய்ப் பரையிஞென்றி நிறைமதி யுலகங்கொண்ட
கத்தனங் கண்ணலிங்கக் கடவுளைப் பணிதல்செய்வாம்

2. சனகனுற் பத்தியாதி சாற்றியே லங்காதீப
முனையுறு படலமீறு மொழிந்துசம் பவகாண்டத்தை
அனகனுர் தென்முனைச் சீரமைதரு காண்டஞ்சொல்லி
வினைவலே யொருக்கிமேலாம் மெய்ப்பொருள் காணுகிற்பாம்

3. தென்முனை முதலாய்ச்சிங்கை செறிந்த வைராவதிப்பேர்
முன்முனை பிரமதேச முதலெழு வாயேயாகக்
கொன்முனை யைந்துகோடி யோசனை கொண்டதேச
நன்முனை யைந்துகோடி நாயகன் பதிவிளங்கும்

4. ஆதியார் கண்ணலிங்க ரருளினு லிலங்கைவீறி
மேதகு நரலைபம்பி வியன்புலத் தியனுர்காலம்
போதுற வநேககோடி புவிகளை ஆலயத்தைத்
தூதுறு மலர்ச்சிமிழ்த்துத் தயங்கினதென்பர் தொல்லோர்

5. படிபுக ழிராவணன்மேற் பயிலுறு மிலங்காதீப
நடவையி னேழுநூறு நண்ணிய காதமாக
வுடையவன் மழுமானேந்தி யுமையொரு பாகமாக
விடையினிற் காட்சிதந்து மேவுவ னெந்தஞான்றும்

6. இன்னவா லயங்கடம் முளிறையவன் கருணைதேங்கி
யன்னையோ டப்பனுகி யமைவடி வழகியோடு
மின்னறீர்த் துலகமா யியம்புநாற் பொருளுமோங்க
முன்னைமுன் னேசப்பேரின் முதற்கற்ப மொழுங்கினுனே

7. ஆவது பகுதியாகி யகிலமாய்ப் பூமியாகித்
தாவறு சலமேதீயாய்ச் சலனமே யண்டமாகி
யோவறு புவனகோடி யுள்ளுமா யுயிருமாகித்
தேவராய்ச் சித்தசித்தாய்ச் செறிந்தது பிரமாண்டந்தான்

8. அத்தகை பிரமாண்டத்துள் அமைந்தபல் லண்டத்தின்கட்
சித்தொளி ரிலங்காதீபஞ் செறிந்தபல் கோடியாகும்
நத்திய விருத்தியிங்ஙன் நவில்கிலஞ் சருவசித்து
சுத்தமார் சர்வப்ராண சங்காரந் துலங்கிற்றன்றே

9. போமுதற் பிரமாண்டத்தின் பொலிமூலப் பகுதியாகி
யாமுறை சங்கரிப்ப னரனெலா வுலகுமாகிக்
காமரு நுதல்விழிக்கட் கறையரக் கனலெழுந்து
தோமறு புவனதத்துவ தூலசூக்கும மவித்தே

10. சடசடத் தொலிமிகுத்துச் சராசர வுயிர்கள்யாவும்
படவெழு பிரமன்மாயன் பதைத்தன ராகியேங்கிப்
படவரா வசைக்குங்கச்சுப் பரம்பரற் காண்பான்தேட
வடலொழி ரனுதிமூர்த்தி யவருருத் தகித்துச்சாம்பர்

11. ஆக்கியே யங்கிமேனி யணிந்தன னுயிரைவாங்கித்
தேக்கிய புயங்களூடு திருத்தினன் செவ்வேளாதி

மாக்கவி னுருத்திரேசர் வரவர வாயினள்ளிப்
போக்கினன் கணேசன்தன்னைப் புரந்தன னிதயத்தேற்றி

12. ஆக்கையை மேல்விரித்தே அக்கினி மயமேயாகித்
தேக்கிய வொளிவிரித்துச் சிவைபரா பரையைப்பற்றி
நோக்கிய போதெரித்து நுணங்குறு பொறியேயாக
வாக்கினன் தனியேயாக வள்ளலங் காடினனே

13. பூதபூதிய சொரூப பொருளெலா மவிந்துபின்னர்
நாதனு ரருளினுலே நண்ணின நடலையாக
வேதினி னிற்பதெம்மா னிறையவன் சயம்புமூர்த்தி
காதலார் ஞானமேனி கட்பொறிக் கெட்டாமேலோன்

14. பின்னரே காலம்மாயை பெறுகலை நியதியாவுந்
துன்னிய குண்மவித்தை சூக்குமை பரைவினுசி
மன்னிய வகங்காரங்கள் வடிவொளிர பின்னுசக்தி
யென்னவே துலங்கலாலெம் பிரானரு ளினிதினேற்றி

15. சருவசங் காரமுற்றித் தாணுவாய்ச் சகலஞ்ஞானம்
விரிதலின் அநந்தகோடி விபுவிராட் டுருவமாகிச்
சரிசம ராட்டுக்கண்டு தழைசுராட் டுருவந்தேறிப்
புரியருள் விசுவமாயா பூரணம் பொலிந்தானன்றே

16. ஏகனுயனேகனுகி யிருந்தருள• மலமூர்த்தி யோகியாய்
யோகமுற்றி யுறுமக தத்துவத்துப் பாகமாய்ப்
பாகமுற்றிப் பயிலைந்து கலைவிரித்துச்
சாகையாய்க் கிளையாயோங்குந் தத்துவம் புவனகற்பம்

17. கண்டனன் கண்டிருண்ட கலையினி லலைவிரித்து
மண்டலமும் மைதேற்றி வருமலை நிருவிகாரங்
கொண்டனன் குணமேயாதி குறித்தெழ வருள்விரித்தா
னண்டமாம் பிரமாண்டம்மே லகிலமு முதித்ததன்றே

18. சுரந்தெழு மனையகற்பஞ் சொலிதிவ கற்பமென்னுத்
தெரிந்தவர் சொல்வர்முன்னைச் சிவகற்ப மதனின்முன்னர்
விரிந்தது மாயைகோடி விளைந்திடு மாயையாற்றிற்
பரந்தது ககனவட்டம் பற்றுமக் ககனனின்றும்

19. வாயுவி னண்டந்தோன்ற வளரந்த வாயுவண்டத்
தேயுவிற் தேயுவண்டஞ் செனித்தது தேயுநின்றும்
பாயசீ ரப்புவண்டம் பரந்தது பரந்துதேங்க
மேயதொல் லப்புநின்று மேதினி பிறந்ததன்றே

20. இவர்தரு மேதினிக்க ணிகையண்ட நூறுகோடி
யவைகளின் முன்னுரைத்த வண்டங்கட் கவையிரட்டி
தவயறுங் கோடியாகச் சாற்றுவ ரிவைகடம்முட்
புவனமா ரிலங்காதீபம் பொலியுமொவ் வோரினண்டம்

21. தத்துவா தீதமாகிச் சகளமா யிடையினுடி
யொத்தது குண்டலிக்க ணுரைதரு மசபாசத்தி
வைத்தது விநாயகப்பேர் மருவிய தகிலலோக
சித்தெலாந் தன்னிடத்துச் சேர்த்ததிவ் விலங்கையாமால்

22. பன்னுபல் லண்டமுற்ற பரப்பெலாஞ் சுழுனைநாடி
முன்னுபிங் கலையாநாடி மொய்த்தது பிரமன்மாலா
யன்னிலை யகசிருட்டி யாக்குதல் காத்தல்நீத்த
லென்னவுங் கொண்டபான்மை இலங்குமிவ் விலங்காதீபம்

23. அத்தகு மிலங்காதிப மமைவட முனையோதி
வித்தகத் தென்முனைப்பால் விளங்கிய பூமியெல்லா
மத்தனு ராடல்வேட்டே யருளின னுதிநித்த
சித்தனுர் கருணையாரே தெரிகுவர் செப்புங்காலே

24. ஆதியார் சிவகற்பத்தி னருவுருச் சுயேச்சையாகி
நாதனுர் முன்னர்க்கோயி னணுகிய தானமாக
மேதகு மோரோர்கோடி யோசனை மேதினிச்சார்
நாதனுர் முன்னேசப்பேர் நணுகினன் முன்னிருந்த

25. பூதல மாதலாலே பொலியுமுன் னேசனுமங்
காதலா ரெந்தஞான்றுங் கவின்றிடு மினையபூமி
யோதமார் வாரிதிச்சா ருயர்திரு மாயனுதி
மேதகு குடிளைபல்கி விரும்பினர் பவந்தொலைக்கும்

26. இதனிடை மேல்சாராக விசைகுரு நாதசெவ்வேள்
விதமுறு தவம்புரிந்து மேவலி லினையதானம்
பதிபுகழ் குருநாக்கற்பேர் பெற்றிடு மினையபூமி
மதலைதோய் சடிலத்தெம்மான் மைந்தநல் லுருவாயோங்கும்

27. துங்கமா ராதிசக்தி சூக்குமை யுமைபெம்மாட்டி
மங்குல்நேர் மாயன்தங்கை மகாதேவி முன்னோர்காலைச்
சங்கர சிவனைப்போற்றித் தற்பர நினதுமேனி
இங்குநாம் பாதியென்று ளிறையவன் முறுவலித்தே

28. சருவசங் காரகாலத் தையனீ யெரிந்துசாம்பர்
விரவினை யுயிர்நம்மாட்டு மேவினதன் றென்செய்தாய்
யொருவரு மெனதுசக்தி யொன்றுகொ லட்டசித்தி
பரவினம் பரவுங்காலை பாவைநீ கிரியையானுய்

29. அட்டமா சித்திகொண்ட வருளொளி யாடல்செய்கை
யிட்டுநாம் பார்க்கும்போதி லெனைனீ யற்பமென்றும்
கட்டெழி லுமையவல்லி கதழ்ந்தனள் சிவன்சிரித்தான்
மட்டொழு கனகவல்லி மருண்டனள் பாங்கிநிற்ப

30. விடவிடத் ததிர்ந்துவிம்மி வெகுளியோர் பெண்குழந்தை
வடிவுறப் புவிகிடந்து வாய்விடா தலறுங்காலைப்
புடவிபல் லண்டரண்டம் போழ்ந்தது மேருச்சாயை
கடலகஞ் சுவறிவற்றிக் கானலாய்ப் பரந்ததன்றே

31. மன்னுயிர்க் கணங்கள்தோற்று மலரயன் கோடிகோடி
துன்னுமா லாதியோருந் துயருளந் தேங்கியந்தோ
என்னுயிர் காத்தியீச இறைமுனீச் சரனேயென்னுப்
பன்னின ரீசன்பான்மைப் பாற்படு மருளினுலே

32. சகவுயிர் பிரமராதி தழைந்தன மாயன்தானும்
புகுதியி னிலவானின்றுன் பூரணி யிதனைக்கண்டே
தகுசிறு பெண்குழந்தை தனையெடுத் துலறிச்சுற்றி
வகைகெழு மாமரத்தின் மருங்குற வெறிந்தாளன்றே

33. அந்தவான் குழந்தைசீறி யலர்த்திரு வண்டேயாகிப்
புந்திசார் மலரைப்பற்றிப் போழ்ந்துடன் கிடந்துமுற்றி
முந்துநா ளனேககால மாகவே முதிர்ந்துவீறிப்
பைந்தொடிக் கனியேயாகப் பழத்துடன் வீழ்ந்ததன்றே

34. கனிவிழா தொழிர்ந்துமல்கக் கண்டோர் வேதியனெடுத்தே
முனைவனெம் முனேசப்பெம்மான் முண்டக மலர்ப்பதத்திற்

புனைதர வைத்துப்போற்றிப் பூசித்து நிவேதனுதி
நனியுற வுபசரித்து நாதனே போற்றியென்றும்

35. சங்கர கருணைநாத சயம்புவே தாந்தநித்த
மங்கல வுமையோர்பாக மான்மழு வேந்துங்கையாய்
திங்களைத் தீயைப்பாம்பைச் செஞ்சடைப் பிணித்தவையா
இங்கெனக் கருளுகென்னு விணையடி பரவிமேலும்

36. கருணை யோர்வடிவமான கடவுளே முனேசநாத
தெரிவரும் பொருளேயட்ட யோகமே சிவனேயேறு
மருவியவ னுதிநித்த மதலையொன் றின்றிநாயேன்
பெருகிய துயரிலாழ்ந்தேன் பிஞ்ஞக வருடியென்றான்

37. ஆங்கவன் துதியினு மலரு மன்பினின்
வீங்கிய பக்தியின் விளைவி னும்மகிழ்
பூங்கழல் முனீச்சரன் பொருவி றன்னுருத்
தேங்கிய விலிங்கமேற் றெறியத் தோன்றினுன்

38. ஐந்தெனுந் திருமுக மவிருஞ் செஞ்சடை
இந்துமந் தாகினி யியலுங் கொன்றையும்
நந்தலில் தும்பைசெங் காந்தள் நண்ணிய
விந்தையா ரெருக்கலரி வில்வ நொச்சியும்

39. சருப்பமும் பிணைதரத் தயங்கு கேள்வியி
னுருக்கொழுஞ் சங்கணி யுயிருந் தோட்டணி
திருக்கிளர் நுதல்விழி செறிந்த நோக்கமு
மருக்கமழ் மதியினின் மலிந்த வாண்முகம்

40. கண்டமேற் சருப்பமும் காள நஞ்சொழி
விண்டுறு காந்தியும் விளங்கு மார்பினர்
முண்டக னமர்சிர மொய்த்த மாலிகை
யெண்டகைக் காட்சியி னினிய கூருமம்

41. படியுட லோடுமேற் பன்றிக் கொம்பினி
யுடையபன் மாலிகை யொளிரு மீன்கணுந்
தடையறு நரவரி தனது போர்வையுங்
கடமலைப் போர்வையுங் கவின மேலுமே

42. ஐந்திரு கைகளி னவிரு மாடனு
வெந்திற லாயுதம் விளங்கு பான்மையு
நந்தலி லிடையினி னவிலுஞ் செம்புவிச்
சுந்தர வாடையுந் துலங்கு முப்புரி

43. நூலெனு மனந்தனு நுவலும் பாதமேற்
கோலமார் வேதமேற் கொள் சுரத்தொனி
யோலிடு கிங்கிணி யொளிர் சதங்கையுஞ்
சீலமா ருமையிடைப் பாகஞ் சேரவே

44. பூதர் பல்லாயிரர் பூரி காகள
மோது துத்தாரி மேலுயர் தவண்டைகள்
மேதகு சல்லரி விளம்பு காகள
நாதபே ரிகைமுதல் நவின் றொலிப்பவும்

45. தொண்டர் பல்லாயிரர் துதி யளப்பவும்
விண்டல மலர்மழை விண்ணு ளோர்கள்கைக்
கொண்டனர் சொரியவுங் கோல வாணனர்
தண்டலி லாயிர முகங்கள் சார்வணை

46. புடைபுடை யடித்தனன் பொருவி டங்கர
மிடமுறை திரித்தன னிசைத் தெழுப்பவுங்
கடலென மாதவக் கணத்த ரின்னிசை
யுடையசீர் வேத முச்சரித் தொழுங்கவும்

47. விஞயகன் மடியினின் மேவி யெம்பிரா
னஞமய முகங்களை யவிர்து திக்கையாற்
பஞமுறை பன்முறை படிக விக்கவுந்
தஞதருட் சக்தியாற் சயம்பு சங்கரன்

48. வந்தன நின்னருள் வழங்க வேதிய
யெந்தையே யமலனே யிறைவனே செழுஞ்
சந்திர சேகர தனியனே யொளிர்
செந்தழல் மேனியாய் செறிமு னீச்சர

49. நாயக வுமையொரு பாக மாகிய
சேயனே வெள்விடை செறிந்த மாயனுஞ்
சாயக தற்பர சயம்பு நிற்குண
மாயகா மீசுர வரத போற்றியே

50. என்றடி வணங்கின னிறைவ னெம்பிரா
னன்றவர்க் கருளுவா னனையர் பார்த்தரோ
வுன்றன துயர்பணி யுயரும் பூசனை
நன்றிசார் தோத்திரம் நன்ம யிழுத்ததே

51. வேண்டிய வரமென விளம்பு கென்றலு
மாண்டவன் தன்னை யவ்வைய நோக்கியே
காண்டகு நின்னுருக் கலந்த பார்வதி
சேண்டொ டரமிசமாயச் சிறந்த தெய்வமாய்

52. எனக்கொரு பெண் மகாரீக மேலுமென்
மனத்துனி யொருவலா வரமுந் தம்மெனத்
தனித்தனி வணங்கினன் சகல நாயக
னெனைத்தையும் கேட்டன னியம்பு வானரோ

53. வருதியென் மனமகிழ் வழங்கு மாதவ
தருதுநின் மனவெணந் தவறி ஞமலே
கருதுதி யென்றனன் கருது மப்பழம்
பெரிதுதன் கரத்திஞற் பேணிப் பற்றியே

54. ஈதுதெய் விகக்கனி யிதனைக் கொண்டுபோய்
மேதகு பூசனை விரும்பிச் செய்மதி
காதலா லொருசுதை கண்ணகைப் பெயர்
மாதராய் வருமென வழங்கி மேலுமே

55. இந்தவான் சுதையினில் யாவு மெத்துணைச்
சிந்தையும் வேண்டிய சித்தி யத்தலை
வந்திடும் பெறுகென வழங்கி யெம்பிரான்
முந்திய விலிங்கமேல் முறை மறைந்தனன்

56. ஆவகைக் கனியினை யரிய சிந்தனை
மேவியவ் வருச்சனை விழைந்து நின்றுபோய்த்
தாவறு மனைபுகாத் தனது பூசனை
யாவுடை யாரிலிங் கத்தி னன்புற

57. வடபுறம் பதித்தனன் மாறில் பூசனை
யுடையவர் பூசையோ டுகந்து செய்துழி

மட்வரல் கண்ணகை வந்து தோன்றியே
கடிதவன் வேண்டிய கணப்பி நல்வரம்

58. தந்தனன் புதல்வியாய்ச் சார்ந்தவ் வேதிய
னெந்தையே யவன்மனே யியலும் பத்தினி
நந்தலி லன்னேயே யெனந யந்தனள்
ஐந்தெனும் வயதவட் கான பின்னரே

59. தந்தையை யன்னேயைத் தாழ்ந்து போற்றினள்
எந்தையே யின்னினி யான் முனீச்சரச்
செந்தழல் மேனியன் சிவனின் ளுெண்டுந்
தந்தருள் புரியெனச் சாற்றும் வேளேயில்

60. அனேயவர் பரிந்தன ரம்மை பாலகி
தினேயள வேனுனின் செய்ய மேனிதான்
புனேதவம் பெறவரி தென்று போற்றின
ரினேயளு மினேயருக் கருளிற் செப்புவாள்

61. என்னுயி ரவனதே யெனது மேனியு
மன்னதென் றெனேத்தடை யாற்றல் செவ்வியோ
முன்னேநா தன்பணி முறைபுரிந்து யான்
னின்னிலேச் சேருவ னெனக்கு நல்விடை

62. தம்மென வணங்கினள் தனேயை யெண்ணமே
செம்முறை யாமெனத் தேர்ந்து தந்தையு
மம்மையும் பாங்கிய ரனேகர் சூழ்தர
மம்மவென் றுய்த்தன ரவளுந் தேறியே

63. மாயவ ளுறுநீ மலரு மைவகை
நேயமார் நானமு நிரப்பி நீறணிந்
தேயபஞ் சாக்கர வியம்பி ருத்திரன்
சேயபன் மாமணி திகழப் பூண்டரோ

64. கடலெழு விடனுகர் களனே மான்மழுப்
படையனே விடையனேப் பாலிற் பார்வதி
உடையனே யொண்ணிலா வுயரு மாமதிச்
சடையனேப் பரவியே தாழ்ந்து மேறுமே

65. பன்னிரு குரோசமேற் படரும் புண்ணிய
நன்னெறித் தீர்த்தநீர் நாற்பத் தெட்டெனப்
பன்னிய துறையெலாம் படிந்தங் காடியே
தொன்னெறி முனீச்சரஞ் சூழ்ந்து போற்றிமேல்

66. அருளொளி யிலிங்கமாய் அளவி லாதொளிரப்
பொருளுமாய்ப் பொருள்களின் புறம்பு மாகியே
தெருள்விளே யிலிங்கமேற் சிறந்த பத்திமை
விரிதலி னவ்வுரு மெல்ல நீக்கினுள்

67. பரஒொளிச் சிவநிசி படர்ந்த பாதிநாள்
விடுசுட ரெழுந்தது விளங்கு சோதிமேல்
வடிவமை யுமையொடு மருவி யெம்பிரான்
நடனவி லானந்த நடந்து லங்கவே

68. காட்டின னண்டமேற் கவிரு மெவ்வகை
கேட்டுய ருயிர்களுங் கிளந்து மல்கின
நாட்டமார் கண்ணகை நடன காளியாய்
ஈட்டிய பேருரு விசைந்து தேறியே

69. சுத்தமத் தளத்தொனி தும்பு ருத்தொனி
சித்தமார் வாணன்முற் சேர்த்த வான்பணே
தத்திமி திமியெனத் தாளம் நாட்டவே
அத்தலே மாலய னடித்த மத்தளம்

70. தாளமும் ராகமும் தயங்குறு வீணேயும்
நீழிய சுரங்கள் நிலவு வாணிசொல்
ஆழமார் பாணியு மமையக் கிம்புருத்
தூளமார் கின்னரித் தொகையுந் தூர்ப்பவே.

71. எழுந்தனள் கண்ணகை யியலு மாயிரஞ்
செழுந்தகை முகங்களுந் திகழீ ராயிரக்
கொழுந்தகைப் புயங்களும் கொடிய சர்ப்பந்தாழ்
விழுந்தசை பான்மையும் விளங்கு வெண்டலே

72. மாலிகை மழுப்படை வயங்கு கிங்கிணி
யோலிடு கண்டைமே லுரத்த சத்தமுங்
கோலமார் விழிகளிற் கொண்ட தீப்பொறி
யாலமே லள்ளிப்பா லகிலம் வீசவே

73. திரிபுடை தாளமேற் றிரித்த காளிகள்
வரவர முடுக்கின மகிழு மானடப்
பரிபுரை திருநடம் பயிற்ற வண்டமு
மரிபிர மாதிய ரகில மன்னுயிர்

74. அதலமே விதலமா யங்கு மிங்குமாய்ப்
பதநிலே பாறினர் பதைத்த காலேயில்
மதியணி செஞ்சடை வரதன் முக்கணன்
னதிபதி முனீச்சர னதுதெரிந் தரோ

75. நல்லருள் வழங்கின நாரணன் முதற்
றெல்லே யோரவ னருட்டுறை நிரம்பினர்
அல்லுறல் நடனமா காளி யாங்கணே
யெல்லேயில் நற்பொறி யெங்கும் வீசினன்

76. குருவெழ வெப்புநோய் கொள்வ சூரிநோய்
பெருகலி லெம்பிரான் பின்னர் மாற்றலு
மரிவையுங் கண்டனள் அம்மை சிந்தலும்
வருதிருக் குமாரனே மயூர வாகனே

77. கந்தனே வருத்தியே கைக்குழந் தையா
யுந்தின னவளுமவ் வுயர்ந்த பாலன்மேற்
சிந்தனே பெருகலிற் சினந்த ணிந்துமேல்
மைந்தனே யெடுத்தனள் மகிழ்ந்து புல்லியே

78. பாலக வருகெனப் பரிந்து மோந்துமேற்
சீலமார் குககுரு நாத திவ்விய
கோல மார்சிவ சுதவெனக் குழைந்தனள்
ஆல னேரவன் மனமது மயங்கினன்

79. இந்தவா றிப்பாலனு மிசைந்து கண்ணகி
மைந்தனு யொருமுகம் வளரி ரண்டுகை
சுந்தர விருவிழி துலங்கு மம்புயப்
பைந்தொடை பூணுநூல் பாத பங்கயம்

80. முத்தணி சந்திர காவி மொய்யெழில்
வத்திரம் புத்தகம் மலரு மைவகைச்

சித்திர வோடதி செறிந்த பைங்கிளி
மெய்த்துற விளங்கினுன் விமலற் போற்றினுன்

81. என்னேயின் றருளிய விறைவ நாயக
முன்னவ முனீச்சர முதல்வ வற்புத
என்னயான் செய்பணி யிசைத்தி யென்றலுந்
தன்னிகர் பரம்பொருட் டலேவன் கூறுவான்

82. வருதியென் மைந்தனீ மாறி லித்தலம்
பெருகிய வடகிழக் கிலங்கிப் பெட்புறு
மொருவரை யிருந்ததங் குயரும் யோசனேப்
பருவமே லுயர்ந்தது பகரக் கேட்டியால்

83. யோசனே முன்றுளே யுற்ற தாமெனப்
பேசுவர் தொல்லேயோர் பெருகு மவ்விடைத்
தேசுய் ரிந்திர சித்துச் செய்திடும்
ஓசமார் யாகமு முயர் நிகும்பலே

84. அண்டையெழு போரினி னளமுங் கண்டது
திடமுறு மவ்வரை சென்று நீயுறில்
உடையதோர் நாமமு முயரு மென்றுமால்
வடிகுரு நாக்கலாய் வழங்குங் காண்டியால்

85. வித்தக வவ்விடை மேவி நீபரி
சுத்தனுய்க் கண்ணகை துலங்கு மேனியை
வைத்தனே போற்றிமேல் வசூரி நோய்தெறச்
சித்திர மருந்துநீ செய்து மேவுதி

86. உன்னுடை யருளினு லுயரு மோர்குள
மன்னிலே யுதித்திடு மருவிகான் றெழீஇச்
சென்னெறி யுந்தியாய்ச் செறிந்து பின்னரே
முன்னிய மாயவ னுறு முன்னுற

87. படிந்தெழீஇ வாருதி பற்றி நற்றிறந்
திடம்புரி புண்ணிய தீர்த்த மாயுறும்
படிந்தவர் சாருநோய் பாற்றி முத்தியுந்
தடம்பெறு சிவமுமாய்த் தம்மி னேங்குவார்

88. மாலெழு மாயவ னுற்றின் பாங்கரே
சீலமார் தசரதன் செம்மல் ராமனும்
மூலமா ரிலிங்கமேனி முறை பதித்தனன்
ஆலுமா னுவரி யென்ப ரான்றவர்

89. அந்தவா னிலிங்கமே லவிரு மூலநீள்
சுந்தரப் பகுதிமேற் றெடங்கிக் கூரும
விந்தைசா ரக்குற வெடித்துச் சக்தியை
யுந்திமேற் பிளந்துபின் னுயரு நீயமெனும்

90. பாதலங் கீண்டது படியின்மே லெழீஇ
யோதுகட் காட்சியா யுயர்ந்து பின்னரே
சீதள வைவகைத் திறங்கொள் மென்னிறம்
போதர நின்றது புகலக் கேட்டியால்

91. ஈதரோ வதிசிவ கற்ப மெய்துற
வாதர நமதுரு வமைத்துப் போற்றினங்
காதலாற் காண்கினுங் கசிந்து போற்றினும்
மேதக நினேக்கினும் விமல நம்முரு

92. ஆகியே நமதுரு வமைந்து சிற்பர
யோகியா யுள்ளுமா யுணர்வு மாகியப்
போகியாய்ப் போகமேற் பொலிந்த வற்புதச்
சோதியாய் நிலவுவர் சொல்லக் கேட்டியால்

93. எண்டகு மித்தலை யிலங்கு யோசனை
கொண்டதோர் பூமியிற் குலவு லிங்கமுங்
கண்டதோர் தீர்த்தமுங் கணக்கி லாதன
அண்டமன் னுயிர்க்கெலா மவைகள் சான்றதாய்

94. புறனுமாய் வெளியுமாய்ப் பொலிந்த நல்லெழி
லறனுமா யரன்வழி யமைத்துக் காட்டிய
திறனுமா யிருந்தன செகங்க ளுய்வழி
யுறிலிவை யுன்னுத லுவப்ப தாகுமால்

95. இத்தலை யநேகமா யிருந்த தானமுந்
நத்திய நதிகளும் நவையில் வெற்புமேல்
வைத்திடு மடுக்களும் வளருங் கூபமும்
சுத்தமார் கங்கையிற் சுத்த மாகுமால்

96. இதனிடைப் படிந்துமே லிசை தென்புலப்
பிதிர்கடன் செய்வரேற் பிறப்பு நீக்கியே
அதிபராய்ச் சிவசம மாகி யற்புத
முதையமா யுலகெலா முய்ய மேவுவார்

97. சோடச தானமேற் சொல்லு மெவ்வகை
நீடிய தானமு நினைந்து செய்பவர்
பீடினை யாயிரம் பெருகு வாயினைத்
தேடியே சொல்லினுஞ் செப்பற் கேயுமோ

98. அவையெலா நின்மனத் தமையுங் காண்குதி
இவையொரு பாகமாய்த் திகழ வப்புற
மிவரவ லப்பாலினி யிசைந்த மாயவன்
அவிரொளி கதியதா யமைந்து மேவினன்

99. உத்தம தானமொன் றுளுற்று மேலையோர்
அத்தனை தானமு மாக்கு புண்ணியங்
கைத்தல நெல்லியங் கனியிற் காண்குவார்
புத்திர வின்னும்நாம் புகலக் கேட்டியால்

100. துலங்கிய மகோத யஞ்சொல் வருத்தமா
யிலங்கிய வுதயமே லிந்து வான்கலை
கலங்குறச் சதாசிவம் கணித்த வோரைவாய்ப்
புயம்புகுந் தின்னதி பொருந்த மூழ்கியே

101. நித்திய கடனெலா நினைந்து முற்றியே
சுத்தமார் பிதிர்க்கடன் றுதைதி லோதகம்
பத்தியி னிறைப்பவப் பரவணிக் குலஞ்
சத்தியார் சிவபதந் தழைத்தங் குய்வரால்

102. ஆவணிப் பூரணை யீரி ரண்டென
மேவிய மாதமேல் விழைந்த பூரணை
தாவறு மமைவினைச் சங்கி ராந்திமே
லோவறு நித்திய யோகத் தோங்கிய

103. பன்னிரு சிவநிசி பயிலும் யோகமாய்
முன்னிய சிவநிசி மொழியுந் திங்களின்

மன்னிய வாரநாண் மலியு மோணநா
ளின்னவை முனீச்சரற் கிசைந்த நாள்களாம்

104\. மார்கழி முப்பது மருவும் வெண்மதி
நீர்கழி யாடல் நினைந்து சங்கரத்
தேர்கழி பாட்லு மிசைந்து சுத்தமார்
பார்கழி மன்னுயிர்ப் பவமும் வீக்குமால்

105\. பிறப்பொழித் திணையன பேசு மன்னுயிர்ச்
சிறப்புறு சிவார்ச்சனை செய்த புண்ணியமா
முறப்படு யோகமா யோகி சோதியாய்
மறப்படு மூவகை மயக்கும் வீட்டியே

106\. ஐந்துமா முகங்களு மவிரு மம்புவி
சிந்துவான் கங்கையுஞ் செறித்த செஞ்சடை
நந்தலில் பாம்பணி நலத்த மேனியு
மந்திலே யடைகுவ ரவர்சி வோகமாய்

107\. அநுசதா சிவவுரு வடைந்து நீடியே
தனையுணர் தத்துவ சயம்பி னுேங்குவார்
இனையர்வான் குலமெலா மிலங்கிப் பாவவேர்
தனையொழித் தச்சுத னுலகஞ் சார்வரால்

108\. இனையவான் மாயவ னுற்றி னேழ்கரை
தனிலொரு பசுவினைத் தான மீயினு
மனையவான் பசுவுட லமையு ரோமமேற்
புனைசிவ கற்பநீள் பொலிந்த காலையில்

109\. உருத்திர வடிவுநீஇ யுலகம் யாவையுந்
தருத்தரு ளாடலிற் தானி யங்குவார்
பரித்தன கோடிநம் பால வென்றனன்
தெரித்தனன் முருகவேள் சிறந்து போற்றியே

110\. ஈசனுர் கட்டளை யினிது தேறியே
தேசுய ரவ்வரை சென்று மோனியாய்ப்
பேசரு மோர்குளம் பெட்டங் காளமாய்
வாசமார் தவவுரு வாய்ந்து பின்னரே

111\. சங்கரன் முனீச்சர தலத்தெம் மையநீழ்
பொங்கர வணிந்தவன் பூர ணன்தனை
யங்ஙனே நினைந்தன னறிவொ டுக்கிமே
லைங்கர முதல்வனை யருச்சித் தேத்தியே

112\. கண்ணகை நடன்மா காளி சீருருப்
பண்ணமை பிரதமை படுத்தியா யவ்வழி
யுண்ணக வெற்றினன் யோக பூசனை
எண்ணக யியற்றியே யினிய தானமேல்

113\. மலியெழு தானியம் மலர்த்தி மண்ணிணுற்
சொலியெழு கும்பமுஞ் சூழ வைத்தனன்
கலிகெழு வேப்பிலை கவினும் தேம்பழம்
நலிபவ தருப்பையு னன்று சூட்டியே

114\. நடவுறு கும்பமேன் நடன காளியின்
வடிவமார் கண்ணகை மாது சீருரு
விடனுற வமைத்தன னீரெண் பான்மையி
லுடையதோ ருபசர முறுத்திப் போற்றினுன்

115. சந்தமுங் கற்புர சாந்துங் குங்குலச்
சுந்தர வாவியுந் துதைபு ரோடமுந்
தந்தன னவிரைசெறி தந்த வன்னமு
முந்திய நிவேதன முகந்து செய்தனன்

116. இடையிடை யருக்கிய மிசைந்த பாத்தியம்
நடைமுறை யாசமன் னீயநல் கியே
புடைபகர் பாகிலை பொருந்து கண்ணமு
மடைதர வப்பித மமைத்துப் பின்னரே

117. பஞ்சவ ரார்திகம் பரவி நீட்டியே
செஞ்சொலார் மந்திர புட்பஞ் சேர்த்தினன்
விஞ்சிய கமலவாண் முகை விரித்தனன்
அஞ்சலி கரத்தின னள்ளி வீசினன்

118. பொருவரு பூசனை புரிந்து போற்றியே
மரகத மேனியாய் மார்து கண்ணகாய்
திரிபுரை யாமளை சிவனொ டாடிய
பரிபுரப் பதத்தியே பகரு மாயிரம்

119. சென்னியீ ராயிரஞ் செறிந்த கையுளாய்
முன்னவ முனீச்சர முதல்வன் தேவியே
கன்னியே நடனமா காளி யம்மையே
சொன்னெறி மந்திர யசரூப மேனியாய்

120. வரந்தரு கென்றவன் வழுத்து காலையில்
நிறைந்த ரங்காளிகன் நிறைந்து போற்றவு
மரந்தரு பகழிவே லாதி வான்படை
கரந்தனி லிலங்கவுங் கடிது தோன்றியே

121. வசூரிகை நோயினை மாற்றற் கேற்றதோர்
மசூரிகை மருத்துநீர் மணிசொன் மூலிகை
யசூரிகை பக்குவ மடைந்த கற்பிதம்
விசூரிகை விளங்கவே விதித்துச் சென்றனள்

122. அவ்வளிக் குமரவே ளனைய பெற்றனன்
செவ்வியார் வசூரிகை தீர்த்து மேவிமேல்
எவ்வமில் பேர்க்குரு நாதனும் பெயர்க்
கவ்வையில் பெற்றனன் கணங்கள் போற்றவே

123. ஆங்கவ னிடமதா யவிரும் பான்மையி
னோங்கலு மப்பெய ருற்று நீடியே
தேங்கருட் பெறுகுரு நாக்கற் செவ்வியார்
பாங்குறு நாமமே பயின்ற தென்பரால்

124. இத்தலை மடுவி வனுவி யற்றிய
சுத்தமார் குளனதாய்த் தோன்று பான்மையி
நத்திய பவவினை நலித்து முத்தியு
மத்தலை நல்குறு மமர ராக்குறும்

125. ஈதிவ ணின்றிட வினிய மாதெனுங்
கோதை கண்ணகை நடனகாளிக் கோமள
மேதகு செயல்பல விளம்பு கிற்பா
மாதர முனீச்சர மமைந்த தானமேல்

126. முன்னவன் முனீச்சர முதல்வனோ டெழீஇத்
தன்னிகர் நடம்பல தானு மாடியே

யன்னிலே சமழ்ந்தன எம்மை நாணின
னென்னினி யுய்வழி யென்னத் தேறியே

127. முன்னவன் முனீச்சர முதல்வனே டெழீஇத்
தன்னிகர் நடம்பல தானு மாடியே
என்னையா ளற்புத னிபமுகற் றரும்
முன்னவ னிருபத முளரி தாழ்ந்துளான்

128. பரசிவ சங்கரி பால்வெண் ணீற்றணி
புரபர சங்கரா புராண காரண
திரிபுர மெரித்தருள் செய்ய சேவக
பரிபுர பத்தனே பால்கொள் வெண்மதி

129. செஞ்சடைக் கங்கையிற் செறித்த சிற்பர
மங்கை பங்காளனே மான்மழுக் கொழுஞ்
செங்கர முனீச்சர சிறியன் செய்பிழை
இங்குநீ பொருத்தரு ளென்ன வாழ்த்தியே

130. ஆதிநீ யனாதிநீ யரிவை நாளொடு
பேதைநின் னுடனெதிர் பேணி நடஞ்செய்
தாதலாற் கடும்பிழை கலந்த துற்கியர்
யோதிய சிவத்து ரோகத் துற்றனம்

131. இப்பிழை பொறுக்கென விறைவன் றேறியே
யப்பணி செஞ்சடை யமைத்து மாதுகே
ளொப்பிலாச் சிவார்ச்சனை யுஞற்றி யும்மதி
அப்பணி யீதென வறைவன் கேட்டியால்

132. இந்தவான் முனீச்சர தலத்தி னெய்துகீழ்
வந்துறு தென்கரை மருவு யோசனை
உந்திய பத்தினி லுவரி வான்கரைச்
செந்துவர் மணியினைச் சிந்தி மேலெழீஇ

133. மகேந்திர வாருதி மாறி னுமமுங்
கஜேந்திரன் பணிதரக் கண்ட தாகுறுஞ்
சுகேந்திர யந்திரஞ் சுழலு மோர்மழைச்
சகேந்திர சாலமாய்த் தழையு மவ்விடை

134. சூரபன் மாசுரன் துலங்கு மானகர்
நேரிய வடபுறம் நிமிரும் வாசலாய்
யாரிதன் பெருமையை யறைய வல்லவர்
நாரிகே ளவ்விடை நணுகி வாரிதி

135. சுரண்டெழு திரைப்புறஞ் சூத்த கங்கைநீர்
புரண்டது கேந்துறை யென்பர் புண்ணியர்
மருண்டெழு பாண னின்றுறை மயங்கிடும்
உருண்டெழு மகேந்திர வுவரி காண்டியால்

136. தடம கேந்திரச் சலதிப் பாங்குறு
மிடமது நீபுகுந் தெம்மை யுன்னியே
வடிவமை நம்முரு வகுத்துத் தேவியோ
டிடமுறு பூசனை யினிது செய்துமேல்

137. நம்முரை வருத்தினை நண்ணுங் காலையி
லம்முறை வந்துநம் மருள் வழங்குதும்
பொம்மலவெம் முடியினுய் பூவையே காளியாம்
அம்முறை அருளின னவளுங் கேட்டரோ

138. சேலுயர் கண்களிற் செறியு மன்பெனுங்
கோலவா னந்தநீர்க் குதூக லத்தளாய்க்
காலுயர் மகேந்திரக் கரைசென் றெய்தினள்
காலிசெய் பான்மையிற் காலி யானதே

139. கலனெழு மகேந்திரக் கடலின் பாங்கரில்
நிலவு விண்ணுளோர் நீள்க ணங்களும்
புலனுணர் முனிவரர் புலவர் மேதையோ
ருலவலிற் காலியாய் உரைப்பர் தொல்லையோர்

140. வச்சிரம் மழுப்படை யாதி வான்படை
யுச்சமார் கைத்தல மொழுங்கு காளியாய்
வச்சசீ ரம்பிகை மலருந் தானமா
நிச்சயம் பெறுதலில் நிலவு மம்பிகை

141. பூசனை யியற்றவே புனிதக் கண்ணுத
லீசனுஞ் சுந்தர வீச னம்பிகை
நேசமீ னுட்சியாய் நிலவு பான்மையிற்
பேசுவார் காலியாய்ப் பெருகு தொல்லையோர்

142. அத்தலைக் கங்கைநீ ராடு மேலையோர்
சுத்தரே வானுளோர் துதிக்க மேவுவார்
நத்தொழிர் கைத்தல நணுகும் மேனியான்
சித்தொளி ருலகமேல்ச் செறிந்து மேவுவார்

143. புண்ணிய தலம்பல பொருப்ப கம்பல
நண்ணிய நதிபல நவிலும் மான்மரை
எண்ணில் பல்கோடி யவிசையும் வெற்பவை
கண்ணினுக் கடங்கலாக் காட்சி நல்குமால்

144. இந்திரன் மாலய னிருடி யோர்பலர்
சந்திரன் கங்கைநீர் சலதி யக்கர்கள்
முந்திய மேலையோர் முனிவ ராதியோர்
புந்திசா லுரகரும் போற்ற மேவுமால்

145. கடலெலா முலகினைக் கைப் படுத்தியே
இடமுறு புவிகளை யிசைந்தங் குண்ணிறு
முடையவ ரருளினு லோங்கு காலிபோ
லிடனுறு திருநக ரெங்கு மில்லையால்

146. சோபையுஞ் சிவசம சோக பாவனை
யாபரந் தேக்கியே யமர்வழி போற்றிடு
பாவமில் மனிதரைப் பாரினுற் றுளோர்
தாபமில் சிவார்ச்சனை தவம் விளைந்துளார்

147. சங்கமார் கேந்துறைச் சலதி மூழ்குற
அங்குறு சங்கம மாடும் புண்ணியர்
திங்கள்வா னதிமதிச் சென்னி சேர்த்திய
சங்கர னுழைஞரே தவத்தின் மேலையோர்

148. அரனெறி கொண்டவ ன்னுதி சங்கரன்
புரமெரி படுத்தவன் பூவை பங்கினன்
வருகரு ணலயன் மான் மழுத்திரி
கரனெனுஞ் சுந்தரே சுரனைக் காதலார்

149. கழுவலை யாலயங் கண்டு மேவிய
வழகு மீனுட்சியை யருளிற் போற்றுவோர்

வழுவிலர் பிறவிநோய் மாற்றி யொப்பிலா
மழுவணி கரத்தெம் மானடி வைகுவார்

150. இவர்பெயர் யாவரே யெனினு மோதினு
மவர்களைக் காணினு மஞதி நித்தியப்
பவனெதிர் கண்டிடும் பான்மை யெய்துவார்
சிவகளை யவரிடஞ் சேரு முண்மையால்

151. தத்துவ நெறிதரு சகல லோகமார்
வத்துவு மவையிடை மலர்ந்து தேங்கியச்
சத்தி யாய்ச்சிவ மாய்ச் சொல்லு
மத்தலை நித்த கல்யாணியா நிமலைபார்வதி

152. சங்கரி பராபரை சகல லோகமு
மங்குய ராடலி லருளு மம்பிகை
துங்க மார்காளி யத்தலை துலங்கியே
சங்கர சயம்புவைத் தானி னைந்தரோ

153. பொருவரு மகேந்திரப் புணரி மூழ்கிமே
லருளுரு வஞதியா மம்மை பாகனை
பரவினள் நீறுமேற் படிய ரன்மணித்
தெரிதொடை புனைந்தனள் சிவமென் றேத்தியே

154. மன்னிய மகேந்திர வாரி வான்கரைத்
துன்னுமோர் சிவாலயம் துறையி யற்றினன்
அன்னதோ ரிடைதனி லருவ ருபமாய்த்
துன்னு சதாக்கியந் துலங்கு லிங்கமும்

155. அம்முறை யாற்றி அணிபல திருத்தியம்பிகை
கொம்மை கொளினமுலைக் கோதை மீன்விழிச்
செம்முறை யம்மையைத் திருந்து மாமணி
யம்மவான் சிலையினி லமைத்து மேலுமே

156. பரிவுறும் பஞ்ச சுத்திகள் பயிற்றின
ளரிது மூலாதார வைம்பொறிக் கனல்
உரிஇவழி யெழுப்பியே யோங்கு பாவனை
விரிவுற வந்தர் மாயாகம் வீற்றியே

157. அத்துவ சுத்தி மேலான தேயுவுஞ்
சுத்தமார் வாயுயிற் றுலங்கி நீளிடை
யொத்திடும் திங்களை யொளிர் சுகம்மனை
வைத்தனள் வாயுவை மலர்த்தி யேத்தியே

158. புறக்கர ணங்களும் பொலிய வாவயிற்
சிறப்புறு சுந்தரே சுரநஞ் செல்வனை
உறப்படு லிங்கமே லுறுத்துச் செவ்வொளி
மறப்பிலா நினைபவர் வாரி யாயுற

159. மந்திர தியானமேல் வளர வாவளி
யந்திரஞ் சிதம்பர மேற்றி யம்மையை
யைந்துற வேட்டு மேலான மூவரிப்
பந்தமார் கோணமேற் படுத்தி யக்கரம்

160. மருவும் வாலாம்பிகை மனுவை மாறிமே
விருதலை மாணிக்க மிசை வரைந்தனள்
பரிவுறு தளங்களிற் பயிலுபூதங்கள் வீற்றியே
அறிவுறு பிரணவ பூசை யேற்றியே

161. வேண்டுவ தமைத்தனள் விதியை நாடியே
காண்டகு விம்பமுங் கவினி லிங்கமு
மாண்டகு யந்திர மரபுஞ் சுத்தஞ்செய்
தாண்டவ னருள்வழி யாகமஞ் சொலும்

162. பகுதியா தாரசக்தி பதிகூர்ம மனந்தராதி
மிகுகயம் வரைகளெட்டு மிகுநவ சக்திகொண்
டமைந்தபின் டிகையின்பூசை தகுமா சனபூசை
சுகமுறு லிங்கபூசை தோகையம் பிகைதன்பூசை

163. ஆகமவிதிவழா மலருள் வழிவேத மோதித்
தேகியதேகியான சிவனை யம்பிகையைப் போற்றி
வாகைசேர் நடனகாளி மாதுற்கி கண்ணகைப்பேர்
மாகவினம்மை போற்றி வான்மிசை யெற்றினளே

164. எண்ணிலா ஞானம்வீறி யிருநூறு வருடங்காறும்
பண்ணிய பூசைவேட்டுப் பராபரை யாதிசக்தி
நண்ணிய பாகத்தோடு நரைவிடைப் பாகனெம்மான்
அண்ணலார் சிவலிங்கத்தி னருளொளி யாகிமேலும்

165. வெண்ணிலா மதியங்கங்கை வெவ்வரா ருத்திராக்கம்
புண்ணியக் கொன்றைதும்பை பொலிசடா மகுடமோங்க
வண்ணமா ரைமுகங்கள் மலரவம் பிகையோர்பாக
நன்னவே யெம்மையாளும் நாயகன் கருணையாலே

166. பரிந்துறு பூதங்கோடி பரவியே வாத்தியங்கள்
நிரந்தர மார்ப்பரிக்க நிறைமலர் மழைகள்சிந்தச்
சுரந்திடு முனிவர்வேதஞ் சொற்றனர ரவென்றேத்த
தெரிந்திடு பிரமன்மாயன் தேவர்பல் லாண்டிசைப்ப

167. நாரதர் மகதிவீணை நரம்பிடை யேழ்வகைத்தாளஞ்
சாரத வரிநிரப்பித் தழங்கிய பாணிநீட்டச்
சாரதந் திரமகேசர் தத்துவ முறையளப்ப
வாரதிகற் பூராதியக்கினி தூபந் தேங்க

168. வளரரு ளாடலாலே மலிகாளி யம்மைகாண
வலகிலாத் தவத்தோர்சிந்தை யமைபரா னந்தவாரி
இலகின லெழுந்தாள் தாழ்ந்தா ளெம்பரசயம்புநாத
கலைகுலா மவுலியானே கடவுளே போற்றியென்றாள்

169. ஆங்கவன் சீர்துதிக்க வரன்மிக மகிழ்ச்சிகூர்ந்து
பூங்குழ லண்டரண்டம் புகழ்பராக் கிரமமிக்க
சாங்கரி நின்னுதிக்கட் டவத்தினி ளுமகிழ்ந்தா
மீங்குயா முரைப்பம்கேட்டி யெனவிறை யியம்புவானே

170. முன்னர்நீ மனச்செருக்கின் முனீச்சர தலத்தின்கண்ணே
யென்னுடன் நடனகாளி யென்னவா தாடித்தேடிப்
பின்னையு மெனையிகழ்ந்த பெரும்பழி நின்னிடின்றி
முன்னிய வவசாரத்து முதிர்ந்தது மொழிவன்கேட்டி

171. அத்தகு பாவனின்னை யடைதலின் மபினையாகி
நித்தமார் நானுரைத்த நெறிப்படி யிங்கட்சென்று
சுத்தமார்ரி லிங்கபூசை தொகுத்தனை யாதலாலே
நத்திய பவங்களெல்லாம் நதுந்தது புனிதையானுய்

172. நின்னுடை மலினநீக்கு நெறியினு யித்தலந்தான்
சொன்னெறி கழிவலைப்பேர் துலங்கிய தென்றுங்காண்டி

யின்னினை சுத்தையானுய் யினிமுனீச் சரத்திற்
துன்னுதி சிவோகமேறித் தோன்றுதி துலங்குங்காலை

173. ஆங்஢னே நாம்புகுந்தங் கரியநம் முருவங்காட்டித்
துங்கமார் முனீச்சரத்தில்த் துலங்கிய மகிமையெல்லா
மிங்குநீ யுணரச்சொல்வ மினியதோர் பூசைப்பேற்றில்
வெங்கத வரக்கர்தம்மை வேருட னழித்துமேலும்

174. எண்ணிலாப் புவனகோடி யாவையும் போற்றிசெய்ய
நண்ணுதி நண்ணுங்காலை நமதுரு நின்னகத்திற்
புண்ணிய வுருவிற்றேன்றும் பொருளிது வதுவேயன்றே
யண்ணலார் சிவலிங்கத்தி னருளொளி வடிவமானேன்

வேறு

175. கருதரும் பிரளய கால மாயினு
எரிபரந் துலகெலா மிறுக்கு ஞான்றினு
தரவிய வயனரி பட்ட காலையும்
மொருவலன் கழுவலை யும்பர் நாயகன்

176. அவ்விடை யநேகமா மால யங்களுள்
செவ்விசார் நதிகளும் தீர்த்த கோடியும்
பவ்வமார் பருப்பதம் பரந்த வெள்ளிடை
யெவ்விலாப் பொருள்களு மிலங்கு மாதலால்

177. இத்தலை முன்னைநா ளிருடி யோகரும்
வித்தகக் காசிபன் மிக்க தும்புருச்
சுத்தமார் வியாதன்மேல்த் துலங்கு கோதமன்
பக்திசார் சிவகணம் பரவு விஞ்சையர்

178. தங்களி லிணங்கியே தவமி யற்றினர்
மங்கை பங்காளனை வழுத்திப் போற்றியே
யெங்குள பொருள்களும் யாவு மாகிய
துங்கமார் யோக மேற்றுறை யழுந்தினர்

179. பன்னிரு சூரியர் பால்கொள் வெண்மதி
துன்னிய பாகரர் துலங்கு பூமிவாழ்
மன்னவர் மானிடர் வழுத்திப் போற்றியே
முன்னியல் வரம்பல முறையி னெய்தினர்

180. அத்தகைக் காளிமா புரத்தை யாதொரு
சித்தமேற் றெரிந்தனன் சீர்மை செப்புகேன்
வித்தக நைமிசர் விளங்கச் சூதனு
மத்தலை யருளினி லுறையும் பான்மையை

181. மலிசிவ ராத்திரி மார்கழிக் கணே
சொலிதரு பூரணை சோம வாரமேற்
பலியருத் தோதயம் பருவ மாவமை
கலிம கோதய முதற்கண்ட நாள்களில்

182. வாரிதி மகோததி மலரும் புண்ணிய
சீரதி நதிபல தீர்த்த மானவை
தேரதி வினயமேற் றெரிந்து மூழ்கிப்பின்
ஆரதி நதிபுனை ஐயனம் மையே

183. கண்டனர் பணிபவர் கமழும் வில்லுவத்
தண்டலை சொருகுநர் தனையும் நெய்விளக்

கெண்டக வேற்றுன ரிசையுந் தர்ப்பண
மண்டல முறையினில் வழங்கு மேலேயோர்

184. பவமேபரங் கழுவியே பராபரப் பொருட்
சிவவுரு வாகுவர் தேர்வவர் ணுண்பொருள்
இவர்பிதிர் கடன்முறை யியற்று வாரெனில்
அவர்குலஞ் சிவபத மடைவ திண்ணமே

185. ஈதிவ ணின்றிட வினையில் கண்ணகை
மாதுசீர் நடனமா காளி வள்ளலார்
ஒதிய முறைநெறி யுகந்து தேறியே
காதலா ராலயங் கசிந்து மும்முறை

186. வலம்புரிந் தேத்தினள் வழுத்திச் சொன்னிலே
திரம்பெறு மூரகந் தீர்ந்து சென்றனள்
பரம்பிய மகோததிப் பதிக ளாறுகள்
திரம்பெறு நதிபல தீர்ந்தங் கேகியே

187. சுரும்புறு கீதமுந் துலங்கு நாரதர்
தருமருங் கீதமுஞ் சலதி யோசையும்
பரம்பிய வேதநூல் படிக்குங் கீதமும்
திரம்பெறு வாரிவான் திரை விரித்திட

188. தத்திய சங்கினந் தனிபுரண் டெழீஇ
முத்தினைக் காண்டுமேல் முழுங்கி வாரிதோய்
தத்தலைக் கமடமே லமழி சார்வுறு
மெத்திய கூர்மமும் வெருவி மேலெழீஇ

189. கரைபொரு மாயவ ளுற்றின் கால்வழி
நுரைவிரித் தெழவெழ நூறை சின்னையும்
புரைபழ னங்களும் பொருந்து கற்பகத்
தருமலர் மைமுகில் சாருந் திவ்விய

190. கேத்திர மாகியுங் கிளரு மைவகைச்
சூத்திர நாடிகள் துலங்கி யொன்றதாய்
வாத்திரைச் சுழுமுலே வழியி னேறியே
காத்திரப் பேரொளி கவினு மாட்சியாய்

191. ஒன்றிய தானமா யுலக மன்னுயிர்
என்றுமே யிலகியு மிலங்கி யொன்றுளி
பொன்றலி லணுவுருப் பொலிந்து மீளவுஞ்
சென்றியல் குண்டலித் திறம தாகியும்

192. வருபிரான் முனீச்சர தலத்தின் மேவியே
அருளொளி லிங்கமே லன்பு வீற்றினள்
பரிவுறு மாயவன் குடிளைு பற்றியே
தெரிதரு ஞானமேற் சிறந்த செவ்வியாய்

193. தருப்பணந் தானமுந் தாரு மேழ்வகை
யருப்பண விதிகளு வமைத்துப் பூதியைத்
தெருப்பயில் தூளஞ் சேர்த்துச் செவ்வியார்
கருப்பணி தருதிருக் கருணை மந்திரம்

194. நாப்புடை பேர்கிலா நலமும் வாயிடைத்
தேப்பொலி யமுதமுந் திகழ வுச்சரித்
தாப்பியர் விபூதியை யள்ளி வான்கரம்
பாப்பிய விடக்கரம் பதித்துப் பின்னரே

195. அத்திர மந்திர மதனில் நீர்தெழித்
துத்தம பஞ்சவக் கரமு முச்சரம்
வைத்தலைப் பதிறெுரு மந்தி ரங்களுஞ்
சித்திர முறை நனி செபித்து மேலுமங்

196. குறைதவி ரமுதமேற் கொண்ட முத்திரை
அறைதரு கோடிக மமைந்த வத்திரம்
முறைதரு புரோட்சணம் முற்றிக் கைகளால்
நிறைதரு நீறினை நினையு மந்திரம்

197. செப்பியே குழைத்தனள் செறியு லேபன
மப்பியே நிருதியி னமைய வோர்துளி
தப்பினள் பின்னரே தான்கு ழைத்துமேல்
செப்பிய சிவமயஞ் சிந்தை யேறவே

198. முப்பதோ டாறென மொழியுந் தானமேற்
தப்பிலாச் சிவமனு சார வேற்றிப்பின்
செப்பிய சிவோகமாய்த் தெளியு நீறினை
அப்புடன் கலந்து வாயதனி லேற்றியே

199. அமுதபா னங்களி லாக்கி நுங்கிமே
யுமையிடப் பாகனை யுயர் முனீச்சரம்
தமதிட மாய்க்கொளும் சயம்பு சங்கர
விமலனை யுன்னியே விதிதெ ரிந்துமேல்

200. வேதமந் திரங்களின் விளங்கு சந்தியு
மோது மாகமமுறை யுஞற்ற னுட்டையு
மாதரச் செபதப மணிந்த யோகமும்
போதரச் சிவநிசி பொலிந்து வேலையும்

201. மத்திராத் திரியினில் வானு ளோர்களுஞ்
சுத்தமார் முனிவலிந் துலங்கு யோகரும்
வித்தக மாலயன் விளங்கி யொன்றியே
கத்தனும் முனீச்சரக் கடவு ளாலயம்

202. வந்தனர் முனீச்சர வள்ளல் சன்னதி
எந்தமன் னுயிர்களும் யாவு மெய்தின
சந்திர சேகரத் தாணு தற்பர
மந்திர முனீச்சர வரத போற்றியே

203. சிவசிவ புரகர திருந்து மான்மழு
நவைதவிர் கைத்தல நலஞ்செய் நாயக
வவிர்வடி வாம்பிகை யம்மை பாகனே
உவமை யில்தனி யோகி யேயென

204. போற்றினர் நீங்கெனப் புகலும் யாமமே
லேற்றினன் கொண்டிள வினிய முப்பழந்
தேற்றிய பாலனந் திருந்து சக்கரை
மாற்றுய ரன்னமும் வழங்கு நெய்யினல்

205. அமைத்திடு வோதன மரிய வெள்ளனஞ்
சமைத்திடு மண்டகை தகைய தேன்ததி
இமைத்திடு பானக மிசைந்த சுத்தநீ
ருமைத்திரு மணளருக் குவந்து தந்துமேல்

206. வில்லுவ நொச்சிசீர் விளங்குமுட் கிழுவை
சொல்லிய மாவிலங்கைக் கூவிளம் பத்திரம்

நல்லியல் முகங்களி னலத்த வாயிரந்
தொல்லிய லெட்டெனும் துலங்கு நாமமும்

207. பழிதவிர் பிரணவம் பற்றி விந்துறை
அழகிய விக்கிர மமைத்து முன்னரே
செழுமதிச் செஞ்சடைச் சிவன் சிரத்தின்மேல்
முழுமனு முறைப்படி முந்து சாத்திரம்

208. அறுகுடன் வன்னியு மழைத்துப் பாலுடன்
நறிய பன்னீர்வகை நலக்கச் சேர்த்தியே
உருமனு உருத்திர சூத்திர மோதினர்
மறுவறு பூசனை மரபி னுற்றினர்

209. தமதித யங்களைத் தானு தற்பர
நிமலனி லேற்றிமேல் னிறைந்த வாயன
மவிரொளி மந்திர புட்ப மட்சதை
நிமிர்தரு சொர்ணமு நிறைந்த தாம்பூலம்

210. தம்பிரான் பெறவரு டன்னி னல்கிமேற்
செம்பொருள் பஞ்சவ ரார்த்தி திவ்விய
பைம்பொனுர் தீதிகை பரிந்து நீட்டினர்
உம்பரு மரகர வென்ன வோதினுர்

211. தனிமைசார் பரம்பொருள் சலச லோசனன்
கனியிதழ் வாயுமை காளி யைங்கரன்
புனைதரு நீபமார் புனித னுதியோர்
அனைவரும் மகிழ் தரவருள் புரிந்தனன்

212. பன்னிய சிவகணம் பராவ வெம்பிரான்
பொன்னவ ரிலிங்கமேற் பொலிந்து வைகலு
மன்னசீர் நடனமா காளி கண்ணகை
தன்னிக ராலய வடாது சாரினே

213. யோகுயர் வில்லுவ மரத்தி னோர்புடை
யோகியா யிருந்தன ரிருந்த காலையில்
வாகையார் மதியணி வரத யோகியும்
சாகையார் வில்லுவ மரத்தின் சாரலில்

214. வந்தனர் யோகமா மலிந்த பட்டமுஞ்
சுந்தர முண்டிதந் துலங்கு நெற்றியு
மந்தமா மேனியி லவர்வெண் ணீறுமேற்
தந்திர வுருத்திராக் கங்கள் மாலையாய்

215. சிரமதில் முப்பதோ டிரண்டிற் சீர்மணி
வரமுறு நெற்றியில் மருவு மோர்மணி
உரமுறு மாயிரத் தெட்டி னேவிலாத்
திருமணி மாலைகள் சிறந்தி லங்கவும்

216. செவிகளி லெட்டெனச் சேர்க்கு மாமணி
யவையவ புயங்களி லாறிரண் டெனும்
நவையறு மாமணி நவிர் முழங்கையிற்
தவலறு மைவகைச் சார்த்து மாமணி

217. மாலிகை யிலங்கவும் வளரி ரண்டுகை
சீலமார் மணிக்கடை சேர்த்தம் மாதிரக்
கோலமார் மணிநலங் குலவ வெம்பிரான்
மூலமா யாமய முழுத்த சோதியாய்

218. முப்புரி நூலணி முழுந்த யோகமார்
செப்பமார் பட்டமுந் திருந்து பாதுகை
வைப்புறு சரணமும் வலக்கை யிற்கொழுந்
தப்பறு கரண்டமும் தனிலி லங்கவும்

219. அம்மையார் விழியிடை யடைந்து காட்சியை
செம்மையா யருளலுந் தேவி கண்டனள்
அம்மவோ நந்தவ மான பான்மையி
னிம்முறை யெம்பிரா னிசைந்த தென்னவே

220. பணிந்தனள் விட்டரம் பரிவி நல்கிமே
லணிந்திடு முபசர மனைத்து மாக்கினள்
கணிந்தவர் காணருங் கடவு ளவ்வழி
துணிந்து நல்லாசிகள் சொற்று நங்கைகேள்

221. உன்னுடை யோகமு முயர் தியானமுந்
தன்னிலே வளர்ந்ததைத் தான றிந்துமேல்
நின்னிடை யடைந்தன நீசெய் புண்ணிய
மன்னவா கனத்தனு மறிதற் பாலதே

222. நாமுயர் மருத்துமா மலையி னண்ணி
ஏமுறு சிவநிசி யெய்து மிற்றைநா
ளாமுறை முனீச்சரத் தானைப் போற்றுவான்
காமியா வந்தனன் கடவுட் போற்றியே

223. மலிதல வாசமா மருவல் நன்னெறிப்
பலர்சொலும் பான்மையைப் பற்றி யிவ்விடை
யிலகிய நின்னிடை யெய்தி யுற்றனள்
சிலபல காலநாஞ் செறிவங் காண்டியால்

224. உன்னிகர் மாதவ யோகர் தங்கள்பா
லென்னிகர் யோகய ரிருத்தர் சால்பதாந்
தன்னிகர் தவனெறி தழையும் புண்ணிய
மென்னவும் பெருகு மென்றிறை யியம்பலும்

225. ஆதியார் வந்ததென் றறியொ ணுப்பெரும்
பேதையாய்க் கண்ணகைப் பிராட்டி தேறியே
நாதனே நின்நிகர் நலத்த யோகியர்
பாதநாம் பரவுறு பான்மை பெற்றுளோம்

226. சிவனையாம் பரவினுஞ் செறிந்த மும்மலப்
பவமெலா மொருக்கிமேற பற்றறுத் தொழிர்
தவநினை பரவுதல் சங்க ரற்பணி
நவையறு பயனென நவிலு மாகமம்

227. சாதுசங் கத்தினிற் றழைகு வாரெலாம்
பேதையே யாயினும் பெருகும் வாதனை
ஏதுறச் சுத்தரா யிலகு வாரென
மாதவ யோகியர் வகுப்ப ருண்மையால்

228. நின்னிடை யடைந்தன விமல காவெனப்
பொன்னடித் துணையினிற் பொருந்தத் தாழ்ந்துசீர்
முன்னுற நின்றனள் முனிவன் தேறியே
கன்னிநீ பொன்னணி கவினும் பீடமேல்

229. இருக்கெனு முத்தரப் படியி ருந்தனள்
தருக்கினள் சிவசிவ சமாதி யோகியே

மருக்கமழ் நின்னுறை மருத்து மாமலைத்
திருக்கிலா வுற்பவஞ் செப்பு கென்னலும்

230. அன்னவன் சீரரு ளமைந்த பான்மையில்
கன்னிகேள் முன்னொரு கற்ப காலையில்
வன்னியா லுலகெலா மாயச் சூக்கும
நன்னிலை யொழிந்தது நவிலக் கேட்டியால்

231. பரைபர பூதியம் பற்றப் பல்லுயிர்
நிருமல சுயம்புமே னிலவி யோவிலாப்
பரிபதி ஞமமாய்ப் பசுத்து வத்தொழில்
வரையறுப் பான்மையு மடைந்த தில்லையால்

232. ஆவது சங்கர கற்ப மாவுறத்
தேவர்கோன் முனீச்சரன் றிருந்தொ ராடலி
லாவலார் சுயேச்சையி னனுதி சத்தியாந்
தேவியை சகந்தர விதையத் தெண்ணினன்

233. வானமேற் சத்தமும் வாயு கொண்டிருந்
தானமார் சலனமுந் தழலின் வெம்மையு
மானநீ ரிரசமு மகில வான்புவி
மேனகு வடிவமும் விளங்கிற் றென்பரால்

234. புவியுறு மண்டமேற் பொருந்து நூறதாய்ச்
சவிகெழு கோடியின் சலத்தின் மேவியே
உவமையி னீர்த்திரை யுயரு மாயிரம்
புறமிவர் வதுந்தாழ் வதுமென விளங்குமால்

235. லம்பமேற் கருடனை யிடை வழுத்திடப்
பம்பிய வான்புவி பரவுமம் பரஞ்
செம்பொறிப் பகுப்பெலாந் திரட்டி நோக்குங்கா
லைம்பொறி யைம்பொறி யாகுங் காண்டியால்

236. ஈதுறு பான்மையி னிசைத்த பான்மையிற்
போதுறு மன்னுயிர் பொருந்து மைம்பொறி
யாதரங் கவர்வுறு மனைய தானமே
வேதன் மாலுருத் திரன்விளை மகேசுரன்

237. சதாசிவ பீடமாதி தளையு மவ்விடைச்
சுதாகர வொழியதாய்த் தோற்று மன்னுயிர்
விதாம்பர வெழியெனும் வெளியி லாடலே
நதாந்த நாதாந்தமாய் நவிலு மோர்பொருள்

238. ஈதிவ ணின்றிட விசைந்த வித்தலைச்
சோதியா ரிலங்கையே துரியத் தானமேல்
மேதகு பிரமமாம் பிரமரங் கொழும்
நாதகேள் பிரமர வடிவஞ் சங்கரன்

239. ஐவகை வடிவமா யமைந்து ஞாலமேற்
செவ்விசார் சதாக்கிய சிவலிங்க மாய்த்
தவ்வறு மதனிடை சகல மன்னுயி
ரொவ்வியே பிறத்தலு மொடுங்க லுஞ்செயும்

240. அத்தலை மன்னு யிரான யாவையுஞ்
சுத்தநல் லாடலிற் றுலங்க வாதியார்
நித்தனு மிலங்குவான் னெறிகொ ணீச்சர
தத்துவஞ் சித்தர்வான் கணந்த ழைந்ததே

241. ஒன்பது கோடியா யுயர்சு வாசமே
லொன்பது கோடி யாயுறுஞ் சித்தர்க
ளன்புற வுதித்தன ரனையர் மாதவர்
அன்பொடு முனீச்சர மணுகிப் போற்றியே

242. ஆயிர யுகங்களா யவிரு மாதவன்
பாயிர மனுமுறை படுத்தி யற்றினர்
சேயிரு மங்கவர் தேறச் சங்கரன்
மீயுயர் யோகமேல் விருத்தி நட்டுமேல்

243. எட்டெறும் யோகமே லேற்றி மன்னுயி
ரட்டமா சித்தியு மவிர்ந்து பின்னரே
சிட்டரா யக்காய மாசித்தி தேறிப்பி
னுட்டெழி யுயிரினை யுடல் பிரிந்திடா

244. சோகபா வனையராய்த் துலங்கு பற்பல
வாகையார் கற்பங்கள் வரவு மோங்கினர்
பாகரா மிவரிடைப் படுத்த யோகினிற்
சாகையார் சுவாசமேற் றளைந்த வொன்பது

245. கோடிநீள் கணக்குறக் குலவு சித்தரு
மாடலி லுதித்தன ரவர்கள் யாரெனிற்
றேடுதத் தாத்தி ரேயன் சிறந்துள
பாடலார் பல்கண மென்பர் பாருளோர்

246. அவன்முத லாயினோ ரணியி லங்கையி
னவைதவிர் முனீச்சரம் நணுகிச் சங்கரன்
உவமையில் தாம்புய முறுத்து யோகராய்ச்
சிவமுறு சித்தர் வான்மடுத் திருத்தியே

247. தவலரு நிட்டையிற் சாருங் காலையிற்
சிவசுடர் வந்தனன் தேவி தன்னொடு
முவமையில் விடையினை யூர்ந்து காட்சிதந்
திவர்செயல் யாவையு மெண்ணி யெண்ணியே

248. உங்களுக் கினிதரு ளுதவும் பான்மையி
னிங்கனே வந்தனம் யாதும் மெண்ணமென்
றங்கர னருளவு மனையர் தவழ்ந்தெழீஇச்
சங்கர சிவசிவ சடிலப் பாணியாய்

249. உனதருள் யாவுமே லுற்ற பான்மையி
லனகனே நமதுட லமைந்த மன்னுயிர்
தினையள வேனுமேற் றிகழ்ந்த தில்லையாற்
கனவதோ நினைவதோ காட்டும் புன்மையே

250. எமதுறு சடந்தனி விடுத்து மன்னுயி
ரமையவு முலாவவு மறிவெ முப்பியே
இமைநொடி நின்னையா மிதையத் தேத்திவெங்
கமையுறு கற்பவான் காணந் தேறவும்

251. வழிச்செலும் பான்மையை வகுத்தி யாலெனப்
பழிச்சினப் பராபரன் பரவு சித்தருக்
கழித்துநல் வரமெலா மறிவிர் கேண்மினோ
செழித்தமுற் பிரமன்வாழ் திகழ்ந்த கற்பமே

252. காலிமா புரம்வட கிழக்குக் கண்டிடுஞ்
சீலமாரு வரியாற் சித்தர் தேறநங்

கோலமார் மருத்து வான்குன்ற மாயினேம்
மூலமா ரனேக மாம்மூலி யோங்குமால்

253. சொல்லிய கரணியத் தலையி னுேங்குறுஞ்
சொல்லிய வதன்விரி தொகுத்துச் சொற்றிடிற்
புல்லிய மன்னுயிர் புரத்து வேதனை
செல்லியல் மூப்பிணித் திட்பத் தீர்க்குமால்

254. கனிந்ததோ ரூனமாங் கரணி காணுறிற்
தினந்தின முடலின்மேற் செறிந்த காயமு
மனந்தமார் புரைகளு 'மங்கம் வேறுபட்
டிணைந்திடு வருத்தமு மினிது தீர்க்குமால்

255. போற்று சௌபாக்கிய கரணி போற்றிடி
லேற்றமார் நவநிதி யினைய பாக்கியம்
மாற்றிலாவ சிகரம் வானம் வார்கடல்
தோற்றிய வெங்கனல் தீமை தீர்க்குமால்

256. புல்லுசஞ் சீவினி கரணி போற்றிட
னெல்லையார் மன்னுயி ரினிய தேகமேல்
பல்லுகஞ் செல்லினு மிருக்கும் பாவனச்
சொல்லுயர் வாயுவின் ஞெருந்தம் போக்குமால்

257. மண்ணினைப் பொன்னதாய் வகுத்துக் காட்டவுந்
தண்ணிரைத் திரம்மையைத் தானஞ் செய்யவு
முண்ணிகழ் வானமே லுயர்ந்து தாவவு
மெண்ணறு சித்துக ளியற்றி யாடவும்

258. தன்னுடல் விடுத்துமேல்ச் சாரு மோருடல்
மன்னவும் தேவரை வருத்திக் கூவவும்
பொன்னிகர் பூதபை சாசம் போந்துதின்
சொன்னெறி யியற்றவுந் தூரத் தோட்டவும்

259. எண்வகைக் கரணிசீ ரினிது நாட்டவும்
பண்ணமை மாமாரணப் பகுப்பு வீற்றவுங்
கண்ணெதிர் காணெணுக் கதியி லோடியே
எண்ணுயிர் திருச்செப வெழில் பரப்பவும்

260. கொடுவிட மழுத்தவுங் கொடிய நாகமேற்
றடமுறை புலிவகை தத்தி யாளிகள்
கொடியதோர் சிங்கமுங் குலைந்தங் கோடவு
மடைதரு மூலிக ளனந்த மவ்விடை

261. சுடர்விடு மருத்து மாமலையிற் சோதியா
மிடனுறு முடியி னினிய கங்கைநீ
ரடைதருங் குளனதா யனைய தீர்த்தமே
படியினி லனேகநோய் பாற்றி வீட்டிய

262. புண்ணிய வசத்தினிற் பொருந்து கன்மமு
நண்ணிய பான்மை மேலவை தொலைத்துச்சீர்
எண்ணிய படியரு ளினிய தீர்த்தமாய்
விண்ணவர் மாலயன் விரும்பி யேத்துவார்

263. இதனுறு வான்கரை யிலகு மாமர
மதனுறு முற்பவ மறைவன் கேண்மதி
மதலை செஞ்சடை வரதன் முக்கண
னதிபதி முனீச்சர னண்ட ரண்டமும்

264. தந்தருள் பரம்பரன் தாணு வாகிய
செந்தழல் மேனியன் திருந்தொ ராடலில்
பைந்தொடி பாகமேயென பரப்பி மேவிஞு
ளேந்தெனுஞ் சக்தியே யான வம்மையும்

265. தன்னையே பொருளெனத் தானி னைந்தனள்
பின்னமாயவ ரானைமாப் பிரானைப் பேணலள்
என்னையோ சிவமென வெண்ணி யோசியா
முன்னுறு கருணையான் முதல்வி வைகினுள்

266. ஈதறி சங்கர னிறைவி தன்னெணப்
பேதமை தெளிந்தனள் பிராட்டி மாலினை
யாதரத் தொருக்குவான் அருளி ஞற்றினல்
மாதுனீ னின்றனை மதித்தி மேன்மையால்

267. ஈதுபெண் டிறத்தினற் கியல்ப தாகுமோ
மாதுநின் பவத்தினை மாற்றல் வேண்டுமால்
பேதைநீ நமதுரு பெற்ற சீதமார்
மேதகு மருத்துமா மலையின் மேவியே

268. உன்னுடைப் பவமெலா மொருங்க வத்தலைத்
துன்னுதி குளமதாய்த் துலங்கு காலையில்
அன்னிலை நின்பவ மகற்றும் பான்மையால்
வன்னமா மரவுரு வடிவ மாகியே

269. வந்தருள வோமிகு மரனி னுற்றுள
சுந்தர விலைதவிர் துலங்கு காய்கனி
சிந்தியக் குளனுறச் செறிந்த கன்மமும்
பந்தமு மறுமெனப் பரனும் வூதியே

270. திருவருள் புரிதலுந் தேவி தேறியே
நிருமல நல்லருள் நினைந்து போற்றினள்
புரபர சங்கர புராண காரண
வரபர வெனவடி யன்பிற் போற்றியே

271. திருந்திய விடைதெரீத் தேவி காலிமா
புரம்புகுந் தலையெழப் பொலிம கோததி
நிரம்பிய நானமேல் நிலவு செஞ்சடைப்
பரம்பொருள் சுந்தரப் பகவற் பேணியே

272. மன்னிய ஞானவல்லி மாதுமீ னுட்சியம்மை
தன்னையு மெதிரேகண்டு தலையரு ளாடலாலே
பொன்னெடு மகரஞ்சிந்தும் புணரிசா ரணுணமாகி
முன்னவா னண்டநக்கி முழுமணி யாரஞ்சூடி

273. சந்தனம் பலவுதேக்கு சம்புகாயா கொன்றை
நந்தம்மரு திருப்பை நாரத்தம் முதிரைதேங்கு
கொத்துலா மருதுகான்றை கோங்குகுன் ருத்திவெட்சி
பைந்துணர் கடம்புமுல்லை பயில்சுர புன்னையாதி

274. மரங்களி னழகுகாட்டி மங்குல்கண் படுக்கநீடிச்
சிரங்களு மனேகங்கொண்டு தேம்பிழி யருவிசிந்தி
உரம்பெறு முத்தநத்த மொழிரகின் முருகுநாட்டி
நிரம்பிய வருவிசிந்தி நீள்கடன் மகிணற்புல்லி

275. திசையெலாந் தன்னைக்காட்டிச் செறிதரு மமுதவெற்பி
னிசைதரு குடுமிச்சார லெய்தியோற் குளனுயுற்ருள்

அசைவறு குளக்கரைக் கணமருமா மரமேயாகி
விசையமன் னுயிரைப்போற்றி மேவினனென்பர் தொல்லோ

276. இத்தகு தீத்தப்பாலி னிசைந்தபின் டோதங்கள்
சுத்தமா ரந்தியேட்டி துதிபிதிர் கிரியையாதி
மெத்திய விருப்பியற்றின் வீடுறு பிரேதசீவர்
கைத்தலச் சங்கமேந்துங் கடவுளி னுலகஞ்சேர்ந்தே

277. விட்டுணு கற்பமட்டும் விளங்கியே யீசன்மேனிச்
சிட்டராய்த் திகழ்ந்துமேவிச் சிவசம சோபையாவர்
மட்டெழிற் தருமமொன்று காண்கினு மனேகமாகித்
திட்டமா ரனந்தகோடி திருப்பயன் பெறுகுவாரே

278. புனைதரு மனந்தர்பல்லோர் புகலுமா யிரமாகோடி
கனிவுறு நாவைக்கொண்டு கழறினு மினியகுன்றின்
புனிதமு முயர்வுஞ்சீரும் புகலினு மழவிற்றுமோ
யழகனுர் சிவனேயன்றி யாரதன் மகிமைதேர்வார்

279. இந்தவானதி நறந்தன யியல்பல வளங்கள்யாவும்
சந்தமன் னுயிர்தழைப்பான் தற்பர னமைத்தேயுற்றுன்
புந்திசார னேககோடி புவனங்க ளிந்தவெற்பா
லந்திலே செறிந்தங்குய்யு மமுதவான் குன்றமுற்ற

280. கதைபல வனேகமுண் [illegible]ரிகண் ணகையேகேட்டி
விதமுறு மிக்கதைக்கண் விள [illegible]மோர் சரிதஞ்சொல்வன்
அதிபதி யருளேயாகு மற்புத ஞானவா[illegible]
துதியுறு மணத்தினேற்றுஞ் சுத்தமாங் காண[illegible]னும்

281. பொன்னிக ரீழதேசம் பொருந்துமோர் மனிதன்சீர்சால்
தன்னுடை வினையுடற் சரீரமேற் பெருவியாதி
துன்னின னுடலமுற்றுஞ் சொறியெழ விரத்தஞ்சிந்தி
மன்னிய குரையோங்க வடிவெலாம் புளுக்கள்சிந்த

282. ஏங்கின னிந்தநோயை யெந்தவா ருகததீர்ப்ப
னோங்கிய மருந்துயாவு முண்ணினும் பயனேயில்லை
ஈங்கென துயிரும்போகா தென்னையே கருமமென்னு
வேங்கினன் பதைபதைத்தா னினியென்னு லொன்றுமாகா

283. விடையிவர் பரமன்தந்த வேலவன் கந்தன்சாமி
நடனவில் மயூரவாக னுரலைசார் மகேந்திரத்திற்
கொடியதோ ரசுரற்செற்றுக் கூற்றெனுஞ் சூரறுத்த
வடிநெடு வேலோனன்றி மற்றியார் மாற்றவல்லார்

284. என்றனன் கதிரைவெற்பி னேகின னேகியாகித்
துன்றிய மாணிக்கப்போர்த் துதிகங்கை நானமுற்றி
வென்றிசேர் குவடெடுத்த விசாகன்செவ் வானமேனி
குன்றமே யமரவாழ்வே குமரனே சரணமென்றுன்

285. சன்னிதி முன்னர்சென்று சண்முக கருணைவாழ்வே
என்னுடை யுயிருடம்பு யாவது நின்னதன்றே
தன்னுடை யெண்ணந்தேற்றித் தழையறு வில்வத்தாரு
மன்னினன் பழிகிடந்தான் மருவுமூ வாறுநாளும்

286. வரவர விரத்தம்பீறி வடிவெலாம் புழுக்கள்கீண்ட
அரிதவ னுயிரிருந்த வாறுமா முகத்துவள்ளல்
கருணையா லவன்கனுவிற் காட்டின னெனதுமேனி
உருகுசீ ரன்பவென்சொ லுறுதிநீ நன்றுகாண்டி

287. இந்தநின் சென்மமுன்னர் இசைந்தவோர் மறையோனா
வந்தனை வேதந்தேர்ந்து மாதவத் திறமைகொண்ட
அந்தணன் மகனாய்ப்பின்ன ரரியநற் கலைகள்கற்று
சிந்தனை மயங்கித்தீய செயலினாற் செயல்திறம்பி

288. வழுக்குறு தசையருந்தி மதுகுடித் தகக்கழிப்பாய்
இழுக்கினை புலையர்கூட்ட மெய்தினை பழிபாவங்கள்
அழுக்கினா லுடல்விடுத்தா யந்தகன் தூதர்கையி
லழீஇப்படி நரகமெல்லா மழுந்தினை யிப்பிறப்பில்

289. சேடமார் பவத்தினோடுஞ் செனித்தனை கருமநோயில்
நீடினை யென்னாற்றீர்க்குந் நிலையல வினிதுகேட்டி
யாடுயர் மகேந்திரத்தின் மகோததி யருகிலங்கும்
பீடுயர் சுந்தரேசர் பிராட்டியை வணங்கியேத்தி

290. எதிருறு கடலின்சார லீசுர மேனியாகி
துரமென் மொழிவாயம்மை மகிழவான் குண்டமாகி
இதமுறு மாநிழற்கீ ழிருந்துநீர் புகுந்தேயாடித்
ததையுறச் சிறங்கைநீரைத் தான்குடி பருகுங்காலை

291. தேகமேற் கருமநோயுந் தீர்ந்துமெய்ச் சுத்தமாகி
வாகையார் முனீசவள்ளன் மலர்ப்பத நினைந்தேயாங்கட்
பாகமார் நெய்விளக்குப் பழிப்பிலோ ரிலக்கமேற்றிச்
சோகமுற் றொழித்துவாழ்ந்து துலங்குதி யின்னுங்கேட்டி

292. முன்னையிற் சனனந்தன்னில் முனீச்சர விறைவன்கோயின்
மன்னுபூ சகரிடத்தின் மறைபல கற்றுணர்ந்தாய்
பின்னொருநாள் முனீசப்பெம்மான் பேரருட் சன்னதிக்கட்
துன்னிய நெய்விளக்குத் துலங்கிய ததனைக்கண்டாய்

293. ஆவிதுமு னீசப்பெம்மா னாலைய விளக்கிதென்றும்
பாவமதென் றும்பாராய் பனிச்சுடர் நதுத்தேயாங்கண்
மேவிய நெய்யெடுத்து மெய்பூசி யன்னத்தோடும்
ஓவற வுண்டபாவ முன்னையே பற்றிற்றையா

294. ஈதெலா முன்னைப்பற்ற விசைபெரும் பாவியாகி
மேதகு நாலேழ்கோடி வியனர குழந்துபின்னர்
ஓதுபல் சனனந்தோறு முறுபல நோய்திளைத்து
வாதையா யிந்தச்சென்ம மருவினை யறிவிலாதாய்

295. ஆங்ஙனஞ் சேறியென்றா னனையனு மனதுநொந்தே
ஈங்குநாந் தனியனாகி யெவ்வணஞ் செல்வேனென்னா
வேங்கின னிவர்க்கிரங்கி யீரறு புயத்துவள்ளல்
தேங்கருட் கருணையாலே சிற்சில வோதுவானால்

296. நாளையோர் வேடனின்பால் நணுகுவ னஞ்சலின்றி
ஏழைநீ போதியென்றா னிவனவன் தன்னைநோக்கி
காளைக்கும் கூலிநல்கக் காசிலை யுண்டுயில்லை
ஆளனே யென்னசெய்வே னென்றன னவனுஞ்சொல்வான்

297. இந்தவா லயத்திற்பூசை யியற்றுவோன் காசுகூலி
தந்துனை விடுப்பனென்றே சண்முகன் கனாக்கரந்தே
அந்தவான் பூசகர்க்கு மருளின னவனுந்தேறி
நொந்தவர்க் கினியகாசு நுவன்மொழிப் படியேயீய

298. பெற்றனன் குமரவேளும் பெரிதிளங் காளையாகி
யுற்றசீர் வேடமேனி யுடனுற விவனுந்தேறி

பற்றுட னமைந்தகூலி பரிவுடன் தாறேனென்னை
யுற்றதோ ரமுதகுன்றத்தே கெனவுடன் பட்டேபின்

299. முன்னரே கூலிதந்து முறைப்படி வருதியென்ன
அன்னவன் கொடுக்கக்கூலியை யனுமவன் கைபற்றி
மின்னொளி மறையுமுன்னம் விடுத்தன னமுதகுன்ற
மென்னையோ வென்னத்தேறி யிதமுறு குண்டமூழ்கி

300. வலக்கையி னீர்சிறங்கை வாரியே குடித்துநின்றான்
புலப்படு குரைநோய் மேனிப்புழுவெலாம் புறத்தேசிந்த
தலைப்படு கரையினேறிச் சாருமா நிழலிலுற்று
நிலைப்படு தனதுமேனி நிகளொளி தன்னைக்கண்டே

301. கனவுரை பான்மைதேறிக் கடவுளே விசாகன்கந்தன்
முனைவனின் னருள்தானென் னுள்ளேநின்று முகமலர்ந்து
புனிதமார் தோத்திரங்கள் புகன்றுசெவ் வேள்வேடர்
வனைவுறு வடிவங்காட்டி வந்தன னினையசொல்வான்

302. முன்னவன் முனேசப்பெம்மான் முழுமணி கிடந்திமைக்குஞ்
சன்னிதி செல்லவேண்டித் தகுதிநீ கூலிதந்தால்
நின்னரே னின்னோடேகி யிதமுறு கூலியாளாய்ப்
பின்னரே செல்வனென்றான் பெருமகிழ் வெய்தியன்னோன்

303. காசிலையோர் பணந்தந்த கையுறு மதனைவாங்கிப்
பேசுறு முனீசுரத்திற் பெருமகிழ் வுடனேசெல்ல
நேசமார் வழியைக்காட்டு நீகேட்குங் காசுபின்னர்
யாசகஞ் செய்தேதாறே னென்றன னவன்சிரித்தான்

304. அரைப்பணம் போதியைய அதனைமுற் றருதியென்றான்
பரித்துட னவன்கொடுக்கப் பரைமக னதனைவாங்கித்
தெரித்தனன் மடிசிமிழ்த்தான் திருக்கையி னவனைப்பற்றி
வரித்திழு முனீசக்கோயின் மருவவே விடுத்தகன்றான்

305. இவனரு வாதன்கண்டே யீரறு புயத்தன்மைந்தன்
சிவன்மக னுடலென்றே சிந்தித்தா னகமகிழ்ந்தான்
பவமொருக் கனகஞான பராபர வெனப்பணிந்து
கவலைய தெல்லாம்நீங்கிக் கணிப்பரு மகிழ்ச்சிகொண்டான்

306. துங்கமார் முனீசப்பெம்மான் துணையடி வணங்கியேத்தி
யங்கணே தீர்த்தமாடி யருளொளி சோதியாடி
மங்கல மாசிமாதம் வளர்சிவ நிசியிராவிற்
சங்கைசா ரிலக்கதீபம் சன்னிதி துலக்கிமேலும்

307. இந்தவான் பிறப்புநீங்கி யேழ்பரித் தேரோன்பானு
சந்ததி குலந்தழைப்பத் தருமமெய் யறிவுதேங்கப்
புந்திசார் சிவோகஞானம் பொலிவுற வவதரித்து
மைந்துறு பராக்கிரமப் பேர்வாகு விறுமஞ்சூடி

308. திசைபுகழ் பரிதிபோலச் சிறந்துடன் வாழ்ந்துமேலும்
விசையமார் கலைஞானங்கள் வில்வித்தை குதிரையேற்ற
மசைவறு பரியினேற்ற மாதியாய் நன்றுதேர்ந்து
வசியெழு மிலங்கைமுற்று மணியணிச் செங்கோலோச்சி

309. பூருவ சென்மஞானம் புகுதலு மிகத்தெளிந்து
சாருவா கானசண்டா ளப்பதங் கடிந்து
பேருவா மதியைநேரப் பிறைமுடி மதம்பெருக்கித்
தாருவார் வளங்கள்சென்று சார்தரு மரக்கர்செற்று

310. துணையெதிர்ந் தடிவணங்குஞ் சகலர்க்கும் நன்றிகூட்டி
மனமகி ழனேகமான மாதரை மகிழ்ந்துபுல்லி
யினியநன் மக்கட்பெற்றே யெண்டகைத் தருமநாட்டிக்
கனகமார் முனேசநாமக் கடவுளா லயம்புதுக்கி

311. நிபந்தனை நித்தபூசை திகழுநை மித்யமாதி
சுபம்பெற வனேகபூமி துலங்கிய நிதியமைத்து
தவம்பொறை யழகுமேன்மை தனக்குறு துணையாக்கொண்டே
செபம்பெறு சிவோகமேறிச் சென்மநோய் யொருக்கிமேலும்

312. சுத்தசத் தாகியென்றும் துலங்கிய சிவத்தோ டொன்றி
உத்தம னிவனுமுற்று னூழ்வினைக் கருமபாவ
மெத்திய சிவத்துரோகம் யாவையும் விலக்கியுய்வாத்
தத்துவ நேசன்தன்னை யடுத்தவ ரென்பர்மன்னே

313. என்றுபின் தவசியந்த விதமுறு சித்தரெல்லாம்
நன்றுள மருந்துக்குன்ற நணுகினர் மூலிதுய்த்துத்
துன்றிய காயசித்தி தொகுத்துப்பின் யோகராகி
நின்றன ரெந்தஞான்றும் நிலவிலர் முனீச்சரத்தில்

314. இவர்புரி தீர்த்தகுண்ட யிவ்வகை பயனைநல்கி
இவர்தரு சித்ததீர்த்த மென்னவே யிலகியோங்குஞ்
சிவைமுன்னுட் சிவனைநேர்த்தித் திருந்திய தவம்புரிந்தே
உவமையில் தீர்த்தநட்டே ·யுற்றன ளாதலாலே

315. அத்தகை தீர்த்தவம்மை யருளொளி படிதலாலே
சுத்தமார் பவங்கள்போக்கித் துலங்கிய தனேககோடி
பைத்தவெம் பிறவிதோறும் பயிற்றிய பாவநீக்கி
சித்தியார் சக்திதீர்த்த மென்னவே சிறக்குமாதோ

316. புண்ணிய மனேகநல்கும் பொலிதரு தியானசிந்தை
எண்ணிய படியேயாக்கு மீசுர தியானநிட்டை
உண்ணெகிழ் சொரூபமாக்கு முற்றவர்க் கென்றேயோகர்
விண்ணவர் பரிந்துசூழ்ந்து மேவுவர் கானஞ்செய்வர்

317. திருந்திய துர்க்கையாய்ச் செப்பு மம்மையும்
புரந்தரன் பகைவனுய்ப் பொலிந்த துற்கணின்
சிரந்தனிற் ·சூலவேல் செறித்துக் கொன்றதோர்
பெருந்தகப் பாவநோய் பிணிப்ப மாழ்கியே

318. சங்கரன் முனீச்சர தலத்தி னேரிடை
மங்கல தீர்த்தமெய் மரபிற் கண்டனள்
அங்கணே விளங்குற அரனின் காட்சியால்
பொங்கிய தீப்பவம் போயிற் றென்பரால்

319. அத்தலைத் தீர்த்த மேலாடி னேரெலாஞ்
சுத்தராய்ப் பவவினை தொலைத்து மான்மழுக்
கைத்தலத் தேந்திய கடவு ணல்லருள்
மெய்த்துற விளங்குவ விளங்கு துற்கையாம்

320. நாமமே பூண்டது நண்ணு மத்தலை
ஏமுறு சூரிய னினிய தக்கனின்
மாமகத் தவியுணும் வலிய நோயதா
மேமறி தீர்த்தமும் தாபித் தன்பினே

321. தனதுறு பெயரினிற் ருனு னட்டியே
யனகமார் சிவார்ச்சனை யாற்றி யுய்ந்தனன்

புனிதவத் தடம்படி புலவர் மண்ணவர்
அனகராய் முத்தியை யடைவ ருண்மையால்

322. முன்னொரு காலையில் முளரி மேலுறை
யன்னவா கனன்தனை யாறு மாமுகன்
தன்னிலே சினத்தலிற் சதுர் முகத்தனு
மென்னவோ விதுவென வேங்கி நாணியே

323. சிறையிடைப் பட்டனன் சேய்தன் கையினால்
முறைதருங் குட்டினை முன்னரப் பட்டன
னிறையுல கங்களி னிந்தை யேற்றன
றறிவனும் பெயரகன் றரிது மாழ்கினேன்

324. என்னதான் செய்வனென் றேங்கி யம்புயன்
பொன்னைநேர் முனேசுரப் புரம் புகுந்தனன்
தன்னிகர் வான்றடஞ் சமைத்துக் கோயிலுந்
தொன்னெறி யாற்றியே துலங்கி மேகினான்

325. கலைதெரி நாரதன் கனிந்த வாசக
நிலைபெற நவின்றவ னினைந்து செய்துமேல்
மலைவறு பிணியெலா மாறி வையமேல்
நிலவின னவன்றவம் நிகழ்த்தற் பாலதோ

326. அயன்புரி தீர்த்தமு மவனி ளைமமே
பயன்படு பிரமவான் குண்டப் பண்புறு
நயம்பெறு மித்தட நானம் மூழ்குநர்
செயம்வி சயம்பல சேர்ந்து மெய்மையார்

327. உத்தம கலைஞரா யுறையு முன்னுயர்ச்
சித்தசங் கற்பமுந் தெரியக் காணகுவர்
நத்திய பிணிவகை நாச மேகுறுந்
தத்துவ ரலைதெரீச் சகள ராகுவார்

328. கந்தவேள் முன்னொரு காலை யிந்திரன்
செந்திறற் பகைஞனும் தீய சூரனைச்
சிந்தவே முனீச்சரஞ் சென்று ஞானமா
ரைந்தெழுத் தோதின ரரனை யுன்னியே

329. பொருவரு வான்றடம் புக்கி யக்கரை
மருவுறு மிலிங்கமு மரபிற் பேணியே
சருவசங் காரமுந் தானி யற்றிய
உருவமா ருருத்திர வுயரும் வான்படை

330. பெற்றன னதலிற் பிறர்க்கு மத்தடம்
நற்றிறற் கேளரு நான தீர்த்தமா
யுற்றது படிந்துளோ ருற்ற சத்துரு
வெற்றியை யடைகுவர் விமல ராகுவார்

331. சங்கரன் சடையிடைத் ததும்பு கங்கைநீ
ரங்கனே பரசிவ னொடு மாட்சியாற்ப்
பொங்கியேழ் துழிவிழப் பொதுளிக் குண்டமாய்க்
கங்கையாய் நின்றது காணும் பான்மையின்

332. சங்கமுந் துகிர்களுந் தரளச் சும்மையும்
பொங்கு மத்தடம் புணரி யாடுவோர்
மங்கல வமுதராய் மறந்துஞ் செத்திலாத்
துங்கதை யடைகுவர் சோபை தேர்குவர்

333. விடுசுடர் வைரவன் வேதன் சென்னியைத்
தடவிமேற் கிள்ளியே சகல லோகமு
மிடைதரு ரத்தவான் துட்சை யேற்றிடுங்
கொடுமையாற் பிரமவான் கத்தி கொண்டனன்

334. அண்ட ரண்டங்களு மலைத்து லாவிப்பி
னெண்டகை முனீச்சர மெய்த்த வன்னவன்
கொண்டதோர் கபாலங்கை குலைய வீழ்ந்தது
சண்டவான் றடமெனச் சார்ந்த தென்பவே

335. அத்தகு வான்தட மாடி வைரவன்
சுத்தனைச் சிவன ருட்டுறை சிமிழ்த்திட
வுத்தம வண்டமே லுற்று மேவினன்
இத்தலைத் தீர்த்தநீர் யார்க்கு மாகுமால்

336. இதனிடைச் சரிதமொன் றிசைப்பன் கேண்மதி
விதமுறு சேதுவான் கரை விளங்கிய
மதமுறு மிராக்கதன் மைலியன் கொட்பினன்
பதம்பெயர்ந் துலகெலாம் பற்றுந் தன்மையன்

337 அண்டமார் பைம்புன லள்ளி நுங்கியே
வெண்டலை யுலாவுவான் வெடித்த சொல்லினன்
துண்டமார் மதியெனத் துலங்கு பற்களான்
மண்டல வுயிரெலாம் வாரி நுங்கிவான்

338. கொடியரிற் கொடியவன் குணப மள்ளியே
வெடிபடு வாயினன் விழுங்கும் பான்மையான்
துடிதுடித் துலகெலாம் சூறை யாடிமேற்
படிறுறு சுரைமதுப் பானம் பண்ணுவான்

339. கொடினுறு குஞ்சிமேற் குலுங்க வோடிப்போய்
வடிவுறு தேவரை மாத வத்தரைப்
பிடிபிடி யாகவே பிடித்து நுங்குவா
னசடுல வெம்பொறிக் கனருவுங் கண்ணினன்

340. மந்தர மசைந்தென வயங்கு தோளினன்
வெந்திறற் கரியினை விழுங்கித் தித்தியா
யுந்துவா னெலும்பினை யொளிறு மன்னுயிர்
சிந்துவான் மிசைகுவன் தின்ப நூனினை

341. வடிசுடர் வான்கதை வயக்கித் தன்னெதிர்
கொடியவெம் பூதரைக் குணலைப் பேயரை
மடமுறு பெண்களை மயக்கிக் குத்தியே
சுடுவனைக் குடிக்குவன் துன்னி யோடுவான்

342. பேயினும் வலியவிப் பிரம ராக்கத
னையவன் வனமெலா மடைந்து சுற்றியே
தீய பெண்களைத் தின்று தின்றுமேற்
தூயதோர் தவவனம் தொடர்ந்து சென்றனன்

343. அவ்வனத் தனேகமா மருந்தவத் தருஞ்
செவ்விதி னிருந்தனர் தீயற் கண்டனர்
எவ்வழி யுய்குவ மென்ன வேங்கின
னவ்வழி நாரத னணுகி னனரோ

344. படர்சடை விழுதெழப் பரம்புங் கண்டிகை
புடைவிழி நீற்றணி பொலிந்த குண்டிகை

வடிவமை புரியதன் மருவு நூலணி
யுடையனு யெதிர்ந்தன னுவலுங் கண்டரோ

345. விடுவிடு பாரெனு வீர வாள்கொடு
தொடர்பவன் தனையிவன் சூர்த்து நோக்கலு
மடையுடல் வெடிபட வங்கி பற்றியே
சடுலவான் பொறியெழச் சாம்ப ரானதே

346. அன்னவ னுருயி ரவிர்ந்து சூக்கமேற்
றுன்னியே பேயுருத் தொக்க நின்றது
வன்னியின் விழிசெறி மகதி யான்முனி
யென்னயீ தென்னவே யினிது நோக்கினன்

347. அந்தவான் பேயெழீஇ யைய செய்யவ
வெந்தையே யென்பிழை யாவுந் தீர்க்கென
வந்தியே பணித்ததங் கவனுந் தேறியே
முந்தையூழ் முனிவரன் முழுதுங் கண்டரோ

348. தனதுறு சமண்பலஞ் சார்ந்த சுத்தநீர்
வனமலர்க் கையினல் வாரிச் சிந்தியே
தினையள வுண்கெனத் தீற்றி யுய்த்தனன்
அனையது சிவமய மாக்கி யுய்த்ததே

349. இன்னதோர் கபால நீரிடைப் படிந்திடு
முன்னவ நாரதன் முன்னை தீர்ந்திடுஞ்
செந்நிற வரக்கனைச் சிதைத்து வன்னியார்
றென்னெறி பேயுரு துலங்க நட்டுமேல்

350. அந்தவான் பேயுரு வயன்க பாலமேல்
வெந்திறற் தீர்த்தநீர் மேவும் பான்மையி
னுய்ந்ததப் பேயுய ருற்ற மந்திரனே
டிந்தனீர் படிந்திடி விசைப்ப தென்னையோ

351. கோடிவான் கணங்களும் கோடி ருத்திரப்
பீடுறு சீவரும் பெரிதி னேத்திட
வாடலார் சிவபத மணுகி யுய்குவர்
நாடருங் கங்கைநீர் நலத்தி னன்றது

352. சங்கணி கரத்துமாயன் தசரத குமாரனாகி
மங்கலச் சீதைவேட்டு மகிழ்ந்திடு முனீச்சரத்துத்
தங்கினன் தம்பிமார்கள் சார்ந்திடத் தவமுழந்தா
னங்கணே இராமதீர்த்த மணிசெறி சீதைதீர்த்தம்

353. என்னுமித் தீரத்தோ டேயிசைத்து மானுவரிக்கண்
முன்னுயர் சுயம்புமூர்த்தி முனீச்சரன் பாதம்போற்றி
யன்னிலை யருளவேண்டி யயோத்திமா நகரிற்சென்று
தன்னுடை முடியைநீத்துத் தம்பியும் தானும்சீதை

354. தையலுந் தொடர்ந்துசெல்லத் தழைத்திடு கானஞ்சென்று
வெய்யதோ ரரக்கர்செற்று விளைவழி சீதைவேட்டு
பையவே சேதுநாட்டுப் பயின்முடி யயோத்திபெற்றுச்
செய்யமால் இராமன்தேகம் தீர்ந்துவை குண்டமுற்றான்

355. ஆதலா லினையதீர்த்த மரிராமன் சீதைதீர்த்த
மேதகு சேதுதீர்த்தம் வினையொழி பாவநாச
மாதிய மானுவரிப்பே ரமையுமித் தீர்த்தமாடிற்
பாதகம் பகைவிசாரம் பாற்றிவிண் ணமரச்செய்யும்

356. செங்கம லத்தில்மேவுந் தெரிவைபூந் திருவுமுன்னு
ளங்கமார் முனீச்சரத்தி னமர்ந்தனள் வித்தையாக்கி
மந்தலத் தடமுண்டாக்கி மருங்கினி லிலிங்கநட்டுச்
சங்கர சிவனைப்போற்றித் தவம்பல நாட்புரிந்தாள்

357. அவட்கருள் பான்மையுற்ற வம்பிகை பாகங்கொண்டு
தவத்துறு மிடபமூர்ந்து சாரத கணங்கள்போற்ற
உவப்பினிற் காட்சிதந்தா னுத்தமி அவனைவேண்டிக்
கவைத்தவெள் ளேறுகொண்ட கடவுணீ யருள்கவென்றே

358. ஐயனே எந்தஞான்று மரியிரு தயத்தினனே
செய்யதோர் திருவற்சப்பேர் செறியணி யாகவேண்டும்
மெய்யனே யென்கழுத்தில் விளங்குமங் கல்யமென்றும்
பொய்யிலாப் பொருளாயோங்கப் புனிதநீ யருள்கவென்றாள்

359. ஆவது வரமளித்தே யரனுயர் சீரிலிங்கத்து
மேவினு னினையதீர்த்தம் விரும்பினோர் படிந்தோர்யாரும்
பூவுயர் சுமங்கலைப்பேர் புனைந்துபிற் காலந்தன்னி
லாவலார் கௌரிபாங்க ரடைகுவ ராயுங்காலே

360. சுத்தசத் தாகியோங்கித் துலங்கிய முனீசரத்தி
லெத்தனை கோடிலிங்க மத்தனை கோடிதீர்த்த
மெத்தனை மருத்துமூலி யத்தனை தவவொழுக்கஞ்
சித்தமாய்ச் சித்தியற்றிச் சித்திகள் யாவுநல்கும்

361. புரையறு தியானநிட்டை பொலிதரு மித்தலத்திற்
வரநதி சென்னிசூடும் வள்ளலுங் கௌரிதானும்
மொருவல ரனந்தானந்த யோகியா யுள்ளுமாகி
விரிபரா னந்தமாகி மேவுவர் தேருங்காலே

362. கருணைசேர் புலத்தியன்சீர்க் கதிபொல னறுவைக்கண்ணே
பெருகிய யோகநிட்டை பேணின னனையகாலை
விரிதரு மட்டயோகம் வெடித்தது பிழம்பாயோங்கி
யரியதோ ரட்டமூர்த்தத் தாகியே யவிர்ந்துமேலும்

363. தேங்கிய மூலாதாரத் தீயினிற் பிறந்துமேலு
மோங்கிய வடிவந்தண்மை யுயருறுஞ் சலனஞ்சத்தம்
வாங்கிய பரிதிக்காந்தி மதிகொழுந் தன்மையானம்
பாங்குறு முயிர்ப்புப்பற்றிப் பயின்றெட்டு வடிவமாகி

364. திக்குய ரண்டரண்டஞ் செறிந்தது சொரூபமாகி
எக்குவ லயங்கள்தோறு மெவ்வகை வானந்தோற்றுந்
தக்கதோர் பொருள்கடோறுந் தயங்கிமா மாயைநாட்டிப்
புக்குயர் தவவொழுக்கம் பொறைநிறை யறிவுசிந்தை

365. மன்னுமாங் காரசக்தி வடிவெலாம் சிமித்துக்காட்டி
உன்னருங் கயமேயாக வுற்றன வரக்கனுதி
அன்னிலை யாதிசக்தி யுமையவள் முதலேயாகப்
பின்னரு முயிர்களெல்லாம் பேதலித் தேங்கிற்றன்றே

366. முன்னவன் முனேசப்பெம்மான் முழுதருட் கருணையாலே
யன்னிய ஞானசக்தி யடர்ந்தட் டகயனைச்சிந்த
தொன்னெறிய வருந்தேறித் துலங்கியே முனீச்சரத்தின்
மன்னினர் குளமேயாக வதிந்தர னருளினலே

367. சிவகலை தீர்த்தமானர் தீர்த்தத்திற் படிந்தோர்யாரு
முவமையில் சிவசொரூப மோங்குவ ரத்தலைக்கண்

இவர்தரு சிரார்த்தபிண்ட மெள்ளுநீர்த் தாரைவார்த்த
லிவைபுரிந் திடுகிலின்னோர் ஏழேழு சந்ததிக்கும்

368. மற்றுமேற் சந்ததிக்கு மலரய னுலகேயாகப்
பெற்றவர் சிரார்த்தமீயும் பேறுபோ லியாங்கணுண்டு
மற்றினிப் புகல்வதென்னே மாயவன் கற்பங்காறு
முற்றவிப் பிதுரர்யாரு மோங்குவர் மாயன்மேனி

369. இன்னுமிச் சிவத்திடைல் யியம்புவ னனேகமாகு
மன்னே யப்பனுகி யாதியா யனுதியாவன்
வன்னிவான் சடையிற்சேர்த்து மாதுட னுடிநீடும்
பொன்னவிர் சபையினுடும் பூரண னுவன்காண்டி

370. ஆதியார் மாயன்மேனிய மமைதரு வியாதனுமே
மேதரு முனிவன்முன்னுள் வெதிரிகாச் சிரமம்மேவ
வேதியர் முனிவர்யோகர் விண்ணவர் மண்ணோர்தொக்கார்
நாதனும் வியாதநாம நான்மறைக் கொழுந்தேபோற்றி

371. எங்கணு மொளியாயுள்ள தெங்கணு முயிராயுள்ள
தங்கனேக மாகவான் றவருரைப் பார்பல்லோர்
இங்கிதின் முதல்வன்யாவ னென்னவென்பதை யாங்கள்தேரோ
மீங்கிவை தனுக்கனுதி யில்லேயோ வுண்டோதேரோம்

372. படித்தன மனேககாலம் படித்ததாற் பயனென்னேய
தடித்திடு தர்க்கந்தன்னுற் சார்ந்திடுமைய நீக்கிநாடித்
தடுகுரவ னின்றிநுண் பொருளுணர்வ தென்னே
யடைந்தனே யெல்லாந்தேர்வை யருமறை தொகுத்தநூலோய்

373. உத்தமப் பொருளேக்காட்டி யுணர்த்தென வியாதமேலோ
னித்தனு ரருளின்மாயா சக்தநீணெறி யையமாற்றச்
சுத்தமார் சிவமதந்தான் லுளவணி மாயன்தானே
கத்தனென் றுரைத்தான் கேட்டகடவுளர் மனம்வருந்தி

374. ஈதென்ன காலமந்தோ விறையவன் சிவமிருக்கப்
பேதையாய் மாயன்தானே பிரானெனத் துணிந்துரைத்தான்
மாதவ னஞ்ஞானத்து மயங்கின னுயினுஞ்சீ
ரோதந்த வஞ்ஞானந் தானுற்றிடா திவனிடத்து

375. தற்கமெத் தனேகள்கோடி சாற்றினன் பிரமவித்தை
விற்பன னெனமருண்டார் மீண்டுமவ் வியாதனின்னே
ரிற்புகு மெண்ணங்கண்டே யின்னமுற் சொன்னவாறே
பற்பல நியாயங்காட்டிப் பகர்ந்தனன் னேயன்றுனே

376. பிரமமென் றினிதுரைத்தான் பிரமனே யாதியானேர்
திரிபல விந்தவாறு செப்பிடில் நாங்கணின்னேப்
பரிவுறத் தடுக்குங்கல்வி பயின்றுசேர் வாரணுசி
விரிதரு நந்திமுன்னர் விளம்பிடி லொப்புக்கொள்வோம்

377. என்றன ரிவனுணர்தா னேகுதும் வம்மினென்னுத்
துன்றிய முனிவன்சென்றுன் தொடர்ந்தனர் யோகரேனோர்
மன்றல்சார் நந்தனங்கள் வளர்ந்துவான் றடவியோங்கி
இந்தணி மண்டபத்தி லேறுபூங் காவிளங்கும்

378. நாரணர் வராலெழுந்து வழிநறு வுண்டுகொண்டு
சீரிய மடைவுடைந்து தெள்விழி வண்டியம்பக்
கூரிய தூம்புபாயுங் குளனகள் மருதவேலி
சேரியல் வாரணுசி சென்றனன் முனிவன்றுனே

379. தருக்கிய கல்விமேலோன் சங்கரன் மாயவீறே
பிரித்தறி தரனும்வீறே பிரமனே யாதியோரும்
பொருக்கெனப் புடையடைந்தார் புங்கவன் கையுயர்த்தி
இருக்கினிற் சிலபுகன்றே விறையவன் மாயனென்றான்

380. கண்டனன் நந்திதேவன் கடுஞ்சினங் கொட்புவீறத்
தண்டலில் பொய்மொழிந்தாய் தற்பரன் சிவனேயல்லால்
விண்டுதா னதிபனுகான் வேதம்வி ளுரைகள்பார்த்துக்
கொண்டிலே முற்றுவிட்டாய் முனிவநீ கூறக்கேண்மோ

381. எனதுமுன் சிவனைநிந்தை யியற்றினை யாதலாலே
புனைதருநா வெழாதேபோகப் பொருந்துகை யுயர்பான்மை
தனிபெருஞ் சாபமிட்டான் றுபதனி வைகள்கண்டே
யினியென்ன செய்வேனென்னு வேங்கினன் பரதவித்தே

382. செருக்கெலா மிழந்துவாழச் செய்யனே நந்திதேவே
கருப்பமாய்த் தோன்றுஞ்சீவர் கலங்கலுந் தெளிதலும்
உரைப்படி நித்தமுந்தா னுறுவன வுணர்கிலாயோ
திருக்குடை யெனதுபுன்மை தீர்த்தரு ளென்றனன்றே

383. ஆங்கவன் சொல்லக்கேட்ட வான்முக னருளினலே
ஈங்குநீ சிவத்துரோகத் திடைப்பழி நீக்கவேணுஞ்
சாங்கமாய் முனீசமூர்த்தி தனதரு ளதனுலாகும்
பூங்குழ லுமையோர்பாகன் புண்ணியன் புராணநாதன்

384. சங்கரன் சன்னிதிக்கட் சாரென வினையன்தேறித்
திங்களங் கண்ணிவேய்ந்த செல்வர்க்குப் பூசைசெய்து
பங்கமார் சிவத்துரோக பாவமுற் றொழிந்துமேலாம்
புங்கவர் வணங்கியேத்தும் பூரண நிலையிலுற்றான்

385. ஆதலா லன்னவீச னுயிலை யம்மையோடு
மேதகு பூசைகொண்டு மிகமுனி சிவத்துரோக
வாதனை மாற்றலாலே வாகனன் பரவியேத்தும்
ஆதரமு னீசனென்னு வமைந்தன னின்றுமாதோ

386. இன்னுமெம் பரமமூர்த்தி வியலரு ளாடலாலே
முன்னிய மணவாளப்பேர் முதல்வனுய் முதல்வியோடுங்
கன்னிகை கலந்தயோகங் கதிதரு பிரமசைய
மன்னிய சுரூபமுற்றான் மாதுநீயினிது கேட்டி

387. வேறு

துங்கமுறு மாவணிக்க ணேணந் தன்னிற்
சுத்தசிவம் சிவையோடுஞ் செறிந்துபுல்லிச்
சங்கமுறு மணவாளக் கோலங் கொள்வான்
தன்னிகரி லிக்கோலத் தகைமைகூறி
வெங்குமுள மன்னுயிர்க ளின்பந் தேறி
யிசைநாம முத்திவழி யினிதுகொள்ள
வங்கமுறு கல்யாண சுந்தரப் பேர்
அமைந்தனனவ் விதந்தனை யறைவன்கேட்டி

388. வேறு

துன்னு மித்தினந் தொல்லுயிர் விண்ணவர்
மன்னு மாதவர் மாலயன் வானுளோர்
பன்னு விஞ்சையர் பற்றிய நாரத
னின்னர் யாருமு னீச்சர மெய்தினர்

389. ஈசனல் லருளா லிசையும் மயன்
தேசு லாவுமு னீச்சரஞ் சேர்ந்தனன்
ஆசில் மாமணத் தாகிய சாலைகள்
பேசு செம்பொருள் பெட்புற வேற்றினன்

390. வாழை கன்னல் வளர்முளைப் பாலிகை
சூழு பந்தர் துலங்கிய கண்ணடி
வாழி மாலைகள் மங்கலச் செம்பொரு
ளேழு யோகமு மேற்ற வியம்பினன்

391. செய்ய பூமணிப் பந்தர் சிறந்துள
வைய மெங்கணு மாண்புற நாட்டினன்
துய்ய வாலரி தோன்றுறு மங்கலங்
கையி லாரதி காட்டவு நாட்டினன்

392. தேவ ரம்பையர் சென்றனர் நாடக
மாவ லாகவ மைத்தனர் துந்துமி
யோவில் மல்லரி சல்லரி யோங்கிய
தேவ பாணி சிறக்க வொலித்தவே

393. வேறு

இத்தகைய காட்சிபெற வெம்மை யீன்ற
விறையவனு மிறைவி தானுஞ்
சுத்தமுறு மணக்கோலந் துலங்க நட்டார்
துந்துமியே யாதியன துவன்றியார்ப்பத்
தத்திமிதெய் தத்தியெனத் தாளம் போடச்
சரம்புரளும் வீணையிரு பாங்கின்பாட
நித்தமலி கல்யாணக் கோலங் காட்டி
நிருமலனு ருமையோடும் வீற்றிருந்தார்

394. அரியெழுந்தா னம்புசைகைச் சிரகம் வாங்கி
யரன்பதத்தி லபிடேக முறையியற்றிப்
பரிவுபெறு மதுவர்க்க மினிது தந்து
பயிலனேக தோத்திரங்கள் பகர்ந்துமேலும்
தெரிவரிய கன்னி தனைத் தானமாகத்
தீம்புனல்பொன் னேடுதவச் சிவபிரானு
மருமைசெறி திருக்கரத்தி னினிது வாங்கி
யகிலங்க ளினிதுய்ய வறம்வளர்த்தான்

395. அம்புயனும் விவாகநெறி யினிது நாடி
யனலெழுப்பி நெய்சொரிந்தாங் கவியிகுத்துச்
செம்பொருளார் கந்தருவ தர்ப்பணதி
செய்வித்தா னங்கிமுறை செறிந்தேசுத்தி
நம்புசெறி யம்மைபதஞ் சிலையிற் சேர்த்தி
னண்ணுமருந் ததிதரிச னங்கண்டே
உம்பர் மகிழ் பூரணமுந் தாலீவாக
முற்சவமு நீராட்டு முவந்தானன்றே

396. ஈது கண்டோ ரெல்லோரும் சிவமேயாரி
னிப்பிறப்ப பதின்றின்றென்ன விறையேயைய
மாதுமையே வடிவழகி யம்மையே நம்
மனத்துயரை மாற்றென்றார் வரதனருஞ்
சீதளமா ரருள்புரிந்தார் மாலே யாதி
தேவர்களுங் கொண்டா டிப்பாடி
மேதகைய தமதுலகம் மேவி யுற்றார்
விமலனார் முனீச்சரத்தின் விளங்கினரே

வேறு

397. கன்னி கேளிக்கடி நகர்க் காவலாய்
முன்னு வைரவ ஞதியர் முந்துற
இன்னர் வைகுதி யீண்டுறு தீர்த்தமுங்
கன்னி தீர்த்தம தென்னக் களறுவார்

398. இந்த மாமடு எய்திப் படிகுநர்
சிந்தை வேண்டிய சித்தியை யெய்துவார்
கந்தமா மலரோன் கற்ப மீதினு
மந்த வீசன ருட்பத மோங்குவார்

399. என்று கூறியி ருந்திடு யோகியுந்
துன்று ஞானச் சுடரின் மறைந்தனன்
அன்று கண்ணகி யம்மையு மீசனின்
மன்ற நல்லரு ளாலவண் வைகினுள்

400. பேசு மிந்நகர் பெட்புறு லிங்கமும்
வீசு சோதி விளங்கு சுயம்பதா
மாசி லம்மையு மானவ ருள்வழி
தேசு சேருஞ் சிவையெனச் செப்புவார்

401. காண்டல் சேருமக் கான முனீச்சர
மண்டி ஞேருட லாகிய கால்களுந்
தண்டு ருவுடற் சார்ந்திடிற் சுத்தவான்
முண்ட கன்பதம் மேவுவர் முன்னினே

முனீச்சரப் படலம் முற்றும்
ஆகத்திரு விருத்தம் 401

சாற்றுகவி

விந்தைசெறி வட்டுநகர் வேதியனு கேசபுந்தி
மைந்தன்சிவ சுப்ரமண்யகுரு — தந்ததமிழ்
தென்கோயின் மான்மீயச்சீர்ச் செப்புபுரா ணஞ்சிவமே
என்கோ அமுதென்கோ யான்



பிரமஸ்ரீ சி. பாலசுப்ரமண்ய குரு

# மஹா கும்பாபிஷேக வைபவ வர்ணனை

*(தேவஸ்தானத்தார் வரைந்தது)*

ஸ்ரீ முன்னநாத சுவாமிக்கும் வடிவாம்பிகைக்கும் பரிவாரமூர்த்திகளுக்கும் ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம் 1963-7-1க்குச் சரியான சோபகிருது ஆனி மீ 17-ந் திகதி சோமவாரம், சுக்லதசமி, சுவாதி நக்ஷத்திரம், அமிர்தயோகம் சாத்விகவேளை கூடிய கன்யாலக்ன சுபமுகூர்த்தத்தில் நண்பகல் 12 மணியளவில் நடைபெற்றது.

பூர்வாங்கமான கிரியைகள் ஆனி மீ 9-ந் திகதி (23-6-63) தொடங்கி நடைபெற்றன.

23-6-63 ஞாயிற்றுக்கிழமையன்று அதிகாலை 4-30 மணி தொடக்கம் கணபதிஹோமம் நடைபெற்றது. ஸ்நபனமும் விசேஷ மூலமந்திர ஹோமங்களும் விரிவான அபிஷேகமும் இக்கிரியையில் முக்கிய இடம்பெற்றன. காலை 6-15 வரை விசேஷ தீபாராதனையுடனும் நூற்றெட்டுத் தேங்காய்கள் உடைத்து விக்கின நிவாரணத்தின் பொருட்டு நிகழ்த்திய பிரார்த்தனையுடனும் இக்கிரியை இனிது நிறைவேறியது. முன்னேஸ்வர தேவஸ்தான அருச்சகர்களுள் ஒருவரான பிரமஸ்ரீ கி. வைத்தீஸ்வரக்குருக்கள் இக்கிரியையை நடத்திவைத்தார்.

6-15 மணியளவில் குரவர்களினது பூஜையும் அவர்களிடம் அனுக்ஞை பெறுதலும் நிகழ்ந்தன. தேவஸ்தானத்தை புனருத்தாரணம் செய்தவரும் தேவஸ்தான குரு பரம்பரைக்கு மூலபுருஷரானவருமான பிரமஸ்ரீ நா. குமாரசுவாமிக்குருக்கள் அவர்களது உருவப்படமும் அவரது பௌத்திரரான பிரமஸ்ரீ மு. சோமாஸ்கந்தக்குருக்கள் அவர்களது உருவப்படமும் தேவஸ்தான உத்தியோகசாலையில் அழகுபொலிய அலங்கரிக்கப்பட்டு விளங்கின. அக்குரு பரம்பரையில் வந்தவரும், தற்காலம் தேவஸ்தான பரிபாலனஞ் செய்து வருபவருமான பிரமஸ்ரீ சி. பாலசுப்பிரமணியக்குருக்களும், பிரமஸ்ரீ மு. சோமாஸ்கந்தகுருக்களுடன் நெடுங்காலத் தொடர்பு விளைவாக கிரியைகளில் பெரும் பயிற்சியும், அறிவும், பெரும் அநுபவமும் வாய்ந்து விளங்கும் பிரமஸ்ரீ சி. சாம்பசிவக்குருக்கள் அவர்களும் இத்திருவுருவப்படத் தருகாமையில் விரிக்கப்பட்ட இரத்தினக் கம்பளத்தின்மீது அமர்ந்திருந்தனர். இக்குருபூஜை 6-15 மணியளவில் ஆரம்பமாகியது. கும்பாபிஷேகத்தை குருத்துவம் வகித்து நிகழ்த்தும் வாய்ப்பு சாதாரண சூழ்நிலையில் இல்லாத இடத்தும் தெய்வத் திருவருளாலும் ஸ்ரீ வடிவாம்பிகா ஸமேத முன்னநாதஸ்வாமியின் திருவுள்ளக் கிடக்கையாலும் கும்பாபிஷேகக் கிரியையினை நிகழ்த்தக்கூடியநிலை அதிசயமான முறையில் வாய்க்கப்பெற்று உருவாகக்கண்டு தேவஸ்தானத்தின் பரிபாலகர் இது முன்னநாதப்பெருமானது ஆக்ஞையே எனச் சிரமேற்கொண்டு பிரமஸ்ரீ கா. கைலாசநாதக்குருக்கள் அவர்களைப் பிரதான ஆசார்யராக வரித்து அவரிடம் கும்பாபிஷேக வைபவத்தை நிறைவேற்றும் பொறுப்பினைத் திரிகரணசுத்தியுடன் ஒப்படைத்தனர். பிரமஸ்ரீ கா. கைலாசநாதக்குருக்கள் அவர்கள் நல்லூர் ஸ்ரீ கமலாம்பிகாஸமேத கைலாசநாதஸ்வாமி தேவஸ்தான ஸ்தாபகரும் இலங்கையில் பல இடங்களில் கும்பாபிஷேகாதி கிரியைகளில் குருத்துவம் வகித்து மனமொரு வழிபட்டுக் கிரியைகள் நிகழ்த்துவதில் ஈடிணையாறு விளங்கியவருமான பிரமஸ்ரீ ந. வே. கார்த்திகேயக்குருக்கள் (தம்பையாக் குருக்கள்) அவர்களின் மூத்த மைந்தராவார். தந்தையால் இளம்பிராயந்தொட்டே இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட விற்பன்னர்களைக்கொண்டு வேதம் ஓதுவதில் விசேஷப் பயிற்சியளிக்கப்பட்டவர். தந்தை நிகழ்த்திய கும்பாபிஷேகாதி கிரியைகளில் பன்னீராண்டு பிராய முதல் பத்து வருஷகாலமாக உடன் இருந்து பத்ததி வாசித்தல் முதலிய கருமங்களாற்றிப் பெருமனுபவம் மிக்கவர். இவருக்கு வேதாத்தியயனத்திற் பயிற்சியளித்தவர்கள் வைக்கத்தைச் சார்ந்த பிரமஸ்ரீ சு. சிதம்பர சாஸ்திரிகளும், சுன்னாகத்தை உறைவிடமாகக்கொண்ட பிரமஸ்ரீ P. V. சிதம்பர சாஸ்திரிகளும், கோப்பாயில் சிலகாலம் வசித்த பிரமஸ்ரீ ஸ்ரீநிவாச சாஸ்திரிகளும் ஆவர். பத்ததிகளை வாசிப்பதிலும், கிரியைகளில் உரைக்கவேண்டிய பகுதிகளை மனப்பாடம் செய்வதிலும் தந்தையால் விசேஷ பயிற்சியளிக்கப்பட்டவர். வேதம், ஸ்வரம், பிறழாது ஓதும் ஆற்றலும், பத்ததிகளையும் மூலநூல்களாகிய ஆகமங்களையும் அறியுமளவிற்குத் தந்தையாற் பயிற்சியளிக்கப்பட்டனரெனினும் இத்துடன் இவர்க்குக் கல்வித்துறையில் ஈடுபாடு தளர்ந்து விடவில்லை. வியாகரண சிரோமணி பிரமஸ்ரீ T. K. சீதாராம சாஸ்திரிகள் இவர்க்கு பாணினீய வியாகரணப் புலமையும் காவியங்களிலும் சாஹித்தியக் கிரந்தங்களில் விசேஷ பயிற்சியும் சாங்கியம், யோகம், நியாயம், வைசேஷிகம், பூர்வமீமாம்சை, உத்தரமீமாம்சை முதலான அறு தரிசனங்களிலும் சைவ, வைஷ்ணவ, சாக்த கிரந்தங்களில் அடிப்படையா அறிவும் சிறப்புற அமையும்படி புகட்டியதுடன் இன்றும் இவ்வாசாரியரின் அறிவுக்கண்களைத் திறந்து வைத்த பெருமிதத்துடன் இவரது குருநாதராக விளங்கி வருகின்றார். தந்தையால் ஸ்தாபிக்கப்பட்ட சிவாலயத்தில் சிறுபிராயந்தொட்டே கிரியைகளைப் பன்னெ

டுங்காலம் நிகழ்த்திவந்த இவருக்குக் கிரியைகளை நிகழ்த்தும் முறை இயற்கையாகவே வாய்ந்து பொலிந்து விளங்குகின்றது. தந்தையால் ஒழுங்கு செய்து வகுக்கப்பட்ட கல்வித்திட்டத்திற் கமைய அவர் இறைவனடி நிழலையடைந்தபின்னரும் தொடர்ந்து இலங்கைப் பல்கலைக்கழ கத்திற் பயின்று சமஸ்கிருதத்தைத் தனிப்பாடமாகவும் தமிழைத் துணையாகவும் கொண்டு B.A. Hons. (ஆனர்ஸ்) பரீக்ஷையிலும் அதேபாடத்தில் M.A. பரீக்ஷையிலும் தேர்ச்சி பெற்றார். இவர் திறமைகண்ட பல்கலைக்கழகம் இவர் சித்தியெய்திய அக்கணந்தொட்டே இவரைச் சமஸ்கிருதத் துறையில் விரிவுரையாளராகக் கடமையாற்ற அமர்த்திற்று. மேல்நாட்டிற்கு ஆராய்ச்சியனுபவம் வேண்டியனுப்பும் வழமையையுடைய பல்கலைக்கழகம், இவர் வேண்டு கோட்கமைய இந்தியா சென்று கற்கும் வாய்ப்பை இவருக்களித்தது. இதைப் பய படுத்தி பூனா பல்கலைக்கழகத்தில் ஈராண்டுகள் உழைத்து ஆராய்ச்சியில் ஈடுபட்டார். இவ்வாராய்ச் சியின் விளைவு இவர் ஆங்கிலத்தில் தயாரித்த பெரும்நூல். இது இதிகாச புராணங்களில் உள்ள சைவ வரலாறு கூறுவது. இந்நூலில் ஆகமக்கிரியைகளின் சிறப்பு உரிய இடங்களில் மிகப்பெருமளவிற்கு விளக்கப்பட்டுள்ளது. இந்நூலைப் பாராட்டிய பூனாப் பல்கலைக்கழகம் இவருக்கு டாக்டர் ப டமளித்துக் கௌரவித்தது. விரிவுரை ாளராகப் பல்கலைக்கழகத்திற் கடமையாற்றுமிடத்தும் தம் சமயாசாரானுஷ்டானங்களை இம்மியளவேனும் பிறழவிடாது கடைப்பிடிப்பவர்.

கர்மாரம்ப தினத்தையடுத்துத் தொடங்கவேண்டிய பல்கலைக்கழகம் அதன் சரித்திரத் திலேயே என்றும் நிகழாதவாறு ஏதோ காரணங்களால் தொடங்கும் தினத்தை மாற்றி யமைக்கத் தீர்மானித்தது. இத்தொடக்கத்தினம் கும்பாபிஷேகத்தின்பின் அமைந்தது என்பது குறிப்பிடத்தக்கது. இதுவே இவர் இவ்வைபவத்தில் ஆசார்யத்துவம் வகிக்கும் சுபமான, அதிசயிக்கத்தக்கதான, தெய்வத்திருவருள் வாய்ந்த நிலையினைத் தோற்றுவித்தது.

தந்தையாராகிய ஸ்வகுருவையும், சோமாஸ்கந்தக்குருக்களாகிய பரமகுருவையும், குமாரசுவாமிக்குருக்களாகிய பரமேஷ்டி குருவையும் பூஜித்து வழிபட்டு நிகழ்த்திய தீபாரா தனையுடன் இக்குருபூசையினை ஸ்ரீ கைலாசநாதக்குருக்கள் அவர்கள் ஆரம்பித்து வைத்துள் ளார்கள். சாஷ்டாங்க நமஸ்காரமும் குரவர்கள் மூவரிடமும் இவ்வாறு பூஜிக்கப்பட்ட சி. பாலசுப்பிரமணியக்குருக்களிடமும் சி. சாம்பசிவக்குருக்களிடமும் அநுக்ஞை பெற்றபின் பிரதான ஆசாரியர் கா. கைலாசநாதக்குருக்கள் அவர்கள் கர்மாரம்பகிரியையை நிகழ்த்து வதற்காக வீதி வலமாக மஹா மண்டபத்திற்கு அழைத்துச்செல்லப்பட்டார்.

கும்பாபிஷேக விஞ்ஞாபனப் பத்திரிகையிற் குறிப்பிட்டவாறு 23-6-1963 ஞாயிற்றுக் கிழமை அதிகாலை 7-00 மணியளவில் கும்பாபிஷேககர்மாரம்பம் தொடங்கியது.

அலங்கார வேதிகையின்மீது அழகுற அனுக்ஞைத்திரவியங்கள் வைக்கப்பட்டிருந்தன. குத்துவிளக்குகள் மங்களமான கதிர்களைப் பரப்பி நின்றன. விக்நேஸ்வர பூஜை, புண்ணி யாகம் ஆகிய இரு கிரியைகளுக்கும் வேண்டிய ஆயத்தங்கள் செய்யப்பட்டிருந்தன. பிரதான ஆசார்யர் வருணகும்பமும் ஹரித்ராபிம்பத்தில் உருவாகிய பிள்ளையாரும் வைக்கப்பட்டிருந்த தண்டிலத்தின்முன் அமர்ந்திருந்தனர். சந்நிதானத்தின் இருமருங்கிலும் வரிசையாக இருத்து விக்குகளும் ஏனைய ஆசாரியர்களும், சாதகரும் அமர்ந்திருந்தனர். வடிவாம்பிகையினதும், முன்னைநாதரதும் அருள்நோக்கு கிரியை நடைபெறவிருக்கும் அந்த இடம் முழுவதையும் தெய்விக மணங்கமழச் செய்தது.

6-55 முதல் 7-00 வரையுள்ள ஐந்து நிமிஷங்களாக பெரிய கண்டாமணிகள் அனைத்தும் ஒருங்கே ஒலித்தன. தேவர்களே வாருங்கள், தீய அரக்கர்களே இவ்விடத்தை விட்டகலுங்கள் என்று இம்மணிகளின் ஓசையின் ஒவ்வொரு ஒலி அசைவும் கழறிற்று. தேவர்களைச் சமுக மளிப்பதற்காக விடும் அழைப்பின் அடையாளமல்லவா மணி ஓசை! தாளங்கள் சங்கு, சேகண்டி, கைமணிகள், தம்பட்டம், முதலிய பல வாத்தியங்களும் சமகாலத்தில் ஐந்து நிமிட நேரமாகப் பேரொலி எழுப்பிப் பெருமுழக்கம் செய்தன.

கூர்மாசனத்தின்மீது சுகாசனமாக வீற்றிருந்த பிரதான ஆசார்யர் இவ்வைந்து நிமி ஷங்களாகக் கண்மூடி வாத்திய நாத ஒலியில் இலயித்து மனதை ஒரு வழிப்படுத்தி நாதாந் தத்தில் உறையும் இறையில் மனமழுந்தும் தியான சமாதி நிலைநிற்ப, ஏனையோரும் அவ்வழி பற்றிக் கண்மூடி நாதானுசந்தானமாக இறைவனை அவ்வாறு சிந்தையிலூன்றித் தியானித் தனர். எல்லோரும் இவ்வாறு இறைவனைச் சமாதிநிலையிற் கண்டு அனைவரும் ஒருங்கு அவ னருள் வேண்டி நின்றனர். இறைவனருளை அந்தர்முகமாகப் பெற்ற ஆசார்யர், நிஷ்டை கலைத்து அங்கிருந்தவாறே முன்னைநாதரதும் வடிவழகியினதும் திருவுருவங்களில் கண்களைப்

பதித்தவாறே ஸ்வஸ்தி மங்கள வாசகத்துடன் கிரியைகளைத் தொடக்கி வைத்தார். "ஸ்வஸ்திம் பவந்த: ப்ருவந்து" என்று அவர் விடுத்த வேண்டுகோட்கமைய, அங்கு குழுமியிருந்த சிவப் பிராமணர்களனைவரும் ஒரே குரலில் "ஸ்வஸ்தி" என ஸ்வஸ்தி மங்கள கோஷம் எழுப்பினர்.

ஆசார்யர், அருகிலமர்ந்திருந்த தர்மபரிபாலகர் சி. பாலசுப்பிரமணியக்குருக்களுக்குப் பவித்திரமணிவித்து விரிவான சங்கற்பம் நிகழ்த்துவித்தார்.

தொடர்ந்து விக்நேஸ்வரபூஜை, புண்ணியாகவாசனம், பஞ்சகவ்யபூஜை ஆகியன நிகழ்ந்தன. இவ்வாறு கிரியாரூபமாக ஸ்தலம் புனிதமாக்கப்பட்டது. இதைத்தொடர்ந்து திரவ்யவிபாகம், திரவ்யசுத்தி, தனபூஜை முதலிய கிரியைகள் நடைபெற்றன.

ஞாயிற்றுக்கிழமை காலை நிகழ்ந்த கிரியைகளுள் முக்கியத்துவம் வாய்ந்தது அனுக்ஞை யாகும். இது சாஸ்திரோக்தமாக சாங்கோபாங்க பிரத்தியங்க முறையினுக்கமைய வரிசையாகவும் விரிவாகவும் நிகழ்ந்தது. முதலில் விக்நேஸ்வரானுக்ஞையும், தொடர்ந்து சுப்பிரமணிய அனுக்ஞை, சிவானுக்ஞை, தேவிஅனுக்ஞை, தக்ஷிணாமூர்த்தி அனுக்ஞை, சோமாஸ்கந்தமூர்த்தி அனுக்ஞை, நடராஜ அனுக்ஞை, பைரவ அனுக்ஞை, நவக்கிரகானுக்ஞை, விருஷபசண்டேஸ்வரானுக்ஞை என அனுக்ஞைகள் விரிவாக நிகழ்ந்தன. அனுக்ஞை நிகழ்ந்து அன்றைய கிரியைகள் இனிது நிறைவேறியமையை முன்னைநாதஸ்வாமியினதும் ஸந்நிதியில் நிவேதித்து அன்றைய காலைக்கிரியைகளைப் பூர்த்தியாக்கி தீபாராதனை முடித்து வேதகோஷம், ஆசிவசனங்கள், தேவாரபுராணதிகள் ஓதிமுடிந்ததும் கிரியைகளை மேற்பார்வையிட்டு நடத்துவதற்குரியவரெனக்கண்டு அப்பொறுப்பினை நிர்வகிக்க பிரமஸ்ரீ சி. சாம்பசிவக்குருக்களையும், திரிகோணமலை இ. கு. பூர்ணநந்தேஸ்வரக்குருக்களையும் காளாஞ்சி முதலிய உபசாரங்களுடன் நியமித்தனர். காரைநகர் கணபதீஸ்வரக்குருக்கள் அவர்களை யாகசம்ரக்ஷகராக நியமித்தனர். காலை 10 மணியளவில் கிரியைகள் இவ்வாறு நிறைவேறின.

23-6-1963 ஞாயிற்றுக்கிழமையன்று மாலை பிரவேசபலியும், கிராமசாந்தியும் நடைபெற்றன. பிரவேசபலியை பிரமஸ்ரீ ம. சுப்பிரமணியக்குருக்கள் அவர்களும் கிராமசாந்தியை கு. குருசாமிக்குருக்கள் அவர்களும் நடாத்தி வைத்தார்கள்.

24-6-63 திங்கட்கிழமை காலை நவக்கிரக ஹோமம் வெகுவிரிவாக நிகழ்ந்தது. மண்டலங்களையமைத்து அங்கே வைக்கப்பட்ட கும்பங்களில் நவக்கிரகபூசை நிகழ்ந்தபின் விரிவான ஹோமம் உரிய திரவியங்களுடன் நிறைவேறியது. பின்னர் நவக்கிரகங்களுக்கு அபிஷேகமும் விசேஷ தீபாராதனையும் நடந்தன. பிரமஸ்ரீ ச. இரகுநாதக்குருக்கள் இக்கிரியையினை நிகழ்த்தினர். கிரியைகள் நிறைவானதை இறைவன் சந்நிதியிற் தெரிவித்து தீபாராதனை, வேதாசீர்வாதம் தேவார கோஷங்களுடன் அன்றைய பகல் கிரியை நிறைவேறியது.

24-6-63 திங்கள் மாலை 5-30 மணியளவில் திசாஹோமம் தொடங்கியது. கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு ஆகிய நான்கு திக்குகளிலும் முறையே சி. சிதம்பரக்குருக்கள், ச. நாகேந்திரக்குருக்கள், பத்மநாபக்குருக்கள், சோ. சதாசிவக்குருக்கள் ஆகியோர் அமர்ந்திருந்து கிரியைகளை நடத்தி வைத்தார்கள். இதைத்தொடர்ந்து நடைபெற்ற ரக்ஷோக்ன ஹோமத்தை பிரமஸ்ரீ கா. சாம்பசிவக்குருக்கள் அவர்கள் நடத்தினர்கள்.

25-6-63 செவ்வாய்க்கிழமை காலை வாஸ்துசாந்தி மிகவிரிவாக நடைபெற்றது. காலை 7 மணியளவில் கிரியை சங்கல்பம், விக்னேஸ்வரபூஜை, புண்யாகவாசனம் ஆகியவற்றுடன் தொடக்கமுற்றது. மண்டூகபதவாஸ்த்து மண்டலம் விரிவான முறையில் சதுர்த்தளம், அதையடுத்த ரஜ்வஷ்டகம் மூன்று விருத்தங்கள் பூபுரங்கள் ஆகிய உறுப்புக்கள் அமையும் வண்ணம் ஒவ்வொரு பதமும் அததற்குரிய நிறம் வாய்ந்ததாய் புது வஸ்திரத்தில் வரையப்பட்டு, மேடைமீது குவித்துப் பரப்பப்பட்ட தானியங்களின்மேல் விரிக்கப்பட்டது. நிருருதியையும் ஈசானத்தையும் நோக்கியவாறு பெரும் கூர்ச்சம் வைக்கப்பட்டது. வாஸ்துமண்டல பூசை தனித்தனி தியானபூர்வமாக விரிவாக நடைபெற்றது. மயூராண்டம், குக்குடாண்டம், லிகுசம், ஆமலகம் முதலிய பிரமாணங்களுக்கமைய அவ்வவ் மண்டலங்களில் பலி உருண்டைகளால் பலி நிகழ்ந்தது. பக்கத்தில் உள்ள வேதிகையில் நடுவில் பிரமகும்பமும் இருமருங்கிலும் காயத்திரி, சாவித்திரி கும்பங்களும், சுற்றிலும் அஷ்டபிரம கும்பங்களும் வைக்கப்பட்டுப் பூசிக்கப்பட்டன. அக்னி கார்யம் சவிஸ்தாரமாக நடைபெற்று கூஷ்மாண்ட பலி ஹோமம் முதலியனவும் நிகழ்ந்தன. வாஸ்து புருஷனுருவம் சாஸ்திரோக்தமாக வைக்கோல், தர்ப்பை, பலாசமிலை முதலியவற்றால் தேவஸ்தான சிற்பி விஸ்வஸ்ரீ தங்கவேலு ஆசாரியாரால் உருவாக்கப்பட்டது. நான்கு தலைகள், நான்கு கரங்கள், ஒரு கரத்தில்

உலக்கை, மறு கரத்தில் கலப்பை. ஒரு கை முழந்தாளில் பொருந்தியது. மற்றைய கை பூமியில் கிடக்கும் நிலையது. இவ்வாறு வாஸ்து புருஷனுருவம் அமைந்து விளங்கியது.

ஹோமபூர்ணுகுதி நிகழ்ந்ததும் அக்கினி ஜ்வாலை வீசும் வாஸ்துபுருஷனை வலமாகப் பர்யக்னிகரணஞ் செய்து யாகசாலைகளையும், கோவிலில் முக்கிய பகுதிகளையும் புனிதமாக்கினுர்கள். இக்கிரியை பிரமஸ்ரீ பா. பஞ்சாக்ஷர குருக்கள் நிகழ்த்திவைத்தார்.

25-6-63 செவ்வாய்க்கிழமை மாலை 4-30 மணியளவில் மிருத்சங்கிரகணம் ஆரம்பமாயிற்று. பிரதான ஆசார்யர் கா. கைலாசநாதக்குருக்கள். இது முதல் கிரியை வரிசைகளை ஒவ்வொன்ருக நிகழ்த்திவைத்தார். இதையடுத்து அன்றிரவு நிகழ்ச்சி நிரலில் இடம்பெற்ற கிரியைகள், அங்குரார்ப்பணம், ரக்ஷாபந்தனம், கடஸ்தாபனம், அதிவாசம் என்பனவாம்.

மிருத்சங்கிரகணம் வெகு விரிவாக நிகழ்ந்தது. ஆஸ்தான மண்டபத்தில் குருபூஜை, அருச்சனை, பிரார்த்தனையுடன் இக்கிரியை ஆரம்பமாயிற்று. கூர்ச்சத்தில் ஆவாகிக்கப்பட்ட குரவர்களுக்கு பூசை நிகழ்ந்ததும், அனுமதிபெற்று விக்நேஸ்வரானுஞ்ஞையும் பெற்றபின் ஆசார்யர் கர்ப்பகிருகத்தை அணுகி சங்கற்பம், புண்யாகம் முடித்து துவாரபூசை நிகழ்த்தி கர்ப்பாவரண பூசை தொடக்கம் ஆவராணந்தமாக சிவலிங்கப்பெருமானை அருச்சித்து தர்ப்பையை ஸ்வாமியின் வலது கையிலிருந்து பெறுவதான பாவனையுடன் பெற்றுக்கொண்டு பரிசாரகர் மிருத்சங்கிரகணத்திற்குரிய திரவ்யங்கள் நிறைந்த தட்டை பட்டால் மூடித் தலையில் தாங்கிவர, குந்தாலியுடனும் அஸ்திரதேவரை இன்னெரு பரிசாரகர் தாங்கிவரப் புறப்பட்டு வீதிவலமாக மிருத்சங்கிரகணத்திற்குரிய இடத்தையடைந்தனர். சங்கற்பம், விக்நேஸ்வரபூசை, புண்யாகம் ஆகியன முதலில் நிகழ்ந்தன. மண்டலத்தில் ஒன்பது கோஷ்டங்களில் பூஜையும் பலிகளும் நிகழ்ந்தபின் கோஷ்டாதி தெய்வங்கள் உத்வாசனம் செய்யப்பட்டன. ஒன்பது கோஷ்டத்தில் நடுக்கோஷ்டம் வயிருக அமையும்படி பூமிதேவியின் உருவம் கோடுகளால் அரிசி மாவினுலும் மஞ்சள் மாவினுலும் வரையப்பட்டது. அதில் பூதேவி சலாசனுதியாக தியானம் ஆவாகனத்துடன் பூஜிக்கப்பட்டாள். இக்கோஷ்டங்களைச் சுற்றிலும் ஒன்பது தளங்களிலும் உரிய அதிதெய்வங்கள் பூஜிக்கப்பெற்றன. மிருத்சங்கிரகண திரவ்யங்கள் இருந்த தட்டில் வைக்கப்பட்டிருந்த மாங்கல்ய சூத்திரம் மந்திரபூர்வமாக பூதேவியின் கழுத்தில் அணிவிக்கப்பட்டது. பூதேவியின் தலைப்பக்கத்தில் அஷ்டதள பத்மத்தினுலமைந்த மண்டலத்தின்மேல் பாசுபதாஸ்திர அஸ்திரேஸ்வரி கும்பங்கள் வைக்கப்பட்டன. இவற்றிற்கு விரிவான பூசை நிகழ்ந்தபின் அதன்முன் அமைக்கப்பட்ட அஷ்டதளபத்மம் வரையப்பட்ட ஸ்தண்டிலத்தின் மேல் மண்வெட்டியை வைத்து அதனை கூர்ச்சம் மாவிலை மாலை முதலியவற்ருல் அலங்கரித்துப் பூஜை நிகழ்ந்தபின் இதற்குத் தைலம் முதலிய அபிஷேக திரவ்யங்களால் வரிசையாக அபிஷேகம் நிகழ்ந்தது. குந்தாலிக்கு பூஜை விரிவாக நடைபெற்றதும் பூதேவியிடம் அனுக்ஞை பெற்ற ஆசார்யர் முன்னுல் ஸ்தண்டிலத்தில் அஷ்டதளபத்மங் கீறி நாலு மூலைகளில் நாலு கும்பங்களையும் நடுவில் ஒரு கும்பத்தையும் அதன் இரு பக்கங்களிலும் இரு கும்பங்களையும் வைத்து இவ்வேழு கும்பங்களிலும் சப்த சமுத்திரங்களைப் பூசித்தனர். இந்த ஸ்தண்டிலத்தின்முன் தானியம் பரப்பி அஷ்டதளபத்மத்தின் நடுவில் நவதானியங்கள் இட்டு பாலால் நிரப்பப்பட்ட கும்பத்தில் சோமன் ஆவாகித்துப் பூசிக்கப்பெற்ருன். அக்னி கார்யம் நிகழ்ந்தது பாலாக்கினி பூசிக்கப்பெற்றதும் அவ்வக்கினியில் பூதேவி ஆவாகிக்கப்பட்டாள். பரிசாரகனது கையை சிவஹஸ்தமாகச் செய்து, பிரதான ஆசார்யர் அப்பரிசாரகனைக்கொண்டு ஐந்து முறைகள் பிரசாத மந்திர ஒலியுடன் மண்ணை அகழ்ந்து உரிய தட்டில் நிரப்பச் செய்தார். தட்டில் வைக்கப்பட்ட மண் பட்டினுல் மூடப்பட்டது. பிரதான ஆசார்யர் மண்ணுல் குழியை நிரப்பி தானியங்களும் பாலும் நிரம்பிய சோமகும்பத்தை அபிஷேகித்தலால் அவ்விடம் தானியங்களால் நிரம்பியதாகச் செய்தார். சப்தவாரி கும்பங்களும் அபிஷேகிக்கப்பட்டன. தியானம், பூஜை, உத்வாசனம், ஆகியன நிகழ்ந்தபின் சேமிக்கப்பட்ட மண்ணை பட்டால் மூடியவாறே பரிசாரகர் தலைமீது ஏந்திவர ஆசார்யர் வீதிவலமாக வாத்ய கோஷங்களுடன் யாகசாலையுட் பிரவேசித்தார்.

அங்குரார்ப்பணம் மிருத்சங்கிரகணத்தையடுத்து நிகழ்ந்தது. கிரியை இயற்றியவர் பிரதான ஆசார்யராவர். அங்குரமேடை யாகசாலைப் பந்தலுள்ளே யாகசாலைக்குப் புறம்பாக வாயுதிக்கு மூலையில் அமைக்கப்பட்டது. சங்கல்பம், விக்நேஸ்வர பூஜை, புண்யாகவாசனம், பஞ்சகவ்யம் முதலிய கிரியைகள் நடைபெற்றன. சோமகும்ப பூஜை பஞ்சமாவரணுந்தமாக நிகழ்ந்தது. சோமனிடம் அங்குரார்ப்பணத்திற்கு அனுஞ்ஞை பெற்றதும் அக்கினி கார்யம் பாலாக்னி பூஜைவரை நிறைவேறியது. பாலில் ஊறவைத்த ஒஷதி சூக்தத்தால் அபிமந்திரிக்கப்பட்ட நவதானியங்களை பாலாக்னியில் உற்பவித்ததாகக் கொள்ளப்பட்டு மந்திரகோஷத்துடனும் மங்கள வாத்தியங்களின் ஓசையுடனும் தானியங்களை விதைப்

ப்தாகிய பீஜாவாபனம் நடைபெற்றது. எட்டுப் பாலிகைகளிலும் தானியங்கள் விதைக்கப்பட்டன. எட்டு கடிகைகளில் தான்ய புச்சங்கள் வைக்கப்பட்டன. எட்டு சராவங்களில் உரிய மந்திரங்களுடன் நீர் நிரப்பி வைக்கப்பட்டது.

அங்குரார்ப்பணத்தின்பின் நடந்த கிரியை ரக்ஷாபந்தனம். இக்கிரியைக்காக யாக சாலைக்குப் புறம்பே வடக்கில் தனிமேடை அமைக்கப்பட்டது. வேதிகையில் நடுவில் கும்பமும் முன்னால் அக்னி குண்டமும் இடம்பெற்றன. இக்கிரியையை நிகழ்த்தியவர் பிரதான ஆசார்யராவர். சகளீகரண சாமான்யார்க்கியத்தைத் தொடக்கமாகக் கொண்டு விக்நேஸ்வரபூஜை, புண்யாகம் நடைபெற்றன. பிரதான கும்பத்தில் நாகராஜனை ஆவாகித்து ஆவரணபூஜாந்தமாக அஷ்டமஹாநாகங்களைப் பரிவாரமாகக் கொண்டு அருச்சிக்கப்பட்டது. முன்னால் உள்ள யந்திரிகையின்மீது ஸ்வர்ணரஜதரக்ஷா சூத்திரங்கள் வைக்கப்பட்டன. யந்திரிகையின் ஈசானத்தில் மஞ்சள்மாவால் மண்டலம் இடப்பட்டு அதில் சப்தகுரவர்கள் பூஜிக்கப்பட்டனர். இக்குரவர்களிடமிருந்து அனுஞ்ஞை பெற்ற பிரதான ஆசார்யர் பிரதிசர பூஜை செய்து குண்டத்தில் பாலாக்னிவரை அக்னி கார்யம் நிகழ்த்தினர் மும்முறை பஸ்ம லேபனம் நிகழ்ந்தபின் போதகாசிரியர் பிரமஸ்ரீ சி சாம்பசிவக்குருக்கள் ஆசார்யரின் மணிக்கட்டில் ஸ்வர்ணரக்ஷா சூத்திரத்தைக் கட்டினா. இதைத்தொடர்ந்து ஏனைய யாகங்களுக்குத் தலைமை தாங்கும் ஆசார்யர்களுக்கும் மூர்த்திபர்களுக்கும் இருத்துவிக்குகளுக்கும் பிரதான ஆசார்யராலே ரக்ஷாசூத்ரதாரணம் நிகழ்ந்தது.

இதைத்தொடர்ந்து பிரசன்னாபிஷேகம் பிரசன்னபூஜை ஆகியன நடைபெற்றன. மஹாமண்டலத்தில் சவிஸ்தாரமாக கடஸ்தாபனத்துக்கு வேண்டிய ஆயத்தங்கள் நிகழ்ந்தன. மந்திரரூபமாக தந்துவேஷ்டனம் முதல் நீர்நிரப்பி ஓஷதி முதலியனவற்றை உள் இட்டு கும்பம் வைத்து வஸ்திரங்களாலும், கூர்ச்சம், மாலைகளாலும் அலங்கரித்தல்வரை உரிய பல அம்சங்களோடு கடஸஜ்ஜீகரண கிரியை அவ்வவ்வேத மந்திர கோஷத்துடன் நடைபெற்றன. ஒவ்வொரு யாகத்திற்குரியவரும் இவ்வாறு தத்தம் யாககும்பங்களை இவ்வாறு நிறைவாக உருவாக்கினார்கள். முன்னைநாதசுவாமி யாகத்துக்காக நியமிக்கப்படடவர் பிரமஸ்ரீ கா. கைலாசநாதக்குருக்களாவர். வடிவாம்பிகை மூல உத்ஸவமூர்த்திக்கு கி. சுப்பிரமணியக்குருக்களும் வடிவாம்பிகை மூலவிக்கிரகத்துக்கு ச. இரகுநாதக்குருக்களும், கு. குமாரசுவாமிக்குருக்கள் பிள்ளையார் யாகத்துக்கும், இராமநாதக்குருக்கள் சுவாமி ஸ்தூபி யாகத்துக்கும், பஞ்சாக்ஷரக்குருக்கள் அம்பாள் ஸ்தூபி யாகத்துக்கும் நியமிக்கப்பட்டதற்கிணங்க அவரவர்கள் தத்தம் கடஸ்தாபனத்திற்கு வேண்டிய கிரியைகளை இயற்றினார்கள். இதைத் தொடர்ந்து அவ்வம்மூர்த்திக்குரிய கலாகர்ஷணம் விரிவாக நடைபெற்றது.

26-6-63 புதன்கிழமை காலை யாகாரம்பம் நடைபெற்றது. சுபமுகூர்த்தத்தில் ஆவாஹனம் பிம்பத்திலிருந்து கும்பத்திற்கு நடைபெற்று, வாத்ய கோஷங்களுடனும் வேதமந்திர பாராயணத்துடனும் கும்பம் வலமாக யாகசாலையுள் எடுத்துச் செல்லப்பட்டது. யாகபூஜை விரிவாக நடைபெற்றது.

கோவிலுக்கு ஈசான திக்கில் யாகசாலை சிறப்புற அமைந்து விளங்கியது. இதற்கென அமைக்கப்பட்ட மண்டபத்தினுள் ஐந்து யாகசாலைகள் நிறுவப்பட்டன. சுவாமி யாகசாலை ருத்திர சூத்திரக் கிரமப்படியும், அம்பாள் யாகசாலைகள் இரண்டும் முறையே விஷ்ணு சூத்திரப்படியும், பிரம சூத்திரப்படியும் ஏனைய ஸ்தூபி யாகசாலைகளும் பிள்ளையார் யாக சாலையும் மநுசூத்திரப்படியும் வகுத்தமைக்கப்பட்டன.

சுவாமியாகத்தில் பிராகாரங்கள் படிப்படியாக அமைந்து விளங்கின. ஒவ்வொரு பிராகாரத்திற்கும் தனி பித்தி உண்டு. ஒவ்வொரு பிராகாரத்துக்கும் எட்டுக் குண்டங்கள் வீதம் நான்கு பிராகாரங்களிலும் முப்பத்திரண்டு குண்டங்கள் இடம்பெற்றன. உட்பிராகாரத்தில் கிழக்குக்கும் ஈசானத்துக்கும் நடுவில் பிரதான குண்டம் இடம்பெற்றது. இவ்வெட்டுக் குண்டங்களிலும் மூர்த்தி மூர்த்தீஸ்வரர்கள் ஆவாகிக்கப்பட்டு ஆகுதிகளை விரிவாகப் பெற்றனர். இரண்டாம் பிராகார எட்டுக் குண்டத்தில் மூர்த்தீஸ்வரிகள் ஆவாகிக்கப்பட்டு ஆகுதி பெற்றனர். அவ்வாறே மூன்றும் பிராகார எட்டுக் குண்டங்களிலும் தத்துவ தத்வேசுவரர்களும், நான்காம் பிராகார எட்டுக் குண்டங்களிலும் தத்வேஸ்வரிகளும் உரியவாறு ஆவாகிக்கப்பட்டு ஆகுதி பெற்றனர். கலாகர்ஷணம் நிகழ்ந்ததுமுதல் ஸ்பர்சாஹுதி வரை அவ்வக் குண்டங்களுக்குப் பக்கலில் அவ்வக் கும்பங்கள் உரியவாறு வைக்கப்பட்டன.

முதல் பிராகாரத்துப் பித்தியில் அஷ்ட வித்தியேஸ்வர கும்பங்களும், இரண்டாம் பிராகாரத்துப் பித்தியில் நந்தி முதலிய கணங்களும், மூன்றும் பிராகாரத்துப் பித்தியில் இந்திரன் முதலிய பத்துத் திக்குப் பாலகர்களும் நான்காம் பிராகாரப் பித்தியில் வழமையாக யாகசாலைக்குரிய இருபத்தெட்டுக் கும்பங்களுள் இவைதவிர்ந்த ஏனைய பத்துக் கும்பங்களும் உரிய இடங்களில் இடம்பெற்றன. வேதகும்பங்கள் நான்கு துவாரங்களை அடுத்தும் யாகேஸ்

வரர் யாகேஸ்வரி ஈசானமூலையிலும் இடம்பெற்றன. இவ்யாகசாலையில் நூறு தூண்கள் விளங்கின.

விஷ்ணுசூத்திரக் கிரமப்படியமைந்த அம்பாள் (வடிவாம்பிகை) யாகசாலையில் மூன்று பிராகாரங்கள் மட்டுமே உண்டு. இங்கு அஷ்டதிக்கு பாலகர் வெளி மூன்றும் பித்தியில் இடம்பெறுவர். பிரமசூத்திரக் கிரமப்படியமைந்த வடிவாம்பிகை மூலசிலாவிக்கிரகமூர்த்தியின் யாகசாலை இரு பிராகாரங்களுடன் கூடியவை. அஷ்டவித்யேஸ்வர கும்பங்கள் தவிர்ந்த ஏனையவை இரண்டாம் பிராகார பித்தியில் இடம்பெற்றன.

பிரதிதினம் காலை மாலை ஆகிய இரு வேளைகளிலும் கிரமமாக விசேஷ சந்தி நடைபெற்றது. காலையில் 7-00 மணிக்கும் மாலை 4-00 மணிக்கும் இக்கிரியை தினந்தோறும் நடைபெற்றது. விசேஷ சந்திக்குப்பின் அனுக்கிரஹக் கிரமபூதசுத்தியும், நியாசங்களும் விஸ்தாரமான அந்தர் யஜனமும் நடைபெற்றன. கோவிலின் உட்பிராகாரத்தில் நிகழ்ந்த கிரியைகளினிறுதியில் புஷ்பங்களால் அர்ச்சித்து கற்பூர தீபாராதனையால் வழிபடப்பட்ட சிவாசார்யர்கள் வீதிவலமாகக் கொடி, குடை, முதலிய உபசாரங்களுடன் மங்கல வாத்தியங்கள் முழங்க யாகசாலைக்கு அழைத்துச்செல்லப்பட்டனர்.

